ஓம் பரப்பிரம்மணே நம :

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

“எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
 திண்ணிய ராகப் பெறின்.” (திருக்குறள்.)

கமலம்-8.	சென்னை ஸ்ரீமுகஹு கார்த்திகைமீ 1உ	இதழ் 92.
Vol. 8.	1933-ம்ஹு நவம்பர்மீ 17உ	No. 92.

ஆநந்த  தரிசனம்

“மதம் கெட்டால் பதம் கெடும்” மத நம்பிக்கையே ஒவ்வொருவரையும் ஒரு ஒழுங்கில் நிற்கும்படி கற்பித்திருக்கிறது. ஸன்மார்க்கத்திற்கு மதபோதனையைப் போன்று சிறந்தது வேறொன்றுமில்லை. மதம் என்பது ஒரு ஸ்திரீயையும் புமானையும் விவாகம் என்ற கயிற்றினால் இறுகப் பிணித்து உலகத்திற்கு அன்னோர் இயற்றவேண்டிய கடமைகளை இருவரும் மனமொத்துச் செய்யும்படி தூண்டுகிறது. இவ்விதம் தூண்டிவிட்டு மற்றோர் புறம் பெண்ணாசை மிகவும் கொடியதென்றும், காமத்தினும் மிக்க கேடு வேறில்லை யென்றும் தர்மோபதேசம் செய்வது மிகவும் வியக்கத்தக்கதாகும். இதன் உட்பொருள் என்ன? காமத்திலும் பெண்ணாசையிலும் வீழ்ந்து மயங்காமல், மயங்கி துன்மார்க்கங்களிற் செல்லாமல், காமத்தையும் பெண்ணாசையையும் இல்லற வாழ்வுக்கு எதுவரையும் ஒரு பிரதானக் கருவியாகக் கொள்ளவேண்டுமோ, அவ்வளவு வரைக்கும் நல்விஷயங்களில் பயன்படத் தக்கதான அளவுக்குமட்டும் கொண்டு, மனதைக் கெடுத்துக்கொள்ளாத வழியினில் பரிசுத்தமுடையோனாக வாழப் பார்க்கவேண்டுமென்பது கருத்து. பெண்ணாசை யென்று பழித்தது அன்னிய ஸ்திரீயினிடம் முறைகேடாகக் கொள்ளும் விருப்பத்தையே குறிக்கும். அந்த அன்னிய மங்கையையே தாயாகவும் ஸகோதரமாகவும் கொண்டு ஆசை பிடித்து அலைந்தால் அந்த ஆசை பழிப்புக்குரியதாகிறதில்லை. அந்த அன்னிய நங்கையையே தனக்கு இல்லாளாக மணமுடித்துக்கொண்டு வாழ்ந்தால் அப்போதும் அது ‘பெண்ணாசை’ என்று இகழப்படுவதில்லை. இதிலும் ஒரு எல்லையுண்டு. மனைவி மக்களையே முற்றும் நினைத்துக் கடவுளை மறப்பின், அப்பொழுது பெண்ணாசை என்பது மிக்க ஈனமுடையதாகிவிடுகிறது. இவ்விதமே காமமும் ஸத்புத்திரோற்பத்

திக்குப் பயன்படும்வரையில் பழிக்கப்படுவதில்லை. அவ்விதம் காமத்தைப் பயன்படுத்தும்போதுகூட, அவ்வித இன்பத்தை ஈந்த இறைவனிடம் சித்தம் சென்று துதி பாடியவாறு நிர்மல நிலையிலிருக்கவேண்டும். இவ்விதமின்றி, காமத்தையே ஸதா நினைத்துப் பகவானை மறந்தாலும், அந்தக் காமம் தன் மார்க்கத்தில் கொண்டு சென்றாலும்—அது பெரும் பாவமாய் முடிகிறது. இவ்வாறாக, பழிப்பிற்குரியது இன்னது, உத்தம ரீதியில் அனுஷ்டிக்கத் தக்கது இன்னது, நல்வழியிலிருந்து தவறிவிடுகையில் அதைத் திருத்திக் கொள்ளும் வழி இன்னது என்று மதமும், மதத்தின் கடமைகளும் போதித்து உலகினரைத் தர்ம வழியில் நிற்கவைத்து, அவரவரையும் தத்தம் கடமைகளைச் செய்யும்படி ஏவி, அத்துடன் பகவானையே ஸதா தியானித்தவாறு இருக்கும்படியும் வற்புறுத்தி, பாவ புண்ணியங்கட்கு அஞ்சி நடக்கும்படி அதட்டி, அதிகார முறையில் தலைமையான ஸ்தானத்திலிருந்துகொண்டு உலகை ஆளுகின்றது. அரசன் என்போன் கடவுளின் பிரதிநிதி. அதாவது, ஸர்வ மதங்களின் பிரதிநிதி. கடவுள் என்பது ஓர் ஊராகவும், மதங்கள் என்பன அவ்வூருக்குச் சென்று சேரும் பல மார்க்கங்களாகவும் இருக்கின்றன. ஹா! மதத்தின் தத்வமும், மதபோதனையும் எவ்வளவு மகத்துவமுள்ளதா யிருக்கின்றது! ஆகவே, நமது சொந்த மதத்தின்மீது விசுவாசம் கொண்டு பரம கருணாநிதியாகிய பகவானை ஸதா துதித்துப் போற்றக்கடவோம்.

ஃ

“பொன்னாலே கலம் உண்டானாலும், மண்ணாலே சுவர் வேண்டும்.” பொன்கலம் ஒன்றுமட்டும் இருந்தாற் போதுமா? தங்குவதற்கு மண் சுவர் அமைந்த வீடும் வேண்டும். அவ்விதமே மதவிசுவாசத்துடன்கூட விசாலமான புத்தியும், ஸமரஸ நோக்கும், எதையும் பகுத்தறியுந் திறமும் வேண்டும். மதவிசுவாசம் மட்டுமிருப்பின் அது சிலசமயங்களில் மதவெறி கொள்ளவும் வைக்கும்; மதச் சண்டைகளை வளர்க்கும்; பிற மததூஷணம் செய்யத் தூண்டும். விசாலமான புத்தியிருப்பின் மதவெறி, மதப்போர், பிறமத நிந்தனை இவற்றிற் புகாது காக்கும். ஸமரஸ நோக்குள்ளவர்கள் எம்மதத்திலும் உண்மை கண்டு அதற்கு மதிப்பு தருவர். எதையும் பகுத்தறியக் கூடியவர்கள் மூடபக்தியையும், மூடக் கட்டுப்பாடுகளையும், மூடநம்பிக்கைகளையும் சோதித்தறிந்து உண்மையான வழிகளைக் கண்டடைவார்கள். பண்டித ஜவஹர்லால் என்ற பெரியார் “இந்தியாவில் மதநம்பிக்கை ஓங்கியிருப்பதே பெரிய சாபக்கேடாக இருக்கிறதென்றும், மதப்பழக்கங்களும் ஸம்பிரதாயங்களும் அபிவிர்த்திக்கு இடையூறுகளாக இருக்கும் பக்ஷத்தில் அவைகளை எதிர்த்துப் போராடவேண்டுமென்றும் சொன்னார். மதநம்பிக்கை ஓங்கியிருக்கிறதென்று அவர் கூறியதில், தேச முன்னேற்றத்துக்கு யாவரும் ஒன்றுபட்டு ஐக்கியப்படுதல் முக்கியமென்பதை மறந்துவிட்டு, மதச்சச்சரவுகளிலேயே உழலுகின்ற பேதமையான தன்மையையே அவர் குறிப்பிட்டதாகும். ஒரு மதத்தினருக்குள்ளாகவே அற்ப காரணங்களால் பல பிரிவுகள் தோன்றி எத்தனையோ அல்லல்களை விளைத்து ஒருவருக்கொருவர் துவேஷிகளாய்ப் பகைக்கும்படி செய்துவிடுகின்றன. இது உண்மையான மத விசுவாசமாகுமா? இதனால் தேசத்துக்கு எவ்வளவு அனர்த்தம்? இதனையே அந்தப் பெரியார் குறிப்பிட்டதன்றி மதநம்பிக்கையைத் தாழ்த்திப் பேசிய

தன்று. சில சில மதப்பழக்கங்களும், அனுஷ்டானங்களும் ஒருவரோடொருவர் சேருதற்கின்றிப் பிரித்துவிடும் தன்மையன. அது தேச நன்மைக்குப் பாதகமாய் முடிகின்றது. ஸமுத்திர யாத்திரை செய்து திரும்பிய ஒருவர் அதைப் பாவச்செய்கை யென்று கருதிப் பாவநிவர்த்திக்கான சடங்குகளைச் செய்து தம்மைப் பரிசுத்தமாக்கிக்கொள்கிறார். ஒன்றைப் பாவம் என்று மனதாரத் தெரிந்திருந்தும் அந்தப் பாவத்தைத் துணிந்து செய்துவிட்டு, பிறகு அந்தப் பாவச் செயலின் நிவர்த்திக்காகப் பிராயச்சித்த சடங்குகளைப் புரிந்து கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுதலென்பது ஒழுங்கான முறையாகுமா? இந்தக் கேடுகெட்ட பிராயச்சித்த முறையைவிட, ஸமுத்திர யாத்திரை பாவமற்றது என்று முடிவுக்கு வருவது மேன்மையாகுமல்லவா? மதப் பழக்கங்களும் அனுஷ்டானங்களும் ஸமுத்திர யாத்திரை போன்றவற்றைத் தடுத்தாலும், தனது பகுத்தறிவையும் விசாலமான புத்தியையும் கொண்டு ஒரு நல்ல முடிவுக்கு வருவது குற்றமா? அது மத விசுவாசத்தையேனும், கடவுளிடத்திற் கொண்டுள்ள பக்தியையேனும் குறைத்துவிடுமோ? ஒருபோதுமில்லை.

ஃ

"பாலையும் நீரையும் பிரிப்பது அன்னபக்ஷிகளின் ஸ்வபாவம்." பாலிலிருந்து நீரைப் பிரித்துப் பாலைமட்டும் உண்பது அன்ன பக்ஷிகளின் இயற்கை. பாலுடன் நீர் கலந்தே காணும். மண்ணுடன் ஜலமும் சேர்ந்து நிற்கும். எள்ளுடன் எண்ணெயும் இணைந்திருக்கும். உலக வாழ்வில் ஆணும் பெண்ணும் ஒருமித்திருப்பர். பாலைமட்டும் கொள்ள விரும்புகையில் நீரைப் பிரிக்கிறோம். ஜலம் வேண்டும்போது ஆழமாகப் பூமியைத் தோண்டி மண்ணை வெளியில் எடுத்துவிடுகிறோம். மண் இல்லாத இடத்திலிருந்து ஜலம் ஊறி மண் கலவாத தனிப்பட்ட நீராக மேலுக்கு வருகிறது. எள்ளைப் பிழிந்தால் எண்ணெய் வேறாகிறது. இவ்விதமே, தனித்த பக்குவமடைந்தவன் பெண்ணாசையினின்றும் தன் மனத்தைப் பிரித்துக்கொள்ளுகிறான். இரண்டு வஸ்துக்கள் ஒன்றுக்கொன்று நெருங்கிச் சம்பந்தப்பட்டிருந்தாலும், அவை தனித்தனியாய்ப் பிரிந்துவிடுகையில் ஸத்தாகிய வஸ்துவுக்கு அதிக மகிமையும் தனி ஒளியும் ஏற்படுகின்றது. ஆதலின், நாம் உலக ஆசைகளில் சம்பந்தப்பட்டிருக்கிற அதே நேரத்தில் அவற்றினின்றும் நம்மனத்தைப் பிரித்து நின்று பற்றற்ற தன்மையினராகவேண்டும். அவ்விதம் உலகப்பற்று அற்ற நிலையிலிருக்கும்போது செய்கிற பகவத் தியானமே ஸர்வோத்தமமாகும்.

ஃ

"பகவானே பரமபிதா" நாம் அவருடைய புத்திரன் என்று சொந்தம் பாராட்டி, ஸதா பகவத் தியானத்தையே பானம் பண்ணிக்கொண்டிருந்தால் நிச்சயமாகப் பேரின்பத்தை யடையலாம். பகவான் ஒவ்வொரு இடத்திலும் வஸிப்பதால் அவருடைய இருப்பைப்பற்றி அடிக்கடி ஸ்மரிப்பவன்

'மகம்மதியர்கள்' என்பவர்களைத் தள்ளிப் பார்க்கப்புகின், கடந்த 1000—வருடங்களுள் கிருஸ்தவர்களைப்போல் கணக்கற்ற பயங்கரமான சண்டைகள் தொடுத்த மதம் பிறிதொன்றில்லை

—ஜே. டி. சண்டர் லண்ட்டு.

புத்திசாலியாகிறான். சாமான்யர்கள் ஒருவனை நண்பனென்றும், மற்றொருவனை விரோதியென்றும் சொல்வர். மஹான்கள் எல்லோரையும் நண்பர்களாக மதித்து நேசிப்பர்.

ஃ

"வெறுங்கை முழம் போடுமா?" ஒருவர்மீது பிரீதியில்லாதபோது மனம் வெறுமையாயிருக்கும். பிறர் எக்கேடு கெட்டாலும் அதை மனம் கவனியாது. உள்ளத்தில் உண்மையன்பு இருந்தால்தான் எதையும் செய்யத்தூண்டும். பூர்வத்தில் ஒருவர் வீட்டுக்கு மற்றொருவர் சென்றால் தங்கள் கையில் அகப்பட்ட வஸ்துக்களைக் கொண்டுவந்து கொடுப்பார்கள். இது அவர்கள் கொண்டிருந்த பிரீதிக்கு அடையாளமாக விளங்கும். இதற்குத் திருஷ்டாந்தமாக, திலீபராயன் தரிசனத்துக்கு இடையர்கள் வந்தபோது நெய் கொண்டுவந்தனரென்றும், கம்ஸனுடைய தர்ஸனத்துக்கு நந்தகோபன் வந்தபோது வெண்ணெய், பால், தயிர் கொண்டுவந்ததாகவும், ஸ்ரீ கிருஷ்ணனுடைய தர்ஸனத்துக்கு வந்த குசேலர் அவல் கொண்டுவந்ததாகவும், மகரிஷிகள் ராஜதர்ஸனத்துக்கு வந்தால் ஆச்ரமங்களில் விளைந்த காய்கனிகளைக் கொண்டுவந்ததாகவும் புராணப் பிரவசித்தமா யிருக்கின்றன. இக்காலத்தில் ஒருவரையொருவர் பார்க்கச் செல்லும்போது பழங்களைக் கொடுக்கின்றனர். எலுமிச்சம்பழம் மனோகரமான வர்ணமாயும், ரமணீயமாயும், ஸர்வத்ர உபயோகமாயு மிருப்பதால் அதைக் கொடுத்துக் கண்டுகொள்வோர் பலர். நவநாகரீகம் பெற்ற சிலர் வெறுங் கையுடன் காண்பதே கௌரவமாய் நினைக்கின்றனர். பகவான் தமது தர்ஸனத்துக்கு வருவோரிடம் எதையும் எதிர்பாராமல் அன்னாரது மனத்தூய்மையையும், திடமான பக்தியையுமே அபேக்ஷிக்கின்றார். ஒருவரைக் காண்கையிலோ, பகவத் தர்ஸனத்துக்குச் செல்லுகையிலோ உடன் ஏதேனும் கொண்டுபோவது அவரவரது மனத்துள்ளிருக்கும் அன்புக்குத் தக்கபடி நிகழும். வெறுமையான மனம் எதனையும் கொண்டுபோகாது. ஆனால், மிக்க அன்பு இருப்பதுபோல்மட்டும் நடித்துப் பாசாங்கு காட்டும். இந்த வெறுங்கையாளரின் கபடத்தைச் சிறு குழந்தைகளும் அறிந்துகொண்டு சிரித்துப் பரிகசிப்பர்.

ஃ

"பயமும் நயமும்" பயத்தோடு பக்தி செய்வதும், நயத்தோடு யுக்தியைக் காட்டுவதும் புத்திசாலிகளின் இயற்கை. மனிதவர்க்கம் மிருக ஸமூகங்களை விட அறிவுள்ளது. அறிவை விருத்தி செய்யாமல் மூடத்தனத்தை மேற்கொண்டு கேவலம் மிருகங்களைப்போல் பசி, காமம் இரண்டில் மட்டுமே சிந்தையைச் செலுத்தித் தீயவழியில் பிரவேசித்து மனுஷ்ய ரூபத்தை அவமதிக்கின்றனர். இதைவிட மிருக ரூபிகளாய்ப் பிறப்பது நன்று. தெய்வ பக்தியைப் பயத்தோடு செய்யாதவரையிலும் மனிதனுக்கு ஸுகமுண்டாகாது. எங்கும் இனிய சொல்லே இன்பம் தரும். பயபக்தி விசுவாசங்கள் மனம் அடைந்துள்ள பக்குவத்தை வெளியில் குறிப்பிட்டுக் காட்டுவனவாகும். உண்மையான பக்தியை ஈசுவரனிடம் செலுத்தினால் நிலையான சுகம் நம்மை நாடிவரும். இந்தக் கார்த்திகை மாதத்தில் பகவான் தம்மைத் தனிப்பட்ட அக்கினி ஜ்வாலையுடனும் ஜோதிர்மயமாய்க் காட்டிக்கொள்கிறார். விறகு கட்டைகள்போன்ற நாமும் நம்மிடம் பகவத் அக்கினி மறைந்திருப்பதை யுணர்ந்து, பெரிய அக்கினி ஜோதியோடு ஜகஜ்ஜோதியாய்ச் சேருதற்கு அப்பரம்பொருளைத் தியானித்துத் துதிக்கக்கடவோம்.

அமிர்தகுணபோதினி

ஸ்ரீமுக ஹு கார்த்திகைமூ 1வ

நமது வாழ்வின் துறையிலே சத்ய வழி.

ஆத்ம சக்திக்கு அதிக வலிமை யூட்டுவது ஆத்மப் பரிசுத்தமாகும். ஆத்ம பரிசுத்தத்துக்கு, சத்யத்தை உணர்ந்தொழுகும் வழிதான் தக்கது. உபவாசமும் பிரார்த்தனையும் சத்யத்தை இன்னும் திடமும் உறுதியு முள்ளதாக்குகின்றன. மனத்தில் சத்ய நல்லுணர்ச்சியில்லாமல் உபவாசமிருந்து உடலை வாட்டிக் கொள்வதால் மட்டும் பயனில்லை. ஆத்ம உணர்ச்சியுடன் சத்தியத்தை வெளிப்படுத்தக்கூடிய உபவாசமாக அது இருக்கவேண்டும். சத்ய உணர்ச்சியுடையவன் எந்தச் சோதனையிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ளுதல் கூடும். எத்துணை ஆத்திர சமயத்திலும் அவன் அடக்கமுடையவனாகத் தன்னை ஆக்கிக் கொள்ளமுடியும். சத்யத்தை வாழ்வில் கடைபிடித்தொழுகுவதற்காக, அந்த சத்தியத்தின் உண்மையான தன்மையைக் கண்டுபிடித்துத் தெளிய முயற்சி செய்யவேண்டும். ஒவ்வொருவருக்கும் சத்யமே லட்சியமாக இருக்கவேண்டும். சத்யமென்பது அன்றாட வாழ்வுக்குப் புறம்பானதொன்றல்ல; வாழ்வின் சுபாவங்களுக்கு அப்புறப்பட்டதுமல்ல. வாழ்வோடு ஒட்டியே அந்த சத்யமும் வளர்ந்து உறுதிப்படுவதாகும். வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் நாம் அந்த சத்யத்தைக் கடைபிடித் தொழுகவேண்டும்.

ஃ

பிறருடைய அனுபவங்களை நமது வாழ்வுக்குப் பரம ஸஞ்சீவி மருந்தென்று போதிக்கப்படும்போது, அவற்றை நாம் அப்படியே நம்பிவிட வொண்ணாது. நமது சத்ய உள்ளத்தைக்கொண்டு அந்தப் பிறரது அனுபவங்கள் நமது வாழ்வுக்குப் பொருந்தியவைகளாவென்றும், அந்தப் பிறரது அனுபவங்களைவிட, நமது அனுபவங்கள் இளைத்துப் போயிற்றாவென்றும் நுட்பமாய் ஆராய்ந்தறியவேண்டும். உதாரணமாக, சமுதாய வாழ்வு, தொழில் செய்தல், விவ

'சம்பூர்ணம்' என்பது சாஸ்திரம், கலை, அல்லது அரசாங்கம் எனும் இவைகளுக்கு உண்டு. ஆனால் 'மதம்' என்பதற்கில்லை.

—ஜே. டி, சண்டர் லண்ட்டு.

சாயம் செய்தல் முதலிய துறைகளிலெல்லாம் மேனாட்டார் கண்டு பிடித்துள்ள அநுஷ்டானங்களுக்கும், கீழ் நாட்டாராகிய நம்மவரின் பரம்பரை வழக்கங்களுக்கும் முரண்பாடு அதிகரித்து நிற்கின்றன. மேனாட்டார் ஒன்றைச் சிலாக்கியமாகச் சொல்லும்பொழுது நாம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டுவிடுவதா என்பது கேள்வி. மேனாட்டாரின் அபிப்பிராயங்கள் சில சொற்கள் மூலம் நமக்கு வருகின்றன. அந்தச் சொற்கள் நம்மை வசப்படுத்தியும் விடுகின்றன. ஆயினும், மயங்கிப் போகாமல் அந்தக் கருத்துகள் நமக்குப் பொருந்துமா என்பதை இந்த இடத்தில் நமது சத்ய உள்ளத்தைக் கொண்டு ஆழ்ந்து யோசனை புரிந்து பரிசிலனை செய்யவேண்டும். நாம் நல்வழிப்படுவதற்கு எதிலும் மயங்காத எச்சரிக்கை நமக்கு அவசியமாக இருக்கவேண்டும்.

ஃ

மேனாட்டார் ஒருவர் நம்மிடம் ஏதோ தோஷ மிருப்பதாகச் சொல்லிவிடின் உடனே நம்மவர்களிற் பலர் அந்தத் தோஷத்தை ஒப்புக்கொண்டு வெட்கப்படத் தொடங்கி விடுகிறார்கள். தக்ஷணமே மேனாட்டு வழக்கத்தை அனுஷ்டிக்கப் புறப்பட்டு விடுகிறார்கள்! அவர்கள் எடுத்துக் காட்டிய தோஷம் உண்மையாகவே தோஷம் தானா என்று தமது சத்திய உள்ளத்தைக்கொண்டு சோதனை செய்து பார்ப்பதில்லை. எதையும் அப்படியே நம்பிவிடுகிறவன் உண்மையை யறிய மாட்டான். இருட்டிலேதான் அவன் கிடப்பான். “நீங்கள் பெண்களைத் தாழ்வாக நடத்துகிறீர்கள்” என்று ஒரு அன்னிய நாட்டினர் கூறினால், நம்மவர்களும் அதை ஆம் என்று ஏற்றுக் கொண்டு, மறு நிமிஷத்தில் அன்னிய தேச நடை உடைபாவனைகளில் பழகிக்கொள்ள முற்படுகிறார்கள். பெண்களை நாம் நடத்தி வரும் முறைகளிலுள்ள நன்மையையும், அன்னிய தேச ஸ்திரிகளுடைய விசேஷ சுதந்தரப் பிரியத்தின் அலங்கோலங்களையும் நமது சத்திய உள்ளத்தைக்கொண்டு ஆராய்ந்து நல்லறிவு பெற்றுக்கொள்கிறோமில்லை. எந்த இரண்டு மனிதர்களும் ஒன்று போலில்லை; எந்த இரண்டு ஊரும் ஒன்று போலில்லை. எந்த இரண்டு தேசங்களும் ஒன்று போலில்லை. இதர தேசங்களில் வேறு நிலைமைகளில் அனுஷ்டானத்தில் வந்திருக்கிற பழக்க வழக்கங்கள் நமது தேசத்துக்குப் பொருந்துமா?—நமது தேசத்தின் தேவையைத் திருப்தி செய்யுமா?— என்று யோசிக்காமல் அவைகளைக் கைக்கொண்டு விடக்கூடாது. இந்த எச்சரிக்கை மிக முக்கியமானது. எவர் என்ன சொன்னபோதிலும், தன்னோடு அதையும் வைத்து ஒத்

“நக்குகிற நாய்க்கு செக்கென்றும் சிவலிங்கமென்றும் தெரியாது.’ அதுபோல் துஷ்டர்கட்கு நல்லவர் கெட்டவர் என்ற வித்யாஸம் தெரியாது. எல்லோரிடமும் துவேஷம் கொள்வர்.

துப் பார்த்துத் தன்னதில் யதார்த்த ஸ்வரூபமான சத்யத்தைக்கண்டு பிடிக்கப் பாடு படவேண்டும். அவ்விதம் கண்டறிந்து தனது ஸம்பிரதாயங்களிலுள்ள மேன்மையைத் தெரிந்துகொண்டு, பிறர் விசேஷித்துச் சொன்னதிலுள்ள கெடுதல்களையும் ஆராய்ந்து வெளிப்படுத்தி விடவேண்டும். இவ்வளவு விழிப்புடன் நாம் இருப்பின், ஏமாற்றுச் சொல் உரைக்கவோ, இழிவாகப் பேசவோ எவரும் நம்மிடம் நெருங்கார்.

ஃ

ஒருவன் உன் மதத்தைப்பற்றிப் பழிப்புகள் செய்கிறான். அதை நீ நம்பி விடுவதா? பழித்தவனின் மதமும், அவன் காரியங்களும் எத்தனைச் சீர்கேட்டிலுள்ள தென்பதை உனது சத்திய உள்ளத்தைக்கொண்டு சோதித்துணர்ந்திடு. அத்துடன், உன் மதத்தின்மீது கூறிய தோஷங்களையும் ஆராய்ந்து, அதன் உண்மைத் தத்துவங்களைப் பெரியோர்களின் வாயிலாக அறிந்து தெளிவு பெற்றுக்கொள். இன்னொருவன் ஓயாது தூஷிக்கும் வண்ணமாயுள்ளான். எப்போதோ ஒரு தரம் ஏசுபவனுக்கு உத்தாம் கூறலாம்; என்றுமே நிந்தை செய்வோனுக்குப் பதில் தருவதில்லை யென்ற முடிவுக்கு வந்துவிடு. ஒருவன் எல்லோராலும் வெறுக்கப்படுகிறவனா யிருக்கலாம். ஆனால், அவன் உண்மையில் நிரபராதியா யிருக்கிறான். வேறொருவன் யாவராலும் விரும்பப்பட்டு நியாயந்தவறாதவனாகக் காணப்படுகிறான். ஆனால், அந்தரங்கத்தில் படுபாவியா யிருக்கிறான். இவ்விரு சார்பினரையும் உன் சத்திய உள்ளத்தால் ஆழங்கண்டு யதார்த்தத்தைக் கிரகித்துக்கொள். எதையும் வெளிப் பார்வையைக்கொண்டு உத்கிருஷ்டமானதென்று மதித்து விடாதே. உன்னை நேரில் புகழ்ந்து துதி பாடுவோன், அந்தரங்கத்தில் உன்மீது பல குறைகளை ஏற்றி நிந்தை புரிபவனாயிருக்கலாம். அதை நீ கவனியாமல், சத்திய உள்ளத்துடன் உன்னால் முடிந்த உதவியை மட்டும் அவனுக்குச் செய்து விட்டு, அவ்வளவில் திருப்திபடப் பார்.

ஃ

வீட்டிற்குள்ளும், வீட்டிற்கு வெளியிலும் எத்தனையோ ஸம்பவங்கள் நடக்கும். உன்னை மிகவும் ஹிம்ஸைப்படுத்துவதாகவும் இருக்கும். அவற்றை யெல்லாம் சத்ய ஹிருதயத்தோடும் சகித்து, உன் கடமையைப் பகவானுக்குப் பிரீதியாகச் செய்து கொண்டு செல். கொடுக்கல், வாங்கல், எல்லாவற்றிலும் நீ தூய்மை

ஒருவர்மீது கோபித்துக்கொண்டு த்வேஷமாயிருப்போர், அந்த ஒருவர் ஊரிலில்லாதபோது அந்தரங்கமாய் அவரது வீட்டிற்குச் சென்று புசித்து மகிழ்ந்து திரும்புகிறார்கள். இங்ஙனமாக ஒருவரை விரோதித்துக்கொண்டு மற்றவர்களிடம் பக்ஷம் பாராட்டுதல் குள்ளநரிகளின் தந்திரமாகும். பிரித்து வைத்து லாபம் அடைகிற மித்திரபேத தந்திரமுமாகும்.

யுடையோனுகி சத்தியவந்தனு யிருந்துகொள். ஒவ்வொரு தினத்தையும் சத்திய வழியில் உபயோகித்து, நீ சத்தியத்தின் உருவமாக—ஜோதியாக ஆகிவிடு. கார்த்திகை தீபம் என்பது சத்யத்தின் உன்னதப் பிரகாசமேயாகும். பகவான் அந்த சத்தியப்பிரகாசத்தை அன்புடன் நோக்குகின்ருர். அந்தப் பிரகாச ஜோதியினுள்ளே இறைவன் புகுந்து கலந்து ஒளிர்கின்ருர். கார்த்திகை தீபத்தன்று இல்லங்கள்தோறும் ஏற்றப்படுகிற விளக்குகள், அந்தந்த இல்லங்களின் சத்யப் பிரகாசத்தை வெளிக்குத் தோற்றுவிக்கும் அறிகுறியாம். தத்தம் ஹிருதயங்களில் சத்யப் பிரகாஸமின்றி, வெறுமனே தங்களின் வீடுகளில் விளக்குகளை மட்டும் ஏற்றுவதால் பயனில்லை.

ஃ

பிரபஞ்சமெங்கணும் சத்யத்தின் அலைகள் வீசுகின்றன. பிரபஞ்சமே சத்யத்தில் தான் நிலைபெற்றுள்ளது. காலையில் கதிரவன் கீழ் திசையில் தோன்றுவதும், இரவில் சந்திரன் உதயமாவதும், அவ்வப் பருவகாலங்களில் காற்று, மழை, உஷ்ணம், குளிர் இவைகள் மிகுந்து காண்பதும், குறித்த மாதங்களில் ஆங்காங்குள்ள ஜீவநதிகள் தவருது பிரவகித்துச் செல்வதும் இவைபோன்றன யாவும் அதது அந்தந்த சத்யத்தின் எல்லைக்குள் அமர்ந்து நடைபெறுவதைக் குறிக்கின்றன. சத்ய தேவதை எதிரில் நின்றுங்கூட அதனைத் தெரிந்து பின்பற்றுதற்கில்லாத மனிதர்கள் எவ்வளவு துர்ப்பாக்கியசாலிகள்? ஒரு புதிய ஊரின் அடுத்த தெருவில் தன் பிரிய குமாரன் வந்திருப்பதைத் தந்தையும், தந்தை வந்திருப்பதைக் குமாரனும் அறியாது போகின்ருர்கள். ரயிலிற் பிரயாணம் செய்யும் ஒருவர் அதே வண்டியில் தனது ஆப்த நண்பனும் வந்து கொண்டிருப்பதையறிய முடிகிறதில்லை. தன் விவாக நிமித்தம் கிராமத்திலுள்ள பந்துக்களுக்குத் தெரிவித்து விட்டு, அந்தக் கிராம ஸ்டேஷனில் ரயில் ஏறிய இளைஞன், தான் உட்காரப்போகும் இடத்திலுள்ள பெண்மணியே தனது கல்யாணப் பெண்ணுய் அவ்வண்டியிற் செல்கிருளென்பதை அறியாதவனுகிருன். அவனை முன்பு தெரிந்தவர்கள் மற்ருெரு வண்டியில் இருப்பதால் விவாக நங்கையும் அவனே மணமகன் என்பதைத் தெரிந்திட இயலாதவளாகின்ருள். தம் ஊரிலே கோயில் இருந்தும் அங்கு சென்று பரவசம் பெறத் தெரியாதவர்கள் எத்தனை பேர்கள்! எவ்வளவோ செல்வமிருந்தும் அனுபவிக்காமலே மரிப்போருக்குக் கணக்குண்டா? அதுபோன்றே, சத்யத்தின் அலைகள் பிரபஞ்ச முற்றும் வீசியபோதிலும் அதைத் தெரிந்து கைக்கொள்ளாதாரும் எண்ணற்றவரேயாவர்.

கண்ணில் கண்டது கோடியானுலும் குறையற அப்படியப்படியே படம் பிடித்ததுபோல் எழுதித் தெரிவிப்பது இலேசல்ல.

They starve in midst of nature's bounty curst,
And in the loaded vineyard die of thirst.

"தெய்வம் குறைவின்றித் தந்திருக்க, பசியாற்றிக் கொள்ளவும் கொடிமுந்திரி குலுங்கப் பழுத்திருக்க, அதன் அடியிலிருந்தும் தாகம் தீர்த்துக்கொள்ள மாட்டாமல் மனிதர் அநியாயமாக மடிகிருர்கள்." சத்யமும் ஞானமும் ஒவ்வொரு வீட்டின் கதவையும் நாடி வந்து தட்டுகின்றன. ஆனுல், அதனை அறிந்து கொள்கிறதில்லை. சத்திய வழியைத் தெரிந்துகொள்ள மனமுண்டானுல் இடமுமுண்டு. ஒன்றைச் செய்யும்படி பலமாய்ச் சித்தம் செய்து கொள்பவன் அதைச் செய்கிறதற்கு உபாயத்தையும் தேடிக்கொள்வான். சத்ய வழியில் பிரயாசைப்படுகிறதில் பிரயோஜனமில்லையென்று சொல்லுகிற கோழை நெஞ்சர் தவறியே போவார்கள். காரிய சித்திக்குப் பிரயாசை அவசியம். தன்முயற்சியே மகா பிரயோஜனம். குணசீலமே பெலன். கடமையே வழிகாட்டி.

ஃ

பிணி போக்கிட உண்ணும் மருந்தின் பத்தியத்திலுங்கூடச் சத்யம் வேண்டும். பத்தியம் தவறிவிடின் மருந்து குணம் செய்யாது. குணத்திற்குப் பதிலாகக் கெடுதியும் விளைக்கும். அவ்விதமே, நட்பு, காதல், உறவு, உபசரிப்பு, பக்தி, அன்பு, அன்னியோன்னியம் இவற்றுள்ளும் சத்யம் நிலவியோங்கிடின்தான் அதது நெடுநாள் நீடித்துப் பரிசுத்தப் பிரபையோடும் மணம் பெற்று விளங்கும். சத்தியத்தை ஒரு வீரஉறுதி யென்றும் அழைக்கலாம். நன்றியுணர்தலென்பது சத்யத்தின் ஓர் பகுதியேதான். இல்வாழ்க்கை தூய்மையுடன் நன்கு நடைபெறுதற்கும் ஸதிபதிகளுக்குள் சத்யம் இருந்தால் தான் முடியும். சத்யமின்றி உலகமேயில்லை. சத்யத்தைப் பின்பற்றி, சத்ய வாழ்வில் வாழத்தெரியாதவனுக்கு உலகமே நஞ்சாகத்தான் தோன்றும். அவனது வாழ்வு வஞ்சகச்சேறு நிறைந்ததாகவும், விஷம வாழ்வாகவும், கேடுகெட்ட நீச ஜீவியமாகவுமே முடிந்து தொலைந்து நாறும்.

ஃ

சத்ய ஞான ஹிருதயமுள்ளவன்தான் சரியாயும் உறுதியாயும் வாழத்தெரிந்து கொள்ளுவான். சத்ய வழியில் நிற்பவனுக்கு எங்குமே பகைமையில்லை. எவனுக்குப் பகைமை யில்லையோ அவனுக்கேதான் வாழத் தெரியும். தன்னைப்போல் பிறனையும் சத்ய

தமயன் உயிருடன் இருக்கிறவரையிலும் தம்பி நல்லவனே. தமயன் தன் சொத்துகளுக்குச் சரியான ஏற்பாடுகள் செய்யாமல் திடீரென மரிப்பின், தம்பியோ தமயனின் குடும்பத்திற்குப் பரமவிரோதியாய் அகப்பட்டவற்றை யெல்லாம் சுற்றிக்கொண்டு போகப் பிரயத்தனப்படுகிறுன்.

உருவமாக நினைப்பவனுக்குப் பகைமை எங்கிருக்கும்? ஏன் இருக்கும்? சத்யவழி கண்டுணர்ந்தவன் அன்பின் வடிவமாக விளங்குவான். எவனுக்குப் பிறரிடம் அன்பு மிதமிஞ்சித் ததும்புகின்றதோ, அவனுக்கு உலக முழுவதுமே சொந்த சொத்து. குழந்தைக்காகத் தாய் உயிர் விடுவதும், குமாரனுக்காகத் தந்தை ஆவி பிரிவதும் நடக்கவில்லையா? ஏன் அவ்விதம்?—அது அன்பால். சத்யத்தைக் கண்டறிந்தவனுக்கு அன்புக்காகச் சாகவும் தெரியும். பிறர்மீது கொண்ட அன்புக்காகச் சாகத்துணிந்தவனுக்கே ஞான உதயம் ஆகும். தாய்—குழந்தை, குமாரன்—தந்தை, சத்ய உள்ளத்தினன், அவன் முன்பு எதிர்ப்படும் உலகம்—இவ்வாறாக இவ்விரண்டிரண்டு உயிர்களையும் ஆட்டிவைக்கும் சத்ய அன்பின் உணர்ச்சிதான்—முதலில் இல்லறவடிவமாய் வீடாகவும், இடையில் ஊராகவும், இறுதியில் நாடாகவும், முடிவில் உலகமாகவும் பரிணமிக்கலானது.

ஃ

சத்யவாழ்வின் உணர்ச்சியையும் போக்கையும் கண்டுகொண்டு, அவைகளில் படிந்துள்ள மாசுகளைக் களைந்து, ஒளியையும் வலிமையையும் கைக்கொள்வதே சத்யத்தைக் கண்டறிந்தவனின் நோக்கமாக இருக்கும். கோழைத்தனத்தால் பயப்படுவோனைப் போய் விடாமல் பற்றிக்கொண்டே நிற்கும். அவனுக்குக் கயிறு பாம்பாகவும், கட்டை கள்வனாகவும் தோற்றும். சத்யம் தாங்கியவனே தைரியவான். ஒருவரைக் காணுதல் என்றால், அவருடன் ஈடுபடுதல் என்று அருத்தம். கடவுள் சத்யஸ்வரூபி. அவரைக் காணுதல்—அடைதல் எவ்வாறு? சத்ய ஒளியின் துணைகொண்டே இறைவனைக் காணுதல் வேண்டும். அதுதான் காணும்வழி. ஆகவே, நம் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் சத்யவழியைப் பின்பற்றி, மற்றவர் மயக்கில் வீழாமல், வீழ்ந்து கெடாமல் வகையை அறிந்து தெளிந்து நடக்கக்கடவோம்.

ஃ

எத்தனையோ குறைகள் பிறர் எடுத்துரைத்துப்
 பழித்தாலும், என்றும் சோர்வு
சித்தமதில் கொள்ளாது, "செப்பின மெய்யோ?"
 என்று சிந்தித்தே, தம்
உத்தம சத்தியவழியை ஒவ்வொருநல்
 துறையிலுமே உன்னுவோர், நல்
சத்திய சன்மார்க்கமது தனில், தக்க
 பக்குவராய்ச் சார்வர் தாமே.

நாகானந்தம்

(413-ம் பக்கத் தொடர்ச்சி.)

நமது கதாநாயகனும், விதூஷகனும் மலயவதி கௌரியின் முன்பு மேற்குறித்த பாட்டைப் பாடிக்கொண்டிருக்கும்போதே, தெய்வச்செயலாய், அவளுடைய பாட்டின் இனிமையால் மதிமயங்கி அவ்விடத்தை நாடினர். முன் கூறியபடி புதரில் மறைந்திருந்த அவ்விருவரும் பின்பு நடந்த சம்பாஷணைகளைக் கேட்டிருந்தனர். ஜீமூதவாகனன் அவள் பாடிய பாட்டைக் கேட்டு "ஆகா! என்ன பாட்டு!! என்ன வாத்தியம்!!! இப்பாட்டின் அழகே அழகு!!!!" எனப் புகழ்ந்தான். விதூஷகன் "இவள் கன்னிகைதானே. ஆதலின், உட்சென்று இவளைப் பார்க்கலாம்" என்றான். இராஜகுமாரன் "தோஷமென்ன? கன்னிகைகளைப் பார்ப்பதால் யாதொரு தோஷமுமில்லை. ஆனால் நம்மைப்பார்த்து வெட்கத்தினால் இவ்விடத்தைவிட்டு அவள் அவசரமாகப் போய்விடவுங் கூடும். ஆதலின் இப்புதரிலேயே ஒளிந்திருந்து பார்ப்போம்" என்றனன். விதூஷகன் "அப்படியே செய்வோம். அதோ பார்! இவள் வீணை வாசிப்பதுதான் அழகு என்பது அல்ல. அதற்குத் தகுந்த மேனியழகும் இவளுக்கு இருப்பதைப் பார். இவள் யார்? தேவமங்கையோ? நாககன்னிகையோ? வித்தியாதரியோ? ஸித்தகுலத்திற் பிறந்தவளோ?" என மொழிந்து அரசகுமாரனுடைய மனதைக் கலக்கினான். அதைச் செவியுற்ற இராஜகுமாரன் "தேவமங்கையாயிருந்தால் இந்திரன் தான் நூறு கண்களைப் பெற்றதின் பயனையடைந்தான். நாககன்னிகையாகில் இவள் முகம் இருக்கும் வரையில் ரஸாதலத்தில் சந்திரனில்லையெனச் சொல்லலாகாது. இவள் வித்தியாதரியாகில் உலகத்திலுள்ள எல்லா ஜாதிகளையும் நம்முடைய ஜாதி ஜயித்ததென்றே கூறவேண்டும். ஸித்தவம்சத்திற் பிறந்தவளாகில் இவளால் மூன்று லோகத்திலும் ஸித்தர்கள் பிரசித்தி பெறுவார்கள்" என்றான். "வெகு நாட்களுக்குப்பின் இவன் மன்மதனுடைய வலையிற் சிக்கினான். அன்று! அன்று! அந்தணனாகிய என் வலையில்தான் சிக்கினான்" எனச் சந்தோஷித்த விதூஷகன் "தோழ! தேவியைத் தரிசிக்க நமக்கு இதுவே சமயம். வா; போகலாம்" என்று சொல்ல, ஜீமூதவாகனன் "இப்போது வேண்டாம்" என்றான். ஆயினும் விதூஷகன் அவனைப் பலாத்காரமாகப் பிடித்து அழைத்துக்கொண்டே கோயிலுட் சென்றான்.

இவர்களைப் பார்த்தவுடனே மலயவதி பரபரப்புடன் எழுந்து, ஒரு பக்கத்தில் நின்று "இவர் யார்! இவர் யார்!!" என்று கூவினாள்: உடனே சதுரிகை அவ்வதிதிகளை வரவேற்று, ஆஸனத்திலுட்காருவித்தாள்.

ஃ

மலயவதியின் குலகுருவாகிய கௌசிகர் தன் சிஷ்யர்களிலொருவரை யழைத்து "சாண்டில்ய! தந்தையின் உத்தரவுபடி மித்ராவஸு இம்மலய பர்வதத்தில் வந்திருக்கும் ஜீமூதவாகனனை யழைத்துவரச் சென்றிருக்கிறான். அவன் வருமள

வும் மலயவதி காத்திருந்தால் மத்தியான்னஸவனத்துக்குக் காலதாமதமாகிவிடும். ஆகலின் உடனே அவளை இங்கு அழைத்துவா" என்று உத்தரவிட, அத்தாபசர் மலயவதியையழைத்துப்போகக் கோயிலை நோக்கி வந்தார். கோயிலின் வாயிலில் புருஷனுடைய காலடியைக்கண்டு, 'சக்ரம் முதலிய சுபசின்னங்களையுடைய இக்காலடிகள் யாருடையதாக யிருக்கலாம்?' என்று சந்தேகித்துக் கொண்டே தாபசர் கோயிலுட் சென்றார்.

அங்கு ஜீமூதவாகனனை நோக்கிய சாண்டில்யர் "ஆ! தாமரைப் போன்ற கண்களும், விஷ்ணு பகவானைப்போன்ற அகன்ற மார்பும், சக்கரத்தின் அடையாளமுடைய கால்களும் வாய்ந்த இம்மகா புருஷனே ஜீமூதவாகனனா யிருக்கவேண்டும். இவன் நம்முடைய இராஜபுத்திரியை மணந்துகொள்வது தகுதியே" என யோசித்து, அவனை ஆசீர்வதித்தார். இராஜகுமாரனும் அவரை வணங்க, தாபசர் "அதிதியாகிய உமக்கு நான் சத்காரம் செய்யவேண்டியிருக்க, நீர் என்னை வணங்குவது தகுதியன்று" என்று கூறி அவனை மறுபடியும் உட்காருவித்தார். பின்பு மலயவதியைப் பார்த்து, "குழந்தாய்! உனக்குத் தகுந்த மணாளனைப் பெறுவாயாக." என ஆசீர்வதித்தபின் "கௌசிகர் மத்தியான்ன ஸவனத்துக்காக உன்னை அழைத்துவரும்படி என்னையனுப்பியிருக்கின்றார். ஆதலின் சீக்கிரம் புறப்படு" என்றார் தாபசர்.

மலயவதியோ ஒருபுறம் தன் காதலனாகிய ஜீமூதவாகனனைக்கண்டு ஆனந்தித்தாள்; மற்றொருபுறம் குருவின் உத்தரவுபடி கோயிலிலிருந்து புறப்பட்டுப் போகவேண்டுமே என வருந்தினாள். இதுவே திரிசங்குஸ்வர்க்கம் என்பது. ஆயினும் கடைசியில் தன் மனதை ஒருவாறு தேற்றி, ஜீமூதவாகனனைக் கடைக்கண்ணால் நோக்கியவண்ணம் கோயிலிலிருந்து புறப்பட்டு மலயவதி தாபஸருடன் சென்றாள்.

3. சந்தனலதாகிருகம் விவாகம்.

இன்று அரண்மனைத் தோட்டத்தில் மலயவதி பூக்கொய்துகொண்டிருக்கிறாள். அவளுடைய கமலம் போன்ற முகம் இன்று வாடியிருக்கிறது. அன்று ஜீமூதவாகனனுடைய சந்திரமண்டலம்போன்ற முகத்தைக் கண்ட கணம் முதல் அவளுடைய முக கமலம் வாடியது தகுதியேயன்றோ? அவளைச்சுற்றி சதுரிகையும், பல சேடிகளும் பூப்பறித்துக் கொண்டு அவளுக்குத் துணையாக நிற்கின்றனர்.

சிறிதுநேரம் மலர்களைக் கொய்த பின் மலயவதியின் கை தளர்ச்சியடைந்தது. அவளால் அங்கு நிற்கவும் கூடவில்லை. உடனே அவள் சதுரிகையைப் பார்த்து, "தோழி! என்னால் மலர்களைக்கொய்ய முடியவில்லை. கோடைகாலத்து வெயிலைவிட என் சரீரம் அதிகமாகத் தபித்

உலகத்தில் பிரசித்திபெற்ற புருஷர்களானாலும், ஸ்திரீகளானாலும்' அவரவர்களுடைய ஒழுக்க வழக்கங்கள், இளமையிலும், வெகுவாக வாழ்நாள் முழுமையுமே கூடி வாழ்கிற மற்றொருவருடைய ஒழுக்க வழக்கங்களினின்றுந்தான் உருப்பட்டு விளங்குகின்றன. இப்படிப் பூவும் மணமும்போல் ஒருவருடைய குணகுணங்கள் மற்றொருவருடைய குணகுணங்களால் உருவமைகின்ற சம்பவங்களே அதிகம்.

திருக்கிறது. ஆதலின் நீ உடனே இளம் வாழையிலைகளாலும், சந்தனக் கொடிகளாலும், சந்திரகாந்தக் கற்களினாலும் ஓர் சிறிய லதாகிருகம் அமைத்துவா" என்று கட்டளையிட்டாள். இராஜகுமாரியின் ஸந்தாப காரணத்தை ஏற்கனவே நன்கறிந்திருந்த சதுரிகை, ஓர் சந்தன லதா கிருகமமைக்கச் செய்தபின், மலயவதியை அங்கு வரும்படி வேண்டினாள்.

சோலையிலிருந்து லதாகிருகத்துக்குத் திரும்பிய மலயவதியின் மனதில் பல எண்ணங்களுதிக்கலாயின. அவள் தன் மனதுக்குள்ளேயே "ஓ கொடிய மனதே! நீ என் அவரைப் பார்க்க விரும்புகிறாய்? ஓ மன்மதனே! உன்னை அழகில் ஜயித்த அம் மகானுபாவனைவிட்டு, நிரபராதியும் அபலையுமாகிய என்னை உன் பாணங்களால் அடித்து நீ வெட்கமடையவில்லையா?" எனப் பலவாறு நினைத்துக்கொண்டே சென்றாள். காதலனைக் காணவேண்டு மென்னும் அவாவின் மிகுதியால் கோயில் வழியாகத் திரும்பிய மலயவதியைச் சதுரிகை லதா கிருகத்தின் வழியே அழைத்துச் சென்றாள்.

லதா கிருகத்தை யடைந்த பின்னும் மலயவதியின் தாபம் நீங்கவில்லை. அடர்ந்த சந்தனக்கொடிகள் சூரிய கிரணங்களை மறைத்திருந்தும், சுற்றிலும் குளிர்ந்த இளம் வாழையிலைகள் கட்டப்பட்டிருந்தும், பனியைவிட சீதலமான சந்திரகாந்தக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தும் அவளுடைய சந்தாபம் அடங்கவில்லை. இதன் காரணத்தை அறிந்திருந்த சதுரிகை "இராஜகுமாரி! உன் சந்தாபத்தின் காரணம் எனக்குத் தெரியும். இப்போது உன் இதயத்திலிருக்கும் காதலனையே கௌரிதேவி உனக்குக் கணவனாக அளித்திருக்கிறாள். அன்றியும், புஷ்பபாணனைப் போன்ற உன் கண்ணாளனை நீ கண்ணாரக் கண்டும் ஆயிற்று. அதனாலேயே உன் தாபம் இன்னும் அதிகரிக்கின்றது. வீணாக விசனிக்காதே. அவரும் உன்னைக் காதலித்து சீக்கிரம் உன்னிடம் வந்து சேருவார். மதுசூதனனைப்போல் உன்னை அவர் மார்பில் தரிப்பார்." என அவளுக்குச் சமாதானங்கள் கூறினள். இராஜகுமாரி "உன் பெயர் சதுரிகையாயிற்றே! உனக்குத் தெரியாதது உலகத்திலுண்டோ! ஆனாலும் நல்லோர்கள் எப்பொழுதும் நல்வார்த்தைகளையே பேசுவர். அம் மகாபுருஷனை நான் வாயினாலும் உபசரிக்கவில்லை யாதலால், என் தாபம் அதிகரிக்கிறது. அவரும் 'நம்மை ஆதரிக்காத இவள் நமக்குத் தகுதியானவளன்று' என நினைத்திருப்பார்" என்றனள். இவ்வாறு கூறிப் பிரலாபித்த குமாரியின் சந்தாபம் வரவர அதிகரித்தது. சந்தனக் குழம்பை மார்பிலூற்றியும் அவளுடைய தாபம் சிறிதும் அடங்கவில்லை. சதுரிகை விசிறியினால் அவளை வீச, அவள் "ஐயோ! நெருப்புப் போன்ற காற்று வீசுகிறதே, இனி வீசவேண்டாம்" என்றனள். சதுரிகையோ ஜீமூதவாகனன் வராமல் இவளுடைய தாபமடங்காதென நிச்சயித்தனள்.

இப்பொழுது நாம் கௌரி கோயிலில் விட்டுவந்த ஜீமூதவாகனனுடைய நிலைமையைக் கவனிப்போம். தேவர்களில் சிறந்தோராகக்

ஒருவன் தன் கடமையை உன் கண்முன்னே நன்றாய்ச் செய்வானானால், அவன் அரசன் முன்னே நிற்பான்; அற்பர் முன்னே நில்லான். அவ்வளவுக்கு அவன் தனது சுகுணத்தால் உயர்ந்து விடுவான்.

கூறப்படும் மும்மூர்த்திகளும் மகரத்வஜனுடையபிரபாவத்தால் தாங்களே தேவிகளுக்கு அடிமையாயினரென்றால், மலயவதியைப் பார்த்தபின் ஜீமூதவாகனனுடைய மனோநிலைமை எப்படியிருந்ததென்பதை வர்ணிக்கவும் கூடுமோ? பிதாவையே தெய்வமாகப் பாவித்தும், பாலியத்தில் பித்ருசேவையையே மேன்மையாக நினைத்தும் வந்த ஜீமூதவாகனன் இன்று மீனகேதனனுடைய அதிசய சக்தியால் தன் காதலியை ஒருதரம் கண்டபின்பே பிதாவின் உத்தரவுபடி மலயமலையில் இருப்பிடம் தேடவேண்டுமென எண்ணினான். அவன் தன் மனதுக்குள்ளேயே, "புஷ்பங்களைப் பாணங்களாகக் கொண்ட மன்மதனே! பகுத்தறிவில்லாத மான்களையும், அசையாப் பொருள்களாகிய மரங்களையும் நிஸ்ஸப்தமாகச் செய்த அப்பாட்டைப் பாடிய அவளை நான் பார்த்ததுமுதல் நீ என் என்மேல் உன் பாணத்தை விடுகிறாய்?" எனப் பேசிக்கொண்டான். அவனுடைய நிலைமையைக்கண்ட விதூஷகன் அவனைத் தேற்றினான். ஜீமூதவாகனன் "இப்போது நான் கனவில் அதோ காணும் சந்தனலதாக்ருகத்தில் சந்திரகாந்தச் சிலையின்மேலுட்கார்ந்து, வருந்திக்கொண்டிருக்கும் அவளைக் கண்டேன். அங்கு போய் அவளைக் கண்டாலன்றி என் வருத்தம் தீராது. ஆகையால் நாம் அங்கு போவோம்" என்றான். அதைக் கேட்ட விதூஷகனும் அதற்குச் சம்மதிக்க, இருவரும் அவ்விடத்திற்குச் சென்றனர்.

அவர்கள் வருவதைத் தூரத்திலிருந்து கண்ட சதுரிகை மலயவதியைப் பார்த்து, "அடி உள் காதலர் அதோ வருகிறார்! இனி வருந்தாதே!" என்றாள். மலயவதி ஓர் அசோகமரத்தில் மறைந்திருந்து தன் காதலன் வருவதைக் கண்டாள்.

சந்திரகாந்தக் கல்லை யடைந்த ஜீமூதவாகனன் "இச் சந்தன லதாக்ருதம் சந்திரமணிக்கல்லால் விழைக்கப்பட்டிருந்தும், சந்திரிகையையிழந்த இரவுபோல் சந்திரமுகியாகிய அவளின்றி அழகு பெறவில்லை" என்றான். விதூஷகன் "இக்கல்லின் மேல் நாம் உட்காருவோம்" எனக் கூற, இருவரும் அங்கு அமர்ந்தனர். பின்னும் விதூஷகன் "அவளோடு நீ கனவில் என்ன பேசினாய்?" என்று கேட்க, அவன் "சந்திரோதயம் போன்ற உன் முகத்திலிருந்து வடியும் கண்ணீர்களால் இக்கல் நனைக்கப்பட்டதே" என்றேன். அவளை இக்கண்களால் மறுபடியும் பார்க்காமல் என் மனக்குறை நீங்காது. அவளைப் பிரத்யக்ஷமாகக் காணமுடியவில்லையாகிலும், அவளுடைய சித்திரத்தையாயினும் எழுதி மனக்களிப்படைய விரும்புகிறேன். இம்மலையிலகப்படும் வர்ணக் கற்களைக் கொண்டுவா" என்று சொல்ல, விதூஷகன் ஐந்து நிறங்களுள்ள கற்களைக் கொண்டுவந்தான். மனதில் நிலையாக அமைந்திருந்த காதலியின் உருவை நினைத்துக்கொண்ட ஜீமூதவாகனன் அவளுடைய சித்திரத்தை எழுதி முடித்தான்.

ஒரு பத்திராசிரியர் தமது பெருமையைப் பிரமாதமாக எண்ணிக்கொண்டு மகிழ்ந்து விட்டு, மற்றொரு பத்திராசிரியரைப் பார்த்து சாதாரணஸ்தராக நினைத்துப் பழித்துப் பரிகசிக்கிறார். பழிக்கப்பட்ட பத்திராசிரியரோ பரம கர்வியான இந்தப் பத்திராசிரியரின் அறியாமைக்கு இரக்கப்பட்டுத் தானும் புன்னகை கொள்கிறார். ஹா! பத்திராசிரியர்களின் ஒற்றுமை எவ்வளவு அழகாயிருக்கிறது!!! எங்கும் சுயநல சிந்தையே மிகுதி.

ஜீமூதவாகனனுக்கும் விதூஷகனுக்கும் நடந்த மேற்கூறிய சம்பாஷணையை மறைந்து கேட்டிருந்த மலயவதி தன் சேடியுடன் "அடி! அவர் என்னை விரும்பவில்லை. இன்னும் யாரைப்பற்றியோ பேசுகிறார். ஐயோ! நான் இப்போது என்ன செய்வேன்" எனப் புலம்பினாள்.

மலய பர்வதத்தில் வந்திருக்கும் ஜீமூதவாகனனை அழைத்துவரும்படி விச்வாவஸு தன் மைந்தனாகிய மித்ராவஸுவை யனுப்பினனென முன்பே கூறினோமல்லவா? விச்வாவஸுவின் எண்ணம் மலயவதியை ஜீமூதவாகனனுக்கு மணஞ்செய்விக்க வேண்டுமென்பதே. வித்தியாதர குலத்துக்கோர் திலகமாயும், பெரியோர்களால் நல்லவனெனப் புகழப் பட்டவனும், நிகரற்ற ரூபலாவண்ய முடையவனும், பராக்கிரமத்தையே தனமாகக் கொண்டவனும், அளவற்ற வித்தையைப் பெற்று, அதற்குத் தக்க வணக்கமுடையவனுமாகிய ஜீமூதவாகனனுக்குத் தன் தங்கையை மணஞ் செய்விப்பதில் மித்ராவஸுவுக்கும் ஸந்தோஷமே. ஆனால், ஓர் ஜீவனுக்காகத் தன் பிராணனையும் திருணமாக மதித்து, தன்னையும் பலி கொடுக்கும்படியான அவனுடைய ஜீவகாருண்யத்தை நினைத்த அளவில் அதனால் எங்கு அபாயம் சூழுமோ என்று அவனுக்கு வருத்தமுண்டாயிற்று.

தன் தகப்பனாருடைய உத்தரவுப்படி மித்ராவஸு ஜீமூதவாகனனைத் தேடிக்கொண்டே சந்தனலதா கிருகத்துக்கு வந்து சேர்ந்தான். அவன் தூரத்தில் வருவதைக் கண்டவுடனே இராஜகுமாரன் தான் எழுதிய சித்திரத்தை வாழையிலையால் மறைத்தான்.

(தொடரும்.)

K. S. ஸ்ரீநிவாசாசாரியார்.

அவ்வளவு தூரம் போக வேணுமே!

ஓரிடத்திற்குச் செல்லவேண்டுமென்று முதலில் ஒருவன் வெகு உறுதியாய்த் தீர்மானித்து விடுகிறான். இன்னொருவன் கோயிலுக்குப் போகவேண்டுமென்று நிச்சயம் செய்கிறான். பிறகு புறப்படவேண்டிய நேரம் வருகிறது. அப்பொழுது சோம்பல்தன்மை முன்னே வந்து நின்றுகொண்டு "அவ்வளவு தூரம் போகவேணுமே" என்று சொல்லி அவன் மனோதிடத்தைக் கலைக்கிறது. அவன் அதில் மயங்கி, அந்த வேலை செய்யவேண்டும், இந்த வேலை செய்யவேண்டும், இப்போது எப்படிப்போகிறது என்று சொல்லிக்கொண்டு, தான் புறப்பட இருந்ததை நிறுத்திவிடுகிறான். ஒரு மணிக்கு முன்பு எண்ணிய தீர்மான முடிவு அடுத்த மணிக்குள் மாறி விடுகிறது. இன்று செய்த உறுதி நாளை இருப்பதில்லை.

பழமொழிக் குறிப்புகள்

4. மக்கள்.

(334—ம் பக்கத் தொடர்ச்சி.)

343. "பிள்ளையும் புழுக்கையும் சரி."

'புழுக்கை' என்பது மிக்க கேவலமான வேலைக்காரிக்குச் சொல்லும் பதமாகும். அவ்விதம் கேவலப்பட்ட வேலைக்காரி அதற்குத் தக்க குணமுள்ளவளாகவே இருப்பாள். அத்தகைய இழிகுணம் படைத்த வேலைக்காரியை எவ்வளவுக்கு அடக்கித் தூரவைத்து நடத்துகிறோமோ, அதற்குத் தக்கபடி அவளும் பயந்து நடந்து ஒழுங்காக இருப்பாள். அவ்விதமே, பிள்ளைகளையும் அந்த இழிந்த வேலைக்காரியை அடக்கிக் கண்டித்து நடத்துவது போலவே நடத்தி பயத்திலும் கண்டிப்பிலும் வைத்துக் கிரமப்படுத்த வேண்டுமென்றும், இல்லாவிடில் பிள்ளைகள் கெட்டுவிடுவார்களென்றும் இந்தப் பழமொழி கூறுகிறது. பிள்ளைகளிடம் அன்பு இருக்கவேண்டியதுதான். ஆனால், அந்த அன்பை உண்ணுங்காலத்திலும், ஊட்டுங்காலத்திலும் காண்பித்துக்கொண்டு, மற்ற வேளைகளில் குழந்தைகளைக் கண்டிப்பும் பயமுமாக அடக்கி நடத்தினால், அந்தக் குழந்தைகள் நற் குழந்தைகளாக வளரக்கூடும். தாய் தந்தையர்கள் குழந்தைகளை அடக்கி நடத்துவது மட்டுமல்ல, தங்களின் திருவாயையும் அடக்கி நடத்திக்கொள்ளப் பழகவேண்டும். தாங்கள் துர்ப்பாஷைகளை சதா பேசிக்கொண்டு அதனாலேயே திட்டிக்கொண்டுமிருந்துவிட்டு, பிறகு தங்களிடத்திலிருந்து தெரிந்துகொண்ட அந்தத் துர்ப்பாஷைகளைக் குழந்தைகள் சொல்லும்போது அதற்காகக் கோபிப்பது மௌடீகம். அவ்விதம் அக்குழந்தைகள் துர்ப்பாஷைகளைப் பேசும்படியானதற்குத் தாங்களே காரணமென்பதைத் தாய் தந்தையர் நன்குணர்ந்து தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். பிறகு குழந்தைகளையும் திருத்தி நல்வழியில் நடத்தவேண்டும். புழுக்கையைப்போல் குழந்தையையும் நடத்தவேண்டு மென்றதினால், அவ்வளவு இழிவாகக் குழந்தையை நடத்தவேண்டு மென்பதல்ல. கண்டிப்புடன் நடத்தவேண்டு மென்பதே பொருள். அந்தக் கண்டிப்பிலும் நியாயம் இருக்க வேண்டியது முக்கியம், அக்கிரமமாகக் குழந்தைகளைக் கண்டிக்கக் கூடாது. அக்கிரமமாக இழிவு படுத்தவும் கூடாது. நாம் குழந்தைகளிடம் எவ்வளவு அதிகாரம் செய்தாலும் கேட்பவரில்லை யென்று மட்டுமீறி விடக் கூடாது. இவ்விதம் மிக்க இழிவாயும் கேவலமாயும் நடத்தியதை ரோசமுள்ள சில பையன்கள் சகிக்காமல் குளத்திலும் ஆற்றிலும் விழுந்து இறந்து போயிருக்கிறார்கள். வீட்டுக்கு ஒரே ஆண் குழந்தையா யிருந்தவன் இப்படி இறந்து

ஒருவருக்குச் சிறப்பு வருவதெல்லாம் அவர் தமது நன்மைகளைப் பெரிதாகப் பாராட்டாமல், இப்பூமியில் தாம் பிறந்தது பரோபகாரம் செய்வதற்காகவேயென்று கருதி நடப்பதனாலேதான்.

விட்ட காரணத்தால், அந்த வீடு குட்டிச்சுவராய்ப் போனது முண்டு. குழந்தையிடத்திலும் ஒரு மரியாதையும் அன்பும் மதிப்பும் இருக்கவேண்டும். மற்றொரு பக்கம் அவர்களைக் கண்டிப்பாக அடக்கி நடத்திப் பயத்தில் வைத்திருக்கவும் வேண்டும். வேலைக்காரியையும் இப்படியே ஒரு மரியாதை கொடுத்து நடத்தி, மற்றொரு பக்கம் கண்டிப்பு காட்டவேண்டும். எதிலும் ஒரு அளவு, ஒழுங்கு, நிதானம் வேண்டும்.

ஃ

344. "பிள்ளைக்கும் புழுக்கைக்கும் இடம் கொடாதே."

எப்பொழுதும் சற்று தூரத்திலேயே நிறுத்தி வைத்துக் கண்டிப்பில் நடத்து என்பது கருத்து. அன்பைக் காட்டவேண்டிய சமயத்தில் காட்டி விட்டு, மற்றக் காலங்களில் ஒரு கண்டிப்பு முகத்துடன் எட்டி நிற்கவேண்டுமென்பது இப்பழமொழியின் தாத்பரியம்.

ஃ

345. "பொல்லாப் பிள்ளை யில்லாப் பிள்ளை."

நற்குண நற்செய்கைகளில்லாத ஒரு துஷ்டப் பிள்ளையைப் பெற்றிருப்பதைக் காட்டிலும், குழந்தை யில்லாமலே இருப்பதானது மேலென்பது இதன் பொருள். பொதுவாக நற்குணங்களும், துர்க்குணங்களும் ஜென்ம சுபாவமாய் அமைகின்றனவென்பதும் ஒரு இரகசியம். அந்த விதமாக இயற்கையிலேயே துஷ்ட குணமுள்ள பிள்ளையை எவ்வளவு சீர்திருத்தினாலும் அதில் பயன் ஏற்படுகிறதில்லை. ஒரு விவாகத்தைச் செய்து வைத்துவிட்டாலாவது ஒழுங்காக இருப்பானென்று செய்து வைக்கப்போனால், அவன் தன் மனைவியை விட்டு எங்கேனும் கண்காணாத இடத்துக்கு ஓடிவிடுகிறான். இவ்விதமே, பெண் குழந்தையும் தான் வாழப்போன இடத்திலே தனது பெருத்த வாயையும் அடங்காமையையும் காண்பித்துக்கொண்டு தாய் வீட்டுக்குத் துரத்தப்படுவாளானால் அதைவிடத் துக்கம் வேறுண்டா? மக்கள் தாய் தந்தையரால் கெடுவது பாதி; மக்களின் பூர்வகுணமே தலைகாட்டி அதினாற் கெடுவதும் பாதி. செய்த புண்ணிய பாபங்கட்குத் தக்கபடி நல்ல பிள்ளையும் கெட்ட பிள்ளையும் வாய்க்கும்.

ஃ

346. "மக்கள் களவும் வரகு பதரும் சரி."

திருட்டு முதலியவற்றைச் செய்யும் குணமுள்ள பையன் வரகு தான்யத்தின் பதருக்கு ஒப்பாவான் என்று சொன்னபடி. தான்யங்களில் வெகு இழிவானது வரகு. அதன் பதருக்கு எந்த விலையுமில்லை. அது தூர யெடுத்து எறியப் படுவதே. அதுபோலக் களவு தொழிலில் புத்தி சென்ற

புத்தி முற்றினவருக்குச் சித்தியாத தொன்றுமில்லை. அவர்களின் மீது பொறாமைப் பட்டுக் குறை பேசுவோரை எவரும் கவனியார். இங்ஙனம் இழிவாகப் பேசுவோருடைய மூடத்தனத்தையே மற்றவர் எடுத்துக் காட்டிப் பரிகசிப்பர்.

பிள்ளை ஒன்றுக்குமே பயன்பட மாட்டான் என்பது கருத்து. குழந்தைகள் களவைச் செய்வதற்குத் தாய் தந்தையரும் ஒரு காரணம். பிறர் சொத்துக்களை மெதுவாக அப்பிக்கொண்டு வந்து விடுவதும், அடுத்த வீட்டு மெத்தையில் வைத்திருந்த சாமான்களை எவரும் அறியாதபடி எடுத்து வந்து விடுவதும், வாங்கின கடனைத் திருப்பித் தராமற் போவதுமான குணமுள்ளவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் பெற்றோரின் குணங்களையே தாங்களும் கொண்டு விடுகின்றன. அடுத்த வீட்டிலிருந்து ஒன்றைத் தங்கள் குழந்தை எடுத்து வந்து விட்டால் அதை மறைத்து வைத்துவிடும் தாய்மாரும் உண்டு. ஆரம்பத்திலேயே கண்டித்து அடக்காத குழந்தைகள் பிறகு கெடுவதற்குக் கேட்பானேன்?

ஃ

347. "மக்கள் சோறு தின்றால் மகிமை குறையும்".

இது ஒரு விசித்திரமான பழமொழி. "சோறு தின்றால்" என்றால்-புசித்தால்—என்பதல்ல கருத்து. புசிக்காமல் உயிர் வாழ்வதெப்படி? ஆகவே, அந்த அர்த்தத்தில் இதைச் சொல்லவில்லை. தாஙகளே பாடு பட்டு ஸ்வயமாய்த் தேடிவந்து அதில் உண்ணாமல், சோம்பிக்கிடந்து, தங்களின் பெற்றோர்கள் தேடி வைத்துச் சென்றவற்றை யுண்டு அழிக்கத் தலைப்பட்டால், வீட்டுக்கு முன்னோர்களால் ஏற்பட்ட பெருமை கெட்டு விடுமென்பது இதன் கருத்து. இதற்கு மற்றொரு பொருளும் உண்டு. தானே யாவற்றையும் தேடிவைத்துக் கடைசி காலத்திலும் சம்பாதிப்பவனாக இருந்து ஒருவன் வாழ்ந்தால்தான் அவனுக்கு மகிமை யுண்டென்றும், அவ்வாறின்றி தான் ஒன்றையும் தேடி வைக்காமல் தன் மக்களின் சோற்றுக்கே எதிர்பார்ப்பவனாக ஒருவன் கிடப்பானாகில், அது பெருமைக்குக் குறைவுதான் என்றும் இப்பழமொழி இடித்துக் கூறுகிறது. தம் மக்களுக்கு வேண்டியவற்றைத் தேடிவைத்து அதில் அவர்களும் வாழும்படியும், தானும் அதில் உண்டு பெருமைப்படும்படியும் வாழ்வதுதான் ஒருவனுக்குச் சிறப்பு தரும் என்பது கருத்து. அப்பொழுதுதான் வீட்டுக்கு வந்த மருமகளும் மாமனாரை மதித்து நடப்பாள். தான் பெற்ற குமாரனாயிருந்தாலுங்கூட, தனக்கென்று சொந்தத்தில் நாலு பணம் தன் பெட்டியிலும் கையிலும் இருந்து கொண்டிருந்தால் தான் கௌரவமாயிருக்கும். இவ்விதம் இரண்டு விதமான கருத்துகளையும் இந்தப் பழமொழி குறிப்பிடுகின்றது. (தொடரும்.)

கிறிஸ்துமதம் என்பது மதத்தோடு நில்லாமல் பலவிதப்பட்டதாக மாறிவிட்டது. உலகவியலிலும், பேராசையிலும், அதிகாரத்தைத் தேடுதலிலும், தேசத்தை ஆள்பவர்களோடு மிக்க உறுதியாக உறம் பெற்றிருப்பதிலும், அரசாங்க விஷயத்தில் ஈடுபடுவதிலும் முற்பட்டுவிட்டது. சரித்திரக்கியாதி பெற்ற அம்மதம் இப்போது உலக அமைதியை உண்டாக்கவும், சுதந்திரத்தை நாட்டவும், நீதியைக் காட்டவும், மானிடர்களுக்கு உண்மைக் குணத்தைக் கொடுக்கவும், சிறந்த பக்தியை நிலைப்பெறச் செய்யவும், சமுதாய உயர்ச்சியை ஏற்படுத்தவும் முடியாது பாழ்பட்டு முழுத்தோல்வியைப்பெற்று வருகிறது. —ஜே. டி. சண்டர் லண்ட்டு

சிறிய நெருப்பின் சக்தி.

ஆழ்ந்து ஆலோசிக்கும் சக்தி படைத்தால், எதிர்படும் ஒவ்வொன்றிலிருந்தும், அல்பமான ஒரு சிறிய வஸ்துவிலிருந்துங்கூட, பெரிய ஞானத்தையும் உயரிய தத்துவத்தையும் கண்டுணர்ந்து, அவ்விதம் அறிந்த புதிய தெளிவின் மூலமாகத் தனது ஜீவியத்தையும் வாழ்க்கையையும் மேன்மையான நிலைக்குத் திருப்பி மகிமைப்படுத்தலாம். இவ்விதம் நுட்பமாய் ஆராய்வது மனித இயற்கையின் சக்திகளுள் ஒன்றாம். முதலில் நம் முன்பு ஒரு சிறு தீயின் வெளிச்சம் தென்படும். அதைச் சிறிய நெருப்பு என்று அலக்ஷியம் செய்துவிடவொண்ணாது. சிறிய தீயாயினும், பெரிய நெருப்பாயினும் குணம் ஒன்றே. ஆனால், சிறிய தீயென்று நாம் அலக்ஷியம் செய்து விட்டால், நம் கண்களுக்கு முன் புலப்பட்டுப் புது உணர்ச்சியை நமக்குத் தரக் காத்திருந்த அந்த சிறிய தீ காற்றில் அணைந்து போனாலும் போகும். அவ்விதம் அணையும்படி நாம் விடக்கூடாது. அந்தச் சிறிய தீ நமது உள் எண்ணங்களை எழுப்பிவிட்டு நமக்குக் காட்டிய புது உணர்ச்சிகளை ஓயாது சிந்தித்தவாறாக, அந்தச் சிறிய தீயை (ஆலோசனைத்தீயை) பெரிய நெருப்பாக ஆக்கிவிட வேண்டும். பெரிய நெருப்பின் சங்கதி என்ன? கடலே அலைமோதி வெள்ளப் பெருக்கெடுத்து வந்தாலும் அந்தப் பெரிய நெருப்பு அவியாது. இவ்விதம் அபார சக்தி மிகுந்த பெரிய நெருப்பு எங்கிருந்து வந்தது?—சிறிய நெருப்பிலிருந்தே வந்ததென்பதை யாம் மறக்கலாகாது. சிறிய நெருப்பு (சிறிய ஆலோசனை) எவ்வாறு பெரிதாயிற்று? உலர்ந்து காய்ந்த விறகு சேர்ந்ததால். (அதாவது தளர்வுற்றுச் சோர்ந்து இளைத்துக் காய்ந்து கிடந்த எண்ணங்களின் பெருக்கு சேர்ந்ததால் சிறிய தீ பெரிய தீ ஆயிற்று. ஆனால், "பெரிய தீ" என்று ஒரு தனிப் பொருள் உலகில் உண்டா? இல்லை. பிறக்கும் பொழுதே எல்லோரும் மீசை, தாடியுடன் யௌவனஸ்தர்களாகப் பிறந்து விடுகிறார்களா? இல்லை. பெரிய காட்டுத் தீ பரவி நின்றாலுங்கூட, அது சிறிய தீயினின்றே ஆதியில் தோன்றியதாகும். அந்தக் காட்டுத்தீ இப்போது நம் கண் முன்பு தோன்றுகிறபடி ஒரே காலத்தில் எல்லா மரங்களிலும் பிடித்துக்கொண்டதா? இல்லை. முதலில் ஒரு மரத்திலிருந்தே சிறு தீ புறப்பட்டுப் பிறகு எல்லா மரங்களிலும் பரவுவதாயிற்று என்னும் உண்மையை அறியாதார் யார்?

ஃ

ஆகவே, சிறிய தீ (அதாவது சிறிய ஆலோசனை) பெருகிச்சென்று விசேஷித்த சக்தி கொண்டதாய்ப் பெரிய நெருப்பாக (அதாவது சிறந்துயர்ந்த பெரிய ஆலோசனையாக, ஆராய்ச்சியாகி) முடிகின்றது. சிறியதாயுள்ள ஒன்றைப் பெரியதாக்குதல் மனித இயற்கையோடும் சேர்ந்தது, சிறிய நெருப்பு சுவாலை வீசி எரிய

உயர்வு இல்லாத ஒருவன் தன்னை மகா உயர்வாகவும், பரிசுத்தனாகவும் சொல்லிக்கொள்ளும்போது, மற்றவர்கள் அதைக் கேலித்தன்மையுடன் கவனிப்பதன்றி அதற்கு மதிப்பு தருவதில்லை. உலகமும் ஒப்புவதில்லை.

பெரிய நல்ல கட்டைகள் போட வேண்டும். கட்டைகள் போடுவதற்குப் பின்வாங்கினல், அல்லது சோம்பி நின்றால் தீ அணைந்து போகும். கட்டை போடுவதற்குச் சோம்பி நின்று, தீ சிறியது, தீ சிறியது என்று எந்தப் பைத்தியக்காரனாவது சொல்வானா? சந்தர்ப்பத்துக்கேற்ற கட்டைகளைச் சம்பாதித்துப் போடவேண்டும். அவ்விதமின்றி அசட்டையா யிருந்துவிட்டால் பெரிய தீயை உண்டாக்க முடியாது. இவ்விதமே, நம் மனத்துள் தோன்றிய சிறிய சிந்தனையை—ஆலோசனையை—ஆராய்ச்சியை—மேன்மேலும் தீவிரமான பெரிய எண்ணங்களை அதனோடு சேர்த்து ஒரு பெருங் காரியத்திற்கு உதவக்கூடிய பெரிய சிந்தனையாக—ஆலோசனை ஆராய்ச்சியாக—நாம் பக்குவப்படுத்திவிடவேண்டும். இங்ஙனம் முயன்று செய்வதற்குச் சோம்பி நின்று நமது சிறிய சிந்தனையை—ஆலோசனையை—ஆராய்ச்சியை அலக்ஷியம் செய்தால் நாம் பெரிய காரியங்கள் எதையும் சாதிப்பதற்குச் சக்தி யுள்ளவர்களாக முடியாது. எப்போதோ தம் உள்ளத்தில் தோன்றிய சிறிய சிந்தனையைச் சதா எண்ணமிட்டு வந்ததிலிருந்தும்தான், பிற்காலத்தில் பலரும் பெருங்காரியங்களைச் செய்து முடிக்க வல்லவராயினர் என்பதை நாம் கவனிக்கக்கடவோம். நமது கைக்கோ, ஞாபகத்திற்கோ எட்டிய எதனையும் நாம் விட்டுவிடக்கூடாது

தமிழ் மொழியின் வளர்ச்சி.

தமிழ்ப்பாஷை உலகத்து மற்றப் பாஷைகளைப்போல அபிவிர்த்தியாக வேண்டுமானல், அது ஜீவ பாஷையாய், அதாவது உயிருள்ள பாஷையா யிருக்கவேண்டும். வளருகிற மற்ற வஸ்துக்களுக்கிருக்கிறதுபோன்ற உயிரும் புஷ்டியும் தமிழ்ப் பாஷைக்கும் உண்டாகவேண்டும். இந்த உயிரும் புஷ்டியும் உண்டாகும்படித் தமிழ்ப்பாஷை ஆதரிக்கப்படுகிறதா? தமிழில் எவ்வளவு தேர்ந்தவர்களா யிருந்தபோதிலும் இங்கிலீஷ் தெரியாவிடில்—"உனக்கு இங்கிலீஷ் வராதா?" என்று சொல்லி அவமதிக்கிறார்கள். இங்கிலீஷில் தேர்ந்தவர்கள் நூல்கள் எழுதினல்தான் சிறப்பா யிருக்குமென்கிறார்கள். ஆங்கிலம் கற்றோருடைய செய்கையெல்லாம் பெரும்பான்மையும் மொழிபெயர்ப்பாயிருக்கிறதே தவிர, சொந்தபுத்திகொண்டு கற்பனை செய்வது மிகச்சொற்பம்தான். ஸதாகாலமும் ஆங்கிலத்தைப் புகழ்ந்து, தமிழை அலக்ஷியம் செய்தால் தமிழ்வளர்ச்சி எப்படி முடியும்?



ஹாஸ்ய சஞ்சீவினி



பெண்:—முதலில் பிருவு செய்வது வழக்கந்தானென்றீர்களே? அது எதற்குச் சொன்னது?

ஆண்:—எல்லாம் காதலைப் பெறுகிற சங்கதிக்குத்தான். அந்தக் காதலைத் தெரிவிப்பதற்கே எவ்வளவோ நடுக்கம்! பிறகு துணிந்து ஒரு கை பார்த்துவிடுகிறது! அதில் கோபமில்லாவிட்டால் "சரக்கு" சம்மதித்துக்கொண்டதென்று அருத்தம். முதல் தடவையில் சிணுங்குகிறது; பிறகு இணங்குகிறது. ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவித அழகு தோற்றும்.

பெண்:—ஆண் துணிந்து நெருங்கியதைப் பெண் வெளியிட்டு, அதற்காக உதைப் பரிசுகள் கிடைக்கும்படியும் செய்து விட்டால் அதுவும் ஒருவித அழகுதானே!

ஃ

கிராமவாசி:—பத்திராசிரியரை ஒரு தேவ உருவமாகச் சொல்லலாமல்லவா? அவருக்குத் தெரியாதது உலகில் எது?

நகரவாசி:—பத்திராசிரியரை எல்லாமுமே தெரிந்தவரென நினைத்துவிடக்கூடாதென்று ஸ்ரீ அரவிந்தரின் கேஸிலே கல்கத்தா ஹைகோர்ட்டுத் தீர்ப்பு. கொஞ்சமே அறிந்து வைத்திருந்தபோதிலும், எந்த சங்கதியிலும் சமாளித்துக்கொண்டு நுழைந்து யாவும் உணர்ந்திருப்பது போல் சமர்த்தாக நடிப்பவருக்கே "பத்திராசிரியர்" என்று பெயர்.

ஃ

அன்பர்:—நாடகம் நன்றாயிருக்கிறதா?

நண்பர்:—ஏதோ வயிறு பிழைக்க அவன் கற்றுக்கொண்ட வித்தை! அதற்காக அவன் வேஷம் போட்டான். நமது கைப் பணத்தின் கனத்தைக் குறைத்துக் கொள்ள நாமும் வந்தோம்! அவ்வளவே.

ஃ

அவர்:—மை தீர்ந்து விட்டால் இங்கி புட்டியை மறுபடியும் மை ஊறும்படியாக எப்படி ரிபேர் செய்கிறது?

கடைக்காரன்:—இரண்டு மைப் பொட்டணங்களைக் கொண்டு சுலபத்தில் அதை ரிப்பேர் செய்துவிடலாம்!

ஃ

யுவகன்:—என் கண்ணே! மாம்பழமே! மல்லிகையே! உன்னையே விவாகம் செய்துகொள்வதென்று தீர்மானித்துவிட்டேன். இனி என் ஏராளமான சொத்துக்கள் யாவும் உனக்கே சொந்தம். நீயே இராணி.

யுவதி:—மெதுவாக என் கற்பை விழுங்கிவிடுவதற்குப் போடுகிற சொக்குப்பொடியா இது? நான் அதில் ஏமாறுகிறவளல்ல. நீங்கள் சம்மதித்ததாலேயே விவாகம் நடந்துவிடாது. அது உங்களொருவரின் இஷ்டப்படி செய்கிற சங்கதியல்ல. நீங்கள் என்னை விரும்புவதற்குமுன் உங்கள் தாய்தந்தையர் என்னைத் தேடி வந்து விரும்பட்டும். இனி என்னிடம் பேசாமல் என் பெற்றோர்களிடம் வார்த்தை வைத்துக்கொள்வதுதான் ஒழுங்கும் யோக்யதையுமாகும்.

ஃ

செட்டியார்:—உங்கள் வைர மோதிரம் நல்ல வேலைப்பாடு. கழற்றுங்கள், பார்ப்போம்.

உத்தியோகஸ்தர் :—கழற்றினுல் ஒரு சமயம் கல் மாறிவிடும். என் விரலிலிருந்தபடியே பாருங்கள்!

ஃ

வினு:—எதைச் சுகமென்றும், சாமர்த்தியமென்றும் சொல்வது?

விடை:—பிறரது செலவிலேயே பொடி காபி-உறிஞ்சி, தன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு, அவர்களின் செலவிலேயே வண்டியிலேறிச் சென்று திரும்பி வந்துவிடுவதைத் தான்!

ஃ

மனைவி:—நாலாவது வீட்டு நாராயண முதலியார் இன்று என்னை விகாரமாய் விரைத்துப் பார்த்தார்.

கணவன்:—தன் வீட்டிற்கு வந்து பெண்கள் கூட்டம் போடாதிருப்பதற்காகத் தான் அப்படித் தடபுடல் செய்யப் போவதாய் நேற்றே அவர் எனக்குத் தெரிவித்திருக்கிருர்.

ஃ

நுபாவதி:—அவர் உன்னை வலிய வந்து தொட்டு இழுத்ததை என் உன் வீட்டில் சொல்லவில்லை?

சரசாங்கி:—இதை யெல்லாமா வெளியில் சொல்லிக்கொள்ளுகிறது? மூடி மறைத்தவரையில் பெருமை. நாம் ஜாக்கிரதையா யிருந்தால் எந்தத் தவறும் நடக்காது. நமக்கு மிகவும் சாமான்யமா யிருப்பது மற்றவருக்கு அபூர்வ ரம்மிய வஸ்துவாகப்படுகிறது. எல்லைமீறி அதிகப்பேச்சு வைத்துக்கொண்டது நமது முதல் தப்பு.

ஃ

சுந்தரம்:—பணம் கட்டி டாக்டர் பரீக்ஷைக்குப் போய்ப் படித்துக் கஷ்டப்படாமலே இப்போது எல்லா தமிழ் வைத்தியர்களும் சுலபமாய் டாக்டர்க ளாய்விட்டார்களே!

மாணிக்கம்:—இந்தப் பண நெருக்கடியிலே டாக்டர் பரீக்ஷைக்குப் பணம் கட்டிப்போக முடிகிறதா?

ஃ

சோமு:—நான் போட்ட கடிதம் உனக்கு வரவில்லையா?

ராமு:—வராமலென்ன? அதில் கேட்டுக்கொண்டதைச் செய்ய முடியாததால்தான் பதில் எழுதவில்லை.

ஃ

சிறுவன்:—ஏனையா, சாமியார் சாமியார் என்று பெயரை வைத்துக் கொண்டு பல பெண்களோடு வசிக்கிறீர்களே?

சாமியார்:—சிறுவனே! என் ரகசியத்தை வெளியில் சொல்லாதடா. உனக்கும் ஒரு அழகான சிறுக்கியைத் தேடித்தருகிறேன். என்னைப் போல் நீயும் அவளோடு கொஞ்சு அப்பனே.

S. R. வேணுகோபால்.

ஜானகி:—ஒருவன் ஒரு சங்கதியைச் செய்துவிட்டு, அது எப்படி முடியுமோவென்ற அதே நினைவும் விசாரமுமானுல்; அவனுக்கு மறுநாட் பொழுது எந்தத் தினுசில் விடியும்?

பாக்கியம்:—எந்தப் புகாருமில்லாமல் விடிந்தால், அவன் ஜெயசாலி

தெருத் தெருவாய்க் காணப்படும் கூலிக்காரன்கூட மற்ற தேசங்களிலிருப்பதைக் காட்டிலும் இந்தியாவில் தன்னுடைய மதத்தை நன்ருய் அறிந்தவனு யிருப்பதுடன் மிக்க மரியாதையுள்ளவனு யிருக்கிருன் என்று ஒரு ஜப்பானிய மேதாவி கூறுகிருர்.

தான். புகார் இல்லாதபோது "காய்" கனிந்து வருவதாக அருத்தம்.

ஃ

தாய்:—ஊருக்குப் புறப்பட்டுப் போனவர்கள் உனக்கு ஏதாவது காசு, பணம் கொடுத்தார்களா?

குழந்தை:—ஒன்றுமே தரவில்லை. மறுபடியும் வந்து ஒரு வாரம் இங்கு தங்குவதாக வெகு பிரியமாய் வாய் உபசாரம்சொல்லிப் போனார்களம்மா!

ஃ

ரங்கன்:—மண், பெண், பொன் என்கிறார்களே? அதற்கு என்ன அருத்தம்?

பத்மன்:—மூன்றும் கையிலிருந்தால்தான் கௌரவமும் மதிப்பும் ஏற்படும். இதில் 'மண்' என்கிற நிலம் வெகுபேருக்கின்றி கடையரிசி வாங்கி சமைக்கிறார்கள். 'பேண்' என்று வந்த மனைவி சரியாயில்லாமல் கோணுகிறவளா யிருக்கிறாள். மூன்றாவதான 'போன்'னே நம் நாட்டை விட்டுக் கப்பலில் வெளிநாட்டுக்குப் போனபடி யிருக்கிறது!

ஃ

காமாக்ஷி:—குறிப்பு தெரியாதவர்கள் மரமா?

பத்மாவதி:—தன் 'குறிப்பு' தெரிவித்தானதும் பொறுத்திருந்து பார்க்காமல் அதற்குள்ளே அவசரப்படுகிறவர்கள் ஆத்திரம் மீறிய அவிவேக மரக்கட்டைகள் தான்.

ஃ

பிள்ளை:—என்ன இப்பா! எனக்கு ரூபாய் ஒன்றும் பாங்கியில் போடவில்லையே?

தந்தை:—நான் தான் குட்டிச்சுவர்போல் இருக்கும்போது பாங்கியில் போடுவது எதற்கடா?

பிள்ளை:—என்ன அப்பா! நீ "குட்டிச்சுவர்" போல்தானே இருக்கிறாய்? நல்ல சுவர்போல் நல்ல பார்வையாய் இருக்கவில்லையே! எல்லாம் நரைத்துப் போச்சே! குட்டிச்சுவர் சாய்ந்துவிட்டால் எங்கள் கதி என்ன?

S. R. V.

வீரத்தாய்.

இராகம் செஞ்சுருட்டி. தாளம் ஆதி.

பால்மணம் வீசிவரும் பசுங்கிளிக்கே—நான்
  "பய"மேனும் பாலமுதை யூட்டுவேதில்லை.
வேல்விழி தெறிக்கவோரு வேடுவென் வந்தே—'யுனே,
  விரட்டி யடிப்பானென்றும் சோல்லுவதில்லை,
கால்களிரண்டு மில்லாக் கருப்பனடீ—யம்மா,
  காக்கைக்கழுகு மூக்கனிதோ பாரடீ,
சால்வயிற்றுனைக் "குட்டிச்சாத்தானை"ப் பாரு—இங்கே,
  சத்தம் போடாதே யேன்றும் சாற்றுவதில்லை. (1)

சல்லடைக் கண்ணனடீ சட்டித்தலையன்—இவன்
  சங்கிலிக்'குச்சி நாயைக்'கோண்டு வருவான்
கல்லுளிப் பேய்கள் பலவந்திருக்குதாம்—எனக்,
  கண்ணையுருட்டி பயம் காட்டுவேதில்லை,
அல்லலு மில்லையடீ அச்சமுமில்லை—இங்கே,
  "ஆனை" வந்தாலு முன்னைக்கண்டு நடுங்கும்,
செல்வக் களஞ்சியமே சிங்கக்குட்டியே—என்று,
  சித்தம் உறுதிபேறச் சேப்பி வருவேன்.

வீரர்—அ. சின்னராஜன்.

[நம்மவர் சிறு குழந்தைகட்குப் பூச்சி, பூச்சி யென்று பூச்சி காட்டியே பூச்சிக்களாக்கி விடுகின்றனர். இளமையிலிருந்தே எதற்கும் அஞ்சாத் தன்மையைப் புகட்டி வரவேண்டும். ஒவ்வொரு சிறு குழந்தையும் மகிழ்ச்சி பொங்க "அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமேன்பதில்லையே" என்று சொல்லுமாறு கற்பிக்கவேண்டும். இதுவே வீரத்தாய்மாரின் கடமை.—ப-ர்.]

கல்யாண காலத்தில் கால் நீட்டியுண்டு பிறகு ஊருக்கேகும் சோம்பேறிகள் ஆகா! என்ன கல்யாணம்! சதிர்கச்சேரி என்ன! பாட்டுக்கச்சேரி என்ன! கல்யாணத்தில் 5000-ரூபாய் செலவன்றோ! என்று பிதற்றிக் கொண்டதால் செலவழித்தவனுக்கு என்ன பெருமையுண்டாயிற்றோ தெரியவில்லை! கல்யாணச் செலவுக்குக் கடன் தந்தவன் கோர்ட்டில் வியாஜ்யம் செய்து நிலத்தை ஏலம் போடுவதற்காக வரும்போது மேற்கூறிய திண்ணைத் தூங்கிகள் பார்த்தால் ஏளனம் செய்யார்களா? முன்பு புகழ்ந்த வாயால் இப்போது இகழ்வார்களன்றோ? "அடடா! மூடப் பயல், காணியைக் கொதுவை வைத்துக் கடன் வாங்கிக் கல்யாணம் செய்தானே! இது என்ன மூடத்தனம்" என்பார்கள். இந்த இரண்டையும் ஏற்றுக் கொள்ளத்தான் பகவான் இரண்டு செவிகளைக் கொடுத்தார் போலுமென்று மௌனமாயிருக்க வேண்டி நேரும்.

சமுத்திர யாத்திரைக்காகப்

பிராயச்சித்தம்.

தற்போது இந்தியாவிலிருந்தும் அநேகர் இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய தேசங்களுக்குப் பல முறை சென்று திரும்பி யிருக்கிறார்கள். ஸமுத்திர யாத்திரை, மிலேச்ச(?) தேச வாசம் ஆகிய தோஷங்கள் இவர்களுக்கு உண்டாகி யிருக்கின்றன. ஆனால், இவர்கள் அயல் தேசங்களுக்குப் போன நோக்கமோ நிகரற்ற தேசாபிமானத்தையும், புத்தி சாமர்த்தியத்தையும் பற்றியது. தமது சொந்த நன்மைக்காக மட்டுமே போகவில்லை. பரோபகாரச் சிந்தைகொண்டும், தம் தேசத்தாருக்குப் பெரும் நன்மைகள் செய்யும் பொருட்டுமே பெரும் பான்மையோர் போனார்கள். உதாரணமாக, காலஞ்சென்ற ஆனரபிள் ஸ்ரீயுத கோபாலகிருஷ்ண கோகலேயை எடுத்துக் கொள்வோம். இவர் இங்கிலாந்து, பிரான்சு, தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களுக்குச் சென்று திரும்பி யிருக்கிறார். இவர் செய்த காரியம் பழய காலத்தில் ஹிந்து ராஜாக்களாயினோர் அன்னிய ராஜாக்களிடம் தூதர்களை அனுப்பிச் செய்த காரியம் போன்றது. உண்மையில் அப்படிப்பட்ட காரியத்தைவிட இது பெரிதும் நுட்பமுமான காரியம். கோகலேயின் புத்தியும் சாமர்த்தியமும் சாமான்யமல்ல இவர் பிராமண குலத்தில் பிறந்தவராயிருந்தாலும் உயர் குலத்து அனுஷ்டானங்களுக்கு விரோதமாய் அன்னிய தேசங்களுக்குப் போய் வந்திருக்கிறார். நம் தேசத்துப் பண்டிதர்களும் சாஸ்திரிகளும் உயர் குலத்து ஹிந்துக்கள் சமுத்திர யாத்திரை செய்வது தோஷமென்று சாதிக்கிறார்கள். அந்தத் தோஷ நிவாரணார்த்தம் பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டுமென்கிறார்கள். 'பிராயச் சித்தம்' என்ற பதத்திற்குப் பாப பரிஹாரார்த்தமாகச் செய்யப்படும் கிரியை என்றும், சாந்தி, தண்டனை என்றும் பொருள் படும்.

ஃ

ஸமுத்திர யாத்திரை பாபமென்றும், அதற்குப் பிராயச் சித்தம் செய்து கொள்ளவேண்டுமென்றும் சொல்லுகிறவர்கள் என்ன யோக்கியதையான நிலையில் இருக்கிறார்களென்பது கேள்வி? நமது பண்டிதர்களும் சாஸ்திரிகளும் கோகலேயை ஜாதிப் பிரஷ்டம் செய்ய முடிந்ததா? ஒருவரை ஜாதிப் பிரஷ்டம் செய்தால் அந்த ஒருவரோடு ஹிந்து ஸமூதத்தார் எவ்வித ஸம்பந்தமும் செய்யாமல் ஒதுங்கி வசிக்கவேண்டும். அதாவது, ஸமுத்திர ஸஞ்சாரம் செய்து வந்தவர் அவ்வளவு இளப்பமென்றும், மற்ற ஹிந்துக்கள் உயர்த்தி யென்றும் அர்த்தமாகும். இப்படியானால் சுவாதீனமும், கம்பீரமும் உள்ள மிருகராஜனான புலியானது, வீட்டிலடங்கித் திருட்டுத்தனமாய்ப் பாலைக் குடிக்கும் பூனையைவிட இளப்பமென்று சொல்வது

பிறர் நம்முடைய சொந்த விஷயங்களை எவ்வளவு வரையில் அறியாதிருக்கின்றனரோ அவ்வளவுக்கும் நமக்குக் கௌரவமும் க்ஷேமமுமாம்.

போலாகின்றது. பண்டிதர்களும் சாஸ்திரிகளும் ஸ்ரீ கோகலேயை ஜாதிப் பிரஷ்டம் செய்திருப்பார்களானால், அது அவருக்கு எவ்வித மாயும் குறைவல்ல. அவர் கீர்த்தியும் நற்குணமும் எப்போதும் போல் பிரகாசித்துக்கொண்டே யிருக்கும். புத்திமான்கள் அவர் துணிந்து செய்ததைச் சிலாகித்து, அவரைப் பின்பற்றி அவர் மாதிரி செய்ய முயலுவார்களே யன்றி, குண்டு சட்டியில் குதிரை யோட்டும் வைதீகர்களைப் பின்பற்றிச் செல்ல மாட்டார்கள். இந்த வைதீகர்களை இகழ்ந்து பேசுவது நமது எண்ணமல்ல. அவர்களிடம் பல நற்குணங்கள் இருக்கின்றன. ஆயினும், கால சுபாவத்தை நோக்கி தேசத்துக்கு நன்மை செய்யும்படியான வழிகளில் முயற்சி செய்யும் மற்றவர்களை ஆதரித்துத் தழுவிக் கௌரவப் படுத்துவதே தக்கதாகும். இதை யறியாமல் நமது மதாசாரியர்களும், மதபோதகர்களும் நடப்பார்களானால், அவர்களுடைய அபிப்பிராயங்களும் வார்த்தைகளும் மதிக்கப்படாமல், தேசம் கோகலேயைப் போன்ற பெரியோர்களின் முயற்சிகளால் முன்சென்று கொண்டு போகப்படும்.

ஃ

ஸமீபத்தில் ஸ்ரீமான் எம். கே. ஆசார்யா என்பவர் இங்கிலாந்து சென்றுவிட்டுத் திரும்பினர். அவ்விதம் கடல் யாத்திரைசெய்ய நேர்ந்ததற்காகத் தனுஷ்கோடியில் அப்பாவம் தீரப் பிராயச்சித்தம் செய்து கொண்டாரென்று பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாயிற்று. ஸமுத்திர யாத்திரையை ஒரு பாபகரமான செய்கையென மதிப்பதினும் பெருந்தவறும், கேடும் வேறில்லை.

சந்தா நேயர்களே !


நான் பிரதி மாதமும் 15-ந்தேதி யன்று, அதாவது தமிழ் மாதம் முதல் தேதியன்றே சென்னையை விட்டு எனது காரியாலயத்தினின்று வெளிப்போந்து, தங்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தும், சில அன்பர்கள் என்னுடைய வரவைக் காணாது மனக்கவலைப்படுவது கேட்க யான் மிக வருந்தலாயினேன். என்னைப் பரிபாலிக்கும் தலைவர், தங்களுடைய விலாசத்தை நன்றாகக்குறித்து என்னைத் தங்களிடம் காலம் தவறாது சேர்க்கும்படி, காருண்ணிய கவர்ன்மெண்டின் தபால் ஆபீசுக்கு அனுப்பிவிடுகிறார். நான் அப்படித் தங்களை நாடி வந்தடையாவிடில், உடனே நேயர்கள் என் தாமதத்தைப்பற்றித் தங்கள் ஊரைச்சேர்ந்த போஸ்ட் மாஸ்டருக்குத் தெரிவித்தால் நான் ஒழுங்காகத் தங்களிடம் வந்தடைந்து விடுவேன்.

தங்கள் செல்வி,

அமிர்தினி.

பிரபஞ்ச தரிசனம்







தேசத்தின் பிற்கால அபிவிர்த்தி ஜனங்களின் அறிவைப்பற்றினதென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. தமிழ் நாட்டு ஜனங்களின் அறிவு தமிழ் பாஷையின் விற்பத்தியினாலேதான் உண்டாகவேண்டும். சாமான்ய ஜனங்களுக்கு அறிவை உண்டுபண்ணுவது கற்றவர்களின் தொழிலாகையால், படித்த இந்தியர் தமிழ் பாஷையை மேன்மேலும் கற்பதில் விருப்பமும் ஊக்கமும் காட்டவேண்டும். சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழ் பாஷைக்குக் கிடைத்திருந்த ஆதரவும், அது அனுபவித்த பெருமையும், அது செலுத்திவந்த செல்வாக்கும் தமிழ் உலகத்தாருக்குக் கீர்த்தியைக் கொடுத்தன. தற்காலம் இவைகளனைத்தும் மறந்துபோய், படித்த சிறுவர்கள் அந்தப் பாஷையில் எழுதவாவது, பேசவாவது திறமையில்லாமல், அந்தரங்கமாய் நடக்கும் விவகாரங்களைக்கூட ஆங்கிலமாகிய அன்னிய பாஷையில் நடத்துகிறார்கள். இந்த நிலைமையைக் கண்டு துக்கப்படாத தமிழ் இந்தியர் இருப்பதும் காலம் மாறிவருவதைக் குறிக்கின்றது.

இந்தியாவின் சரித்திரத்தில் எத்தனையோ மகான்கள் காலாந்தரங்களில் தோன்றி, சிஷ்ட பரிபாலனமும் துஷ்டநிக்கிரகமும் செய்து மறைந்திருக்கிறார்கள். எத்தனையோ ஞானவான்கள் பின்னால் வரப்போகிற ஜீவகோடிகள் அறிந்து உய்யும் பொருட்டு அருமையான நூல்கள் எழுதிவைத்துப் போயிருக்கிறார்கள். எத்தனையோ தர்மராஜ்யம் செய்த அரசர்களும் ராஜதந்திரிகளும் யுத்த வீரர்களும் அதிசயமான வீரச்செயல்கள் செய்து போயிருக்கிறார்கள். இவ்வாறே பலர் வைத்தியம், சங்கீதம், சிற்பம், தொழில், சாஸ்திரம் இவைகளில் நிகரற்ற நிபுணர்களென்று பேர் வாங்கி மறைந்துபோயிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் மேற்றிசைத் தேசங்களில் வாழ்ந்திருந்தார்களானால், அவர்களின் ஞாபகம் தற்கால ஜனங்களின் மனதில் அழியாமல் நிலைத்திருக்கும்படி அவர்களைப்போல் உருவப்படங்கள் எழுதியாவது, அவர்கள் பேரால் வேறு தர்மங்கள் செய்தாவது ஜனங்கள் தாங்கள் அப்பெரியோரிடம் பெற்ற அபார நன்மைகளை உணர்ந்ததாகக் காட்டியிருப்பார்கள். நம் தேசத்தில் அப்படிப்பட்ட வழக்கம் இதுவரையில் ஏற்படவில்லை. ஆதி சங்கராச்சாரியருடைய ரூபம் எப்படியிருக்குமோ, அதைப் பல புஸ்தகங்களில் காணும் வர்ணனையைக் கொண்டு வரைந்த படங்கள் மூலமாகவே அறியக்கூடியதாயிருக்கின்றது. இது எத்தனைத் துக்ககரம்? இவ்விதமே இந்தியாவில் தோன்றும் பெரியோர்

களைப் பூஜிக்காமலும், போற்றாமலும் மறந்துவிடுகிறார்கள். மதாசாரியார்கள் மட்டுமல்ல; சங்கீத வித்வான்களிற் பலர்பிற்காலத்தவரின் ஞாபகத்துக்கு உரியவர்களா யிருக்க, அந்த ஞாபகம் நிலைக்கும்படியாய் எதுவுமே செய்யப்படவில்லை. இவ்வாறே மற்றத் தொழில்களிலும், கலைகளிலும் பல வித்வசிரோமணிகள் தோன்றி அழிந்துபோயிருக்கிறார்கள். மேற்றிசை நாடுகளில் பரத சாஸ்திரம் கற்று அதைத் தொழிலாகச் செய்து ஜீவித்த நிபுணர்கள்கூடக் கவர்ன்மெண்டாலும் ஜனங்களாலும் மதிக்கப்படுகின்றார்கள். இந்தியாவில் இராஜாங்க சம்பந்தமாய்க் கீர்த்தி பெற்ற பெரியோர்களைமட்டும் நாம் அங்கீகரித்துப் பகிரங்கமாய்ப் புகழ்கிறோமேயன்றி மற்ற வழிகளில் அருமையான சக்தியைப் பெற்று ஜனோபகாரம் செய்து, சுத்தமான சித்தத்தாலும் அருமையான காரியங்களாலும், புனிதம் பெற்ற பலரை நாம் அங்கீகரிக்க வெட்கப்படுகிறவர்களைப் போலக் கைவிட்டு, பிற்காலத்தினர் அவர்களை யறிய வழியில்லாமற் செய்துவிடுகிறோம்.

ஃ

ஜெர்மானியர் தங்கள் நாட்டைப் பெற்றெடுத்த நாடெனச் சொல்லுகின்றனர். அமெரிக்கர்கள் தங்கள் தேசத்தைக் கடவுளுடைய நாடென்கின்றனர். கானடா தேசத்தார் தங்கள் நாட்டைச் சொர்க்க பூமி என்கின்றனர் தாய்நாட்டினிடம் அன்பில்லாதவர்கள் அத்தேசத்தில் வசிக்கத் தகுந்தவர்களல்லர்.

ஃ

மனிதரைக் கொடுமைக்குட்படுத்தும் ஒரு வழக்கத்தை, அது கொடுமை என்று தெரிந்த பின்பும் அதை ஒழிப்பதற்கு ஆக்ஷேபனை செய்வது மகா கொடுமையாகும்.

ஃ

பலாத்காரத்தை எப்பொழுதும் அடக்கிவிடலாம். ஆனால், சுவாதீனப் பிரியத்தை ஒருநாளும் அடக்க முடியாது இது ஒரு சிறு பையனின் விஷயத்திலுங்கூட.

ஃ

காலரீதி உலகமெங்கும் மாறுபாடடைந்து வருவதால், இந்தியாவிலும் மாறுதலுண்டாய் வருகிறது. அவனவன் தன்னுடைய நன்மையைக்கோரி வேலை செய்யவேண்டியதுடன், தேசத்திற்காகவும் ஸமூகத்திற்காகவும் வேலை செய்யக் கடமைப்பட்டிருக்கிறதாக இப்பொழுது உணரப்பட்டு வருகிறது.

ஃ

ராஜீய முன்னேற்றமில்லாமல் செல்வவிருத்தி செய்வது சாத்தியப்படமாட்டாது. செல்வவிருத்தியுடன் படிப்பும் வேண்டும். இம்மூன்று வழிகளிலும் நாம் ஓங்கிவிட்டால், தேசத்தின் லட்சியம் கிட்டிவிடலாம், அவ்விதம் ஓங்குவது என்நாளோ!

ஃ

இந்தியாவின் லட்சியம் ஒன்றே ஒன்றுதான்; அதாவது, மற்ற சுவாதீனமுடைய ஜாதியார் தங்களுடைய தேசங்களில் என்ன அந்தஸ்தில் இருக்கிறார்களோ, அதே அந்தஸ்தில் இந்தியாவில் தாங்கள் பிரிட்டிஷ் ஆக்ஷியின்கீழ் இருக்கவேண்டுமென்பதே இந்தியரின் லட்சியம்.

நாம் பிறருக்கு உதவி செய்தால்தான் தெய்வம் நமக்கு உதவி செய்யும். நாம் பிறரை நயவஞ்சகமாக ஏமாற்றிவிட முயன்றால், தெய்வம் நமது மனோரதங்களையும் ஏமாறிப் போகும்படி செய்வித்துவிடும்.





இன்று கூடிய நமது கடையில் "பொருமைக்காரனிடம் நீ செய்ய விருக்கும் ஏற்பாடுகளையோ, உனது காரியங்களையோ காட்டாதே; நீயோ பொருமைக்காரனிடம் சந்தோஷத்தோடும் சொல்லுகிறாய். அவனோ உனது சங்கதிகளைக் கெடுக்க என்ன வழி யென்று யோசித்து, அதற்கு எந்த இடத்திலே வேலை செய்தால் தவறாது பலிக்குமென்று சிந்தித்து, அதே முயற்சியாக இருந்து உன் காரியங்களை நிறைவேறாதபடி செய்து விடுகிறான். பிறகு இவ்வளவும் அவனால் நடந்ததென்று அறியும்போது நீ திடுக்கிட்டுப் போகிறாய். பொருமைக்காரனை விரோதித்துக்கொள்வதும் பிசகு; அவனிடம் உன் விஷயங்களைப் பிரஸ்தாபிப்பதும் பிசகு. அவனோடு சேர்ந்துகொண்டு ஒரு சங்கதியில்பேசினால், நீ இப்படிப் பேசினாயென்று அதையும் வெளியில் சொல்லி உன்னைப் பலரும் பகைக்கச் செய்து விடுவான். அவனுக்கு எதிரிடையாகப் பேசினும், அதிலுங் கோபங்கொண்டு கெடுதி செய்ய நினைப்பான். எந்த வழியிற்போனாலும் அவனால் தொல்லைகளே சூழும். நீ மௌனமாக உட்கார்ந்திருந்தாலும் உன்னிடம் வலிய வந்துபேசி, அதன் மூலமாகவும் ஒரு சச்சரவை விளைவிப்பான்" என்று நன்னெறி அல்லா பிச்சை கூறினார்.

ஃ

"குமாரனை நம்பாத தாயின் மூலமாகவும், மனைவியை நம்பாத கணவனின் மூலமாகவும் மூன்றாவது மனிதர்கள் லாபம் அடைகிறார்கள். ஒரு தாய் தன் குமாரனை விரோதித்துக்கொண்டு தன் மருமகளுக்குத் தான் செய்துபோட்ட காசுமாலையை 400-ரூபாய்க்கு விற்றுவிட்டு, தன் கைக்கு வந்த நோட்டுகள் சரியாக இருக்கிறதாவென்று மூன்றாவது மனிதனைப் பார்க்கும்படி சொன்னாள். அவனோ அந்த நோட்டுகளில் நூறு ரூபாய் நோட்டுகள் இரண்டைத்தான் எடுத்துக்கொண்டு, அதற்குப் பதிலாக பத்து ரூபாய் நோட்டுகள் இரண்டை அதற்குள் சேர்த்துவிட்டு எல்லாம் சரியாக 400-ரூபாய் இருக்கிறதென்று கூறினான். சில தினங்கட்குப் பிறகு அந்தத் தாய் நோட்டுகளை எண்ணிப் பார்க்கையில் மூன்றாவது மனிதன் செய்த மோசம் தெரியவந்து ஏங்கினாள். மனஸ்பூர்வமாக ஒருவருக்குத் துரோகம் செய்கையில், தானே பிறரால் வஞ்சிக்கப்பட்டு ஏமாறும்படி நேர்கிறது" என்று எல்லப்ப அழகிரி சாம்பசிவச் செட்டியார் பகர்ந்தார்.

ஃ

"தமது மக்களைத் தாம் எவ்வளவுக்கும் சீறிச் சினக்கலாமென்று அளவுக்கு மீறித் தாய் தந்தையர்கள் துள்ளிக் குதிப்பதில், அது குடும்பத்தையே ஸர்வநாசம் செய்து விடுகின்றது. ஒரு சிறுவன் ஸ்கூல்பைனல் பரீக்ஷையில் தவறிப்போய், அதற்காக நாணமுற்று இனி அந்தப் பள்ளிக்கூடத்தில் வாசிக்க முடியாதென்றும் வேறு பள்ளிக்கூடத்திற்கு மாற்றிக்

கொள்வதாகவும் கூற. அவனது தாய் அதற்கு இணங்காமல் கடுகடுத்துக் கேவலமாய்ப்பேசினுள். இதை அந்தச் சிறுவன் தாளாமல் ஆற்றில் விழுந்து மடிந்தான். அச்சிறுவனுல் அபி விர்த்தி யடையவேண்டிய குடும்பம் அத்துடன் கெட்டு, நாளுக்கு நாள் தாழ்ந்து, கடனும் அதிகமாகி, வீட்டையும் விற்க நேர்ந்து பரம கஷ்ட நிலைக்கு வந்து விட்டது. ஒருவரால் ஆகக்கூடிய அபிவிர்த்தி மற்றெருவ ரால் ஆகிறதில்லை. அந்த ஒரு மனுஷ்யன் உயிரோடிருந்தால் எவ்வளவு பிரபலமும் செழிப்பும் உண்டாகக் கூடுமோ, அது மற்றவர்களால் ஆகிற தில்லை. கடவுள் அவ்வித சக்தியை அந்தந்தக் குடும்பத்தில் குறித்த ஒருவருக்கே தான் கொடுத்திருக்கிறுர். அவரோடு அந்த வாழ்வும் முடிவுக்கு வந்து விடுகிறது. அந்த ஒருவர் சிறு குழந்தையாகவோ, பெண்ணுகவோ, வயது வந்தவர்களாகவோ இருக்கலாம். அத்தகையோரிடத்தில் மதிப்பு வைக்காமல் கேவலப்படுத்தித் தூறினுல் அதன் பலனை அனுபவிக்க வேண்டியதுதான்" என்று ஆமவடை அழகுப் பண்டாரம் புகன்றுர்.

ஃ

"கணவனேடு ஒற்றுமையாயிராத மனைவிக்கு அதற்குத் தகுந்தது போல் ஒரு ஆசை நாயகன் ஏற்படுகிறுன்! அவன் வெகு விசுவாச உறவாக நடக்கிறுன். புருஷனுக்கு மனைவியின் மீது சந்தேகம் உண்டாகி அடிக்கடி சச்சரவும் ஏற்படுகிறது. அவளோ தன்னைப் பதிவிரதைபோல் காண்பித்துக்கொண்டு, புருஷன் தன்னைச் சந்தேகிப்பது பெரிய அக்கிரமம் என்கிறுள். இவ்விதம் சில தினங்கள் வரை நாடகம் நடத்தி விட்டுப் பிறகு தனது நகைகளோடும் தனது ஆசை நாயகனுடன் வெளியூருக்கு ஓடி விடுகிறுள். அவள் கணவனுக்கு அந்த சமயம் எவ்வளவோ ஆத்திரம் உண்டாகிறது. பிறகு மனம் தேறி இவ்விதம் நடந்து விட்டதும் ஒரு நன்மைக்கே யென்ற முடிவுக்கு வருகிறுன். ரகசிய விபசாரியான ஒரு மனைவியுடன் கூடி வாழ்ந்து தொல்லைப்படுவதில், அவளை விலக்கி விடலாமோ வென்றுல், அவள் பத்தினிப் பெண்ணுகப் பாசாங்கு செய்வதால், பந்து ஜனங்கள் அவ்விதம் விலக்குவதற்கு ஒப்புகிறதில்லை. அநியாயமாக ஒரு பெண்ணைச் சந்தேகிப்பதா என்று கணவனைத் தூற்றி வைக்கிறுர்கள். இப்போதோ அவள் பகிரங்கமாகவே வீட்டைத் தாண்டி ஓடி விட்டதில், நகைகள் சேதமாயினும், ஒரு துஷ்டையினுடைய சம்பந்தம் தீர்ந்ததே யென்று சந்தோஷப்பட முடிந்ததற்கு அவன் திருப்தி யடைகிறுன். இனி அப்பெண் என் ஜீவனத்துக்கு என்ன வழி என்று அவனிடம் பாத்தியம் கொண்டாடிக் கேட்க இடமில்லாதது எவ்வளவோ சௌகரியாகிவிடுகிறது. இனி, வேறு கல்யாணத்துக்கு ஏற்பாடுமாகி விவாகமும் நடந்து, புதுப் பெண்ணும் வீட்டுக்கு வந்துவிடுகிறுள். பழயபடி குடும்பமும் புதிதாகக் கூடிக்கொண்டு. பழய தடிக்கழுதை வைத்துவிட்டுப்போன பெட்டி, சட்டி

பறையடிக்கும் தொழிலைச் சிலர் மேற்கொண்டிருக்கின்றனர். அவர்கள் பிறர் வேண்டாமலே வார்த்தைகளைக் கொட்டுவர். அவர்களின் வாயினின்று புறப்படும் அஸங்கிய மொழிகளெல்லாம் அறிவுடையோருக்கு அருவருப்பையே தரும். எப்போதும் பிறரை நிந்திப்பதிலும், பிறருக்கு அவமானத்தை விளைத்து அவர்களின் நற்பெயரைக் கெடுப்பதிலும் துஷ்டர்கட்குப் பரம ஸந்தோஷமன்றே ?

நகை வகை சேலைகள் சாமான்கள் யாவும் புதுப் பெண்ணுக்குச் சொந்தமாய் விடுகின்றன. ஓடிப்போன கட்டைக்கு அவளைக் கூட்டிப்போன திருட்டுப் புருஷன் ஒருவன் மட்டுமே சொந்தமாகி. அவனும் பிறகு கைவிட்டு விடுகிறான்" என்று ஏமாறாத ஏகாம்பர ஜெகதீச முதலியார் நவின்றார்.

ஃ

"பூவாடைக்காரி" என்று ஒரு குட்டித்தேவதை யுண்டாம். அது விநாயக சதுர்த்தியன்று ஒருவரின் மனைவிமீது வந்து, "உன் உறவினர் ஒருவர் இறந்து அந்தத் தீட்டு இன்னும் உன்னை விட்டுப்போகாதிருக்கையில் நீ பூஜை செய்தது தப்பு" என்று ஆவேசமாய்க் கூறினாள். அதற்கு அந்த வீட்டுக்காரர் "கடவுளுடைய நாமத்தை எந்த சமயத்திலும் நினைக்கலாம், பூஜிக்கலாம், கோயில்களுக்குத் தீட்டாக இருக்கையில் போகக் கூடாதேயன்றி வீட்டில் பகவானைத் தியானிப்பது குற்றமாகாது" என்று கூறிவிட்டு, "நான் பரம பிதாவாகிய கடவுளை வணங்குவதேயன்றி சில்லரைத் தெய்வமான உன்னை மதியேன்; இனி இங்கு வந்தால் துடைப்பத்தால் சிங்காரிப்பேன்" என்று கோபத்துடன் கர்ஜிக்கவே, பூவாடைக்காரி யென்ற ஆவேசமும் மறைந்து விட்டது. சில்லரைத் தேவதைகளை லக்ஷியம் செய்யாதவர்களிடம் அவைகள் நெருங்குவதுமில்லை, சேஷ்டைகள் செய்வதுமில்லை" என்று பக்த கோலாகல பரசுராம் இயம்பினார்.

ஃ

"எவரெவர்கள் நம்வீட்டுக்கு வந்து வாரிக்கொண்டுபோக நினைக்கிறார்களோ, எவரெவர் அன்பற்றுத் தங்கள் காரியத்துக்காக வீட்டுக்குள் நுழைந்து உறவு பிடிக்கிறார்களோ, அத்தகையோரை அருகில் சேர்க்காமல் விலக்கிவிட்டால், ஒரு விசேஷத்தின்போது வீட்டிற்கு வாங்குகிற பண்டங்கள் உடனே அன்றைக்கே செலவாகி விடாமல் நாலைந்து நாளைக்கும் வரக்கூடியதாக இருக்கும். சுற்றிக் கொண்டுபோக வருகிறவர்கள், ஒரு விசேஷத்திற்கு வாங்கிய பண்டங்களில் மிச்சப்பட்டவைகளையும் மூட்டைக் கட்டிக்கொண்டு போய் விடுவதால், மறுதினமும் கடைச் செலவுகள் வாங்க வேண்டியதாக நேர்கிறது. இத்தகையோரை நம் வீட்டுக்கு வரவழைத்துச் செல விடுவதில் ஒரு பயனுமில்லை. அந்தப் பணம் நமது கையிலிருந்தால் நமது சமயத்துக்கு உதவும்" என்று டமாரம் பக்கா பாண்டுரங்கப் பச்சடிச் செட்டியார் உரைத்தார். இத்துடன் நமது கடையும் பூர்த்திபெற்றது.

'பஹதூர்' பொன்வண்டு செட்டியார்.

கடவுள் தமது அன்பர்களுக்கு இன்பமான நித்திரையை அனுக்கிரகித்து, அவர்களின் கவலையை மறந்து மனோ நிம்மதி பெறுமாறு புரிகிறார்.

உலகத்தில் பிறந்த நாம் அதை நல்ல நிலைமைக்குக் கொண்டு வராமல் சும்மா இருப்பது தீது. மற்றொரு உலகத்தைத் தேடிச்செல்லுமுன் இவ்வுலகத்தில் நாம் இருக்கும் வரை நல்லவர் என்ற பெயர் பெற்றுப் பிறருக்கு இயன்றவரை உதவி செய்து சுகியா யிருக்கவேண்டும். அவ்விதம் செய்யாத சோம்பேரிகட்கு மறு உலகம் வழிவிடாது. நரகம் அவனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும்.

ஜப்பானியரின் விநோத ஆசரணைகள்.

யுத்தம் என்ற கௌரவப் பேச்சால் மரணம் கொலை என்கிற மஹா பாதகத்தை மறைக்க முயலுவதுபோல, "நாகரீகம் அடைந்த நாடு" என்ற புகழ்ச்சிப்பெயரால் எத்தனையோ கொடுமை, அநீதங்களை மூடிக் கௌரவப்படுத்தப்படுகின்றன. தற்கால நாகரீகமானது தேவத்தன்மையை யடையும் வழிகளை முட்களால் நிறைத்துவிட்டு, மனித நிலைமையிலும் குறைந்து, மிருக நிலைமையில் மிலேச்சத்துவமான பாதைக்கு இட்டுச் செல்லுகின்றது. ஜப்பானுக்கும் இதில் பங்கு உண்டு.

ஃ

சூரியனது பிறப்பிடம் :—நாம் வசிக்கும் ஆசியாக்கண்டத்தின் கீழ்ப் பாகத்தில், அந்தக் கண்டத்தினின்று ஸமுத்திரத்தால் பிரிக்கப்பட்டு விளங்கும் சில தீவுகளின் சங்கிலியே ஜப்பான் தேசமெனப்படும். ஜப்பான் தேசமுழுமையும் பெரிய ஜப்பான் என்றும், அதன் கீழ்ப்பாகம் "சூரியனது பிறப்பிடம்" என்றும் கூறப்படுகின்றன. கீழ் ஸமுத்திரத்தில் பிரகாசிக்கும் பிரதான தேசமாய் ஜப்பான் விளங்குவதாலும், முதலில் அவர்களுக்கே சூரியோதயம் புலப்படுவதாலும், சூரியனுடைய பிறப்பிடம் என்றும், உதய சூரியனுக்கு உவந்த இடமென்றும் அத்தேசத்தாரால் புகழப்படுகின்றது.

ஃ

மூவாயிரம் தீவுகள்:—ஜப்பான் தேசம் முக்கியமாய் நான்கு தீவுகளானபோதிலும், மொத்தத்திற்கு மூவாயிரம் தீவுகள் சேர்ந்தே ஜப்பான் இராஜ்யமாகும். அநேகம் தீவுகள் வெறும் கற்களாயும் பயிரிடாமலும், ஜனங்கள் வசிக்காமலும் பாழாய்க்கிடக்கின்றன. ஆயினும் பல தீவுகள் அழகு வாய்ந்தும், பெருமையடைந்தும், பயிர்களால் செழுமை விளைத்தும் பலவிதத்திலும் பலன் கொடுக்கின்றன. சில தீவுகளுக்கிடையில் கப்பல்கள் தங்கும் ஹார்பர்களாக மொத்தம் ஐம்பத்தாறு ஹார்பர்கள் (துறைமுகங்கள்) இருக்கின்றனவாம்.

ஃ

எட்டிதழ் தாமரை:—இது ஒரு மலை. இது மிகவும் மகிமையுள்ளதென்று ஜப்பானியர் வணங்குவர். இதன் உச்சி எட்டு இதழ்களையுடைய விரிந்து பரந்த தாமரையைப்போலிருக்கிறது. இதற்கு ஐந்து சிகரங்களுண்டு. கோடைகாலத்தில் இதன் உச்சிவரைக்கும் ஏறிச்சென்று தொழுது திரும்புவர். இதற்கு 'ப்யூஜியாமா' என்று மற்றொரு பெயருமுண்டு. இதனுடைய விசேஷம் யாதெனின், தன் சிகரங்கள் பல பக்கங்களிலிருந்து பார்ப்பவர்களுக்கும் தெரியும்படியாக இருப்பதேயாம். பதினைந்து மாகாணங்களுக்குக் குறையாமல் இந்த சிகரங்கள் தெரிகின்றன. இந்த மலை 1708-ம் வருஷத்தில் எரிமலையாக வெடித்து அனர்த்தம் விளைத்ததென்று தெரிகிறது.

ஃ

எரி மலைகள்:—ஜப்பானில் அநேகம் எரிமலைகள் இருக்கின்றன. எரி

லக்ஷ்மீ, சரஸ்வதி முதலிய பதங்கள் ஹரிஜனச் சிறுவர்களின் வாயில் உச்சரிக்க வருவதற்குத் தான் வெகு கஷ்டப்பட்டதாக ஒரு பிராமண பண்டிதர் பகர்ந்தார்.

மலைகளின் விபத்தால் சுடு சாம்பல் மழையும், நெருப்பு மழையும் பெய்வது வழக்கம். அநேக ஜனங்கள் இதனால் நாசமடைந்து, வீடுபோய், வாசல்போய், மக்கள்போய், மனிதர் போய், பட்டினிகிடந்து பரிதபிப்பது சர்வ சாதாரணம்.

ஃ

வெய்யில்கால வெள்ளம்:—வெய்யில் காலத்தில் மலைகளிலுள்ள பனி உருகி அசாத்தியமான வெள்ளக்காடாய்ப் போவது வழக்கம். பெரும் வெள்ளமாய்ப் புரண்டு ஊரையும், நாட்டையும், பயிரையும், சொத்தையும் பாழாக்கிவிடும்.

ஃ

வெந்நீர்க் கிணறு:—ஜப்பான் தேசத்தில்போல வெந்நீர் ஊற்றுகள் உலகத்தில் வேறெங்கும் கிடையா. நூற்றுக்கணக்காய் எங்கு பார்த்தாலும் காணும். ஊற்றுகளில் சில பொறுக்கும் திட்டமுடைய வெந்நீர் கொண்டவைகளாயும், வேறு சில மிகவும் கொதிப்பவைகளாயும் இருக்கின்றன. அநேகமாய் இவைகள் கந்தக நீராயிருப்பதால் சிரங்கு முதலிய நோய்களுள்ளோர் அங்கு சென்று அவைகளில் ஸ்நானம் செய்து வருகிறார்கள்.

ஃ

பூகம்பமும், பூகம்ப மீனும்:—பூமியை ஒரு மீன் தாங்கிக்கொண்டிருக்கிறதென்றும், அந்த மீன் அசைவதால் பூகம்பம் உண்டாகிறதென்றும் ஜப்பானியர் நம்புகின்றனர். ஜப்பானில் பூகம்பத்தின் சேதங்கள் அதிகம். கி. பி. 416, 599, 679, 1702, 1854, 1855—இவ்வருஷங்களில் உண்டான பூகம்ப அனர்த்தம் அதிக பயங்கரமானது.

ஃ

வைக்கோல் லாடம்:—குதிரைகளுக்கும் எருதுகளுக்கும் வைக்கோல் லாடங்கள் அடிக்கப்படுகின்றன. கற்கள் நிறைந்த கரடுமுரடான வழிகளிலும், நெருங்கின வழிகளிலும் கால்கள் அடிபடாமலிருப்பதற்கு இவ்விதமான லாடங்களை அடிக்கிறார்கள்.

ஃ

மரவீடுகள்:—ஜப்பானியர்களுடைய வீடுகள் மரங்களால் கட்டப்பட்டவை. அவைகள் மரக்கம்பங்கள் நாட்டி, பலகைகளால் தரை செய்யப்பட்டிருக்கின்றன. கூரை ஓடுகளாலாகிறது. பூமிக்குமேல் குறைந்தது 18-அங்குலத்திற்குமேல் தான் வீட்டின் தரை அமைக்கப்படும். தரையில் ஒன்றரை அங்குலம் கனமுள்ள வைக்கோல் பாய் பரப்பியிருக்கும். இந்தப் பாய்கள் சாதாரணமாக ஆறு அடி நீளமும், மூன்று அடி அகலமும் உள்ளவை. காகிதத் திரைகளாலேயே அறைகள் தடுக்கப்பட்டிருக்கும். தனவந்தர்களின் வீடுகளில் இந்தப் படுதாக்கள் பட்டுத் துணிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஓர் அறையின் ஓர் பக்கத்தில் சிறிய மேடையொன்று வகுக்கப்பட்டு, அதன்மேல் பல அலங்காரமான சாமான்கள் வைத்து அழகு செய்யப்பட்டிருக்கும். சாதாரணமாய் ஜப்பானில் இரண்டு அடுக்கு மெத்தைகளுக்குமேல் காண்பதரிது. சத்திரங்களிலும் சாவடிகளிலுந்தான் நாலடுக்கு மெத்தைகளைப் பார்க்கலாம் வீடுகளில் நாளுபக்கங்

பணம் கொடுத்து வாங்கிய மருந்துதான் அதிக குணம் தருமென்றும், இலவசத்தில் ஆஸ்பத்திரிகளில் பெறுகிற மருந்து குணம் செய்யாதென்றும், காசு செலவிடப் பின்னடைந்தே ஆஸ்பத்திரிகளுக்கு ஓடுகிறார்களெனவும் சிலரது அபிப்பிராயம்.

களிலும் அட்டைக் கடிதங்களால் கதவுகள் வகுக்கப்பட்டிருப்பதால், சட்டங்கள்போல் தள்ளித் தள்ளிப்போட முடியும்.

ஃ

ஜனத்தொகை:— ஜப்பானில் அநேக இடங்களில் பல மைல் தூரம் வரையில் வீடு நாடு ஒன்றும் காணப்படுவதில்லையாம். ஜப்பானியர் மொத்தத்தில் மூன்றரைக்கோடி ஜனங்கள் என்று தெரிகிறது.

ஃ

மதம்:—ஜப்பானியர் புத்தசமயிகள். ஷின்டோ மதத்தினர்கள் விக்கிரகத்தைத் தொழுவதில்லை. ஆயினும், யாதாமொரு வஸ்துவிலே கடவுள் ஆவிர்ப்பவித்திருக்கிருரென்று எண்ணுகின்றனர். ஷின்டோ கோவில்கள் வெள்ளைப் பலகைகளால் ஆடம்பரமின்றிக் கட்டப்பட்டிருக்கின்றன. ஆடம்பர நடத்தைகள் ஷிண்டோ மதஸ்தர்களிடம் கிடையா. ஒவ்வொருவரும் தமது மனஸாக்ஷிக்கு விரோதமில்லாது நடக்கிற வரையில் யாதொரு பிசகில்லை யென்பதும், இந்தக் காரணத்தால், தர்ம சாஸ்திரமும் ஒன்றும் வேண்டாமென்பதும் இவர்களின் கொள்கை.

ஃ

வளைந்த வாசற்படி:—ஒவ்வொரு ஷின்டோ கோவிலுக்கு எதிரிலும் இரண்டு கம்பங்கள் நாட்டி வாசற்படி வளைந்ததாய்க் கட்டப்பட்டிருக்கும். கடவுளுக்கென்று ஸமர்ப்பிக்கப்படும் பறவைகள் அதன்மீது உட்காருவதற்கென்றே கட்டப்பட்டவையாம். பறவைகளை ஸமர்ப்பிக்கிறதென்ருல் கடவுளுக்கு ஆகாரமாகவன்று. பொழுது விடிந்ததென்று கடவுளுக்குத் தெரிவித்துத் தோத்திர ரூபமாகத் திருப்பள்ளி யெழுச்சி பாடுவதற்காகவே பக்ஷிகள் சமர்ப்பிக்கப் படுகின்றனவாம். இவ்வாறு முதலில் சில வளைவு வாசற்படிகள் ஏற்பட, இப்போதோ அந்த வாசற்படிகள் எங்கும் மிகுத்து விட்டன.

ஃ

சோற்றுத் தெய்வம் :—ஜப்பான் தேசத்தில் ஆயிரக் கணக்கான தெய்வங்கள் வணங்கப் படுகின்றன. கிருபைத் தெய்வமென்றும், சோற்றுத் தெய்வமென்றும், காற்றுத் தெய்வமென்றும், இடிக்கு முதல் தெய்வம் என்றும், எண்ணிறந்தன அத்தேசத்தில் உண்டாம். இத்தெய்வங்கள் பல வேறு வகைப்பட்டனவாய் இருக்கின்றன. திருஷ்டாந்தமாக, கிருபைத் தெய்வத்திற்கு அநேக முகங்களும், ஆயிரம் கரங்களும் காணப்படுகின்றன. காற்றுத் தேவதைக்குக் கால்களில் இரண்டு பெரு விரல்களும், கைகளில் நாலு விரல்களுமே யிருக்கின்றன.

ஃ

நோய் தீர்க்கும் தேவதை:—இது மரத்தாற் செய்யப்பட்டுக் காலை முடக்கி உட்கார்ந்து கொண்டிருக்கும். நோய் தீரவேண்டியவர்கள் துட்டை அதன் எதிரிலிருக்கும் பெட்டியில் போட்டு, கையைக் கட்டி வாயைப் பொத்தி நிற்பார்கள். பின்னர், நோயுள்ளவர்கள் எந்த இடத்தில் நோயிருக்கிறதோ அந்த இடத்தில் விக்கிரகத்தைத் தடவிக் கொடுத்து, தம் உடம்பில் நோயுள்ள இடத்தில் தடவிக்கொடுப்பார்கள்! ஆனால், கிருபைத் தேவதைக்கு மாத்

நான் எப்படிச் செய்தால் கடவுளின் திருவுள்ளத்துக்கு உவப்பா யிருக்குமோ அப்படிச் செய்யவேண்டுமென்று என் மனதிலே ஓர் தோற்ற முண்டாக, அதன்படியே நான் நடந்தவாறுள்ளேன்.

திரம் நேராய்ப் போய் விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டிய அவசிய மில்லை. பேச்சின் மூலமாயாவது, எழுத்தின் மூலமாயாவது விண்ணப் பம் செய்து கொள்ளலாம். கோவி லுக்கு வெகு தூரத்தி லிருப்பவர்கள் ஒரு துண்டுக் கடிதத்தில் தங்களின் குறைகளை எழுதி, அதை உருண்டை யாய்ச் சுற்றி வாயில் போட்டுத் துப்பி விடுவார்கள். அது எந்த வஸ்துவி லாவது ஒட்டிக்கொண்டால், காரியம் பலித்ததென்று கவலையற்றுப் போ வார்கள்!

ஃ

விவாக வேடிக்கை:—ஜப்பானில் பால்ய விவாகம் இல்லை. பிள்ளைக்கு 16-வயதும் பெண்ணுக்கு 13-வயதும் ஆன பிறகே விவாகம் நடக்கும். விவாகத்தை முடிப்பது பெற்றோர் களின் வேலை. ஒரு தோழி மாப்பிள் ளையை ஏற்படுத்தி அவன் மூலமாகப் பெண்ணையும் பிள்ளையையும் தெரிந் தெடுத்து இருவரையும் சந்திக்க வைத்து. இருவரும் ஒருவர்மீது ஒரு வர் பிரியமாகி விவாகத்திற்குச் சம் மதப்பட்டால் கல்யாணமும் உறுதி பெறும். ஆனால், அநேகமாய்ப் பெற் றோர்களுடைய தீர்மானமே விவா கத்தை நிச்சயப்படுத்துகின்றது. பிள்ளையும் பெண்ணும் தனித் தனியே மூன்று பாத்திரத்திலிருந்து மும்மூன்று தரம் அதாவது மொத் தத்தில் ஒன்பது தரம் திராக்ஷ ரசச் சாராயத்தைக் குடிப்பதே கல்யாணச் சடங்காகும். பெண் துக்கக் குறியைக் காட்டும் வெள்ளை யுடையை அணி வது வழக்கம்! இது தனது தந்தை வீட்டிலிருந்து தான் அது முதல் இறந்து விட்டதற்கான அறிகுறியாம். உலகம் பலவிதம்.

பணமாகப் பெற்றால்தான் கணக்கா?

சிலர் பணமாக வாங்கினால்தான் கணக்கென்றும், மற்ற புஸ்தகங்கள், சாமான்களாகப் பெறுவது கணக்கில்லை யென் றும் நினைத்து ஸதா துன்பப்படுத்துகிறார்கள். சிலர் தங்கள் பௌன்டன் பேனாவுக்குத் தாங்கள் மை வாங்காமல் பிறரி டம் இரவலில் மை ஊற்றிக்கொண்டு காலத்தைக் கடத்தி விடப் பார்க்கிறார்கள். தாங்கள் இனாமாகப்பெற நினைக்கிற வைகளும் மற்றவர்கள் பணம் போடாமல் வருவதில்லை யென் பது இவர்களுக்குத் தெரிந்திருந்தும், அதை அறியாதவர் கள்போலக் காட்டி ஏமாற்றித் தங்களுக்கு வேண்டியதைப் பெற்றுச் சென்றுவிடுகின்றனர். அதற்கு என் காசுபோட, அதை இலவசத்தில் அவனிடம் வாங்கிவந்து விடலாமே என் றும் பேசுகிறார்கள். இத்தகையோரைத் தெரிந்துவையுங்கள்.



பி. ஏ.க்களின் பெற்றோர் பிரலாபம்.

பிழைக்க வழி ஒன்றது கிடைக்குமென்றே மகனை
 ‘பீ-ஏ’ படிக்க வைத்தோம்;
பெரும்பாடு பட்டுத் திரட்டிய பல் பொருளெலாம்
 பிள்ளை ‘கல்விக்’(கு) ஆயதே!
தழைக்கும் இனி நம் குடும்பம், மகன் ‘பீ-ஏ’
 தனில் தேறிவிட்டானென
சந்தோடம் எய்தினோம்; அந்தோ! மனுக்கள் பல
 சலியா(து) அனுப்பிவைத்தும்;
நுழையா இடங்கள் தோறும் சென்று மிக கெஞ்சியும்
 நட்பமாய்ப் பத்திரிகையினில்
நோக்கியும் பயனில்லை; வேலையும் கிட்டவில்லை;
 நொந்தாவதென்ன இனிமேல்?
உழைத்திடும் கூலிகளும் கவலையேயின்றி தினம்
 உவகையோ(டு) உண்கிறாரே!
உழல் மகனை முன்-தொழிலில் விட்டிருந்தால், இன்று
 உவகையோ(டு) இருக்கலாமே! (1)

ஃ

இளைத்தவரெலாம் வணிகராகிச் சிறந்தனர்;
 இயம்(பு) அவர் படிப்பு சொற்பம்!
எத்தனை தினங்களோ இரவு பகல் கற்றதால்,
 இன்று பயன் ஒன்றுமில்லையே!
முளைத்த ஒரு நெடுமரம் அனைய மகனுக்(கு) இனியும்
 முணுமுணுக்காமல் உணவு
முப்பொழுதும் தப்பாமல் இடவேண்டியுள்ளதே!
 முன் சொத்தும் தீர்ந்திட்டதே!
களை மிகும் புதல்வனைக் காணில் மிக அழகுதான்;
 கால் சட்டை கோட் பூட்சுதான்!

(மறுபக்கம் பார்க்க)

சிரிப்பை அடக்குதல்.



உங்களுக்கும் சிரிக்கத் தெரியும்; பிறந்து இரண்டு மாதமான குழந்தைக்கும் சிரிக்கத் தெரியும். ஆனால், 'சிரிப்பை அடக்குதல்' என்னும் விஷயத்தில் பலர் பலவிதமாக நடந்து கொள்கிறார்கள். ஏதோ ஒரு காரணத்திற்காக நாம் சிரிக்கிறோம். அச்சிரிப்பு அச்சந்தர்ப்பத்தில் பஹிரங்கமாக அனுபவிக்கும் விஷயமில்லாததாக இருந்தால் உடனே நம் சிரிப்பிற்கு ஒரு 'புல்ஸ்டாப்' போடுகிறோம். இந்தப் புல்ஸ்டாப் (முற்றுப்புள்ளி) போடுவதில்தான் அனேகர் அனேக விதங்களில் வித்தியாசப்படுகிறார்களென்கிறேன். சிலர் கொரேமான பார்வையை வருவித்து சபையின் முன் தோற்றுவித்து அம்மாதிரியாகத் தங்கள் சிரிப்பை வெளிக்காட்டாது மறைக்கிறார்கள். மற்றும் சிலர் சபையின் முன் தங்களின் முகங்களைக் காட்டாது உடனே மறுபக்கங்களில் திரும்பி சிரிப்பு அடங்கும் வரை முகத்தை மறைத்துவிட்டுப் பின் வெளியேகொண்டு வருகிறார்கள். மற்றொரு வகையால் தங்களால் சிரிப்பை அடக்குவதற்கு வழியில்லையேல் உடனே தங்களிட மிருக்கும் கைக் குட்டையையாவது, உடுத்தியிருக்கும் வேஷ்டியின் முனையையாவது உதவிக்கழைத்து அதனால் அவர்களின் வாய்களை மூடிக்கொள்கிறார்கள். மற்றும் சிலர் இவ்வகை ஏதும் முடியாது குலுங்கக் குலுங்க நகைத்து சபைக்கும் கோபம் மூட்டித் தாங்கள் அங்கிருப்பதும் தப்பென்று ஓடி வெளியே போய்ப் பின்னும் சிரிக்கிறார்கள். இக்கடைசி வகையினரின் அவஸ்தையே மிகவும் கஷ்டம்.

ஃ

பள்ளிக்கூடத்தில் பாடம் நடந்து கொண்டிருக்கிறது. பாலர் வகுப்பு—வாத்தியார் பையன்களைக் கூச்சல் போடக் கூடாதென்று அதட்டிவிட்டு ஒரு சிட்டிகைப் பொடி உறிஞ்சினபின் மேஜைமேல் கால்களைத் தூக்கி எறிந்து விட்டு ஒரு தூக்கம் போடுகிறார். ஒரு மூலையிலிருக்கும் நாணு (வகுப்பில் மிகச் சிறியவன்) "என்னைக் கிள்ளிட்டான் சார்" என்று ஒரு மனு வாத்தியாருக்குச் சமர்ப்பிக்கிறான். பக்கத்திலிருந்த

(முன்பக்கத் தொடர்ச்சி)

காசு சம்பாதிக்க ஒருவழியும் அறிகிலான்;
கற்பித்த பயன் என்னவோ?
எளியவரும் இன்ப வாழ்க்கையையே நடத்திட
எம் மகன் கலங்குகின்றான்.
ஏழையிலும் தாழ்மையாய் மேத்தப் படித்தவன்
ஏங்குகின்றா(ன்) இன்(று) ஐயோ! (2)

ஆரியூர்—வ. பத்மநாப பிள்ளை.

["அமிர்தகுணபோதினி" ஆசிரியர் முன்பு எழுதியிருந்த விஷயத்திற்கிணங்க இது பாடலாகச் செய்யப்பெற்றது.]

பையன்களெல்லாம் 'கொல்' என்று சிரிக்கிறார்கள். வாத்தியார் நித்திரையிலிருந்தும் எழுந்து விடுகிறார். பிரம்பைக் கையிலேந்தி சப்தம் உண்டான இடத்திற்கு வருகிறார். குழந்தை நாணு மாத்திரம் வலி பொறுக்கமாட்டாமல் அழுது கொண்டிருக்கிறான். மற்றெல்லோரும் சிரிப்பை அடக்குதலான பரீக்ஷையில் போட்டி போட்டுக்கொண்டிருக்கிறார்கள். சிலர் துணிகளை உபயோகித்தனர். மற்றும் சிலர் மற்ற பக்கங்களில் திரும்பினார்கள். கிட்டு மாத்திரம் எந்த விதத்திலும் சிரிப்பை அடக்க முடியாது கோபாவேச உபாத்தியாயரின் முன் சிரிப்பை அடக்க முயற்சித்துக்கொண்டு திண்டாடுகிறான். வாத்தியார் "நாணுவைக் கிள்ளின கேஸில்" எந்த விதமான விசாரணையும் செய்யாது முதலில் கிட்டுவை பைசல் செய்கிறார். பாவம்! கிட்டு எந்தவிதக் குற்றமும் செய்யவில்லை; ஆனால், சப்தம் உண்டாக்கின குற்றத்தில் கிட்டு வந்து விட்டான். இது எதனால் விளைந்தது? கிட்டு "சிரிப்பை அடக்குதல்" என்ற பரீக்ஷையில் தோல்வி யடைந்ததினால் தானே!

ஃ

பிச்சு அய்யர் கஷ்டப்பட்டு ஒரு துரை யிடத்தில் வேலைக்கமர்ந்திருக்கிறார். பாவம், அவர் துரை துர்வாச முனிவராகவா அவதரித்திருக்க வேண்டும்! முகத்தில் எள்ளு போட்டால எள் வெடிக்கும் என்பது போல் எப்போதும் இருப்பார். அவரிடத்தில் வேலை செய்வதே மிகவும் கஷ்டம். அதிலும் அவருடைய செய்கைகளுக்காக நாம் மனத்தினுள் சிரித்தாலும் வேறு தொல்லை வேண்டியதில்லை. பிச்சு அய்யருக்குச் சிரிப்பை அடக்குதலான பரீக்ஷையில் பூர்ணமான கோழிமுட்டை மார்க்குதான் கிடைக்கும். அப்படியுள்ள பிச்சு அய்யர் துர்வாசமுனிவரான துரையிடத்தில் எவ்வாறு சிரிக்காது வேலை செய்ய முடியும்? முடியாதுபோய், வேலைக்குப்போன மறுநாளே வீடு திரும்ப நேரிட்டு விடுகிறது.

ஃ

தெருவில் போகும்போதே நம் கூட வரும் நம் நண்பர்களோ அல்லது தெரிந்தவர்களோ, அல்லது தெரியாதவர்களோ நம் முன்னால் போகும் ஒருவனைக் குறும்புக்காகக் கிள்ளிவிடுகிறார்கள். (இச்சம்பவங்கள் மிகவும் நெருக்கடியான காலங்களில் தான் நடைபெறும்.) நாம் இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உடனே நம்மில் சிலர் வாய்விட்டுக் குலுங்கச் சிரிக்கிறார்கள். சிலர் மௌனம் சாதிக்கிறார்கள். சிலர் பின்னால் திரும்புகிறார்கள். (குறும்பு செய்தவர்கள் தான் எல்லா சந்தர்ப்பங்களிலும் மௌனம் சாதிக்கும் பேர்வழிகள்.) கிள்ளுண்டவன் குலுங்கச் சிரித்தவனையேதான் குற்றவாளியாக மதிக்கிறான். பாவம்! அதனால் பெரும் கலகமும் ஆரம்பமாய் விடுகிறது. சிரிப்பை அடக்கமுடியாததின் கஷ்டமே இது.

ஃ

நம் வீட்டுப் பெண்கள் செய்யும் பல காரியங்களுக்காக நாம் சிரிக்க நேரிடுகிறது. அப்போதெல்லாம் நம் சிரிப்பை அடக்காது கொல்கொல்லென்று அவர்கள் செய்கைகளைக் கண்டு சிரித்துக்கொண்டே யிருந்தோமானால், அதைவிட வேறு வினை எதும் வேண்டியதில்லை. அன்று

நுட்ப புத்தி யென்பது பிறப்பிலேயே கடவுள் கடாக்ஷித்த உத்தம குணமாம். அது அந்தந்த ஜாதியின் வளர்ச்சிக்கேற்ப இயற்கையிலேயே அது பொருந்துகிறது.

சாப்பாடு கூப்பாடுதான். மற்ற உபசரணைகளும் குட்டிச்சுவர்தான். அன்று முழுவதும் மூக்குச் சிந்தலும் அழுகையுமாய்த்தான் அவர்கள் பொழுதும் போகும். உங்கள் வயிறும் பசியால் வருந்தும். எச்சரிக்கை!

ஃ

மாமி செய்த ஒரு காரியத்திற்காக மருகி குலுங்கக் குலுங்க நகைத்துக்கொண்டு சிரிப்பை அவளின் முன் அடக்க முடியாது திண்டாடி அவளுக்குத் தன்னைப் பார்த்துதான் சிரிக்கிறுள் என்பதைக் காட்டிவிட்டால், பின் மருகி படும்பாடு மருகி ஸ்தானத்திலிருப்பவரே அறிவார்கள். மாமியின் கொடுமை அங்கு உடனே ஆரம்பமாகிவிடும்.

ஃ

சிரிப்பை அடக்குதலான வித்தை மிகவும் கடினமானது. அது பல பெரிய சந்தர்ப்பங்களில் நம்மை மிகவும் கஷ்டத்திற் குள்ளாக்கிவிடும். ஆகையால், எப்போதும் சிரிப்பை வாய்க்குள் அடக்கிச் சமாளித்து ஒரு எல்லைக்குள் வைத்திருத்தல் அவசியமாகிறது. சிரித்தையோ, சீரைக் குலைத்தையோ என்ற பழமொழி ஆழ்ந்த பொருளுள்ளது.

S. ஸ்ரீரங்கராஜு,

அவனுசி.

ஃ

[சிலர் சிரிப்பதேயில்லை. எப்பொழுதும் முகத்தைக் கண்டிப்பிலேயே வைத்து நிற்பர். காரியத்திலேயே கவனமாயிருப்பர். சிரிக்க வேண்டிய சந்தர்ப்பத்திலும் அவர்களின் முகம் கண்டிப்பிலேயே நிற்கும். சிரித்தால் அப்போது பேசிக்கொண்டிருக்கும் வியாபார சங்கதியில் விட்டுக்கொடுத்து நஷ்டப்படும்படி நேருமென்பது அவர்களின் எண்ணம் போலும். சிரிப்பை அடக்கி ஆளுகிற விதத்தை இவர்கள் நன்ருகக் கற்றிருக்கிருர்களென்று சொல்லலாம். வேறு சிலர் சிரித்தபடியே நின்று பிறர் குடியைக் கெடுப்பதில் மிக்க சமர்த்தர்கள். அதிகாரி சிரித்தபடியே தன் குமாஸ்தாவைப் பார்த்து இது சரியில்லை, அது சரியில்லை என்கிருர். குமாஸ்தாவும் வணங்கிப் பதில் சொல்லிவிட்டு மற்ற வேலைகளைப் பார்க்கச் செல்லுகிருர். மூன்றும் நாள், அவருக்கு வேலையில் திறமை போதாதென்றும் வீட்டிலிருந்து கொள்ளும்படியும் அதிகாரியிடமிருந்து உத்திரவு வந்துவிடுகிறது. "ஐயோ! சிரித்துக்கொண்டே மண் போட்டானே" என்று குமாஸ்தா கலங்குகிருர். ஒரு பெண் இருக்கிருள்; அவள் அடுத்த வீட்டுப் பெண்ணோடு வெகு சிரிப்பும் பிரியமுமாக இருப்பதாகக் காட்டிக்கொண்டு, உப்பு புளி மிளகு அரிசி முதல் சுரண்டிக்கொண்டு போகிருள். கடனாகவும் வாங்கிச் சென்று திருப்பியும் சில சமயம் கொடுக்கிருள். விழுங்கி விடுவதும் சில சமயம் நடக்கிறது. பிறகு பணம் பத்திரம் சம்பந்தமான ஒரு சங்கதியில் தன் காரியத்தில் அவள் கண்ணுகிவிட்டு அடுத்தவீட்டுப்பெண்ணுடனும் குலாவ வர, அவளது கபடத்தை அடுத்த வீட்டுப் பெண் எடுத்துக்காட்டித் திட்ட, உடனே கனத்த சண்டை தொடங்கிவிடுகிருள். இவள் முன்பு வெகு நேசம்போலிருந்து சிரித்துக் குலாவியதைக் காரியச் சிரிப்பென்றே சொல்லும்படியாகிறது. சிரிப்பில் எத்தனையோ விதங்களும், விபரீதங்களும், கபடங்களும் உள்ளன. ப—ர்.]

தமிழ் அன்பர் மகா நாடு.

உபசரணைக் கமிட்டி அமைப்பு.

சென்னை, செப் 25—

தமிழ் அன்பர் மகாநாட்டு உபசரணைக் கமிட்டியை அமைக்கும் நோக்கத்துடன், முன்னரே பத்திரிகைகள் மூலம் அறிவித்திருந்தபடி, மயிலை வடக்கு மாடவீதி நெ. 6 இல்லத்தில், கமிட்டி அங்கத்தினராகச் சேர விரும்புவோரின் கூட்டமொன்று 24உ யன்று நடைபெற்றது. மகா மகோபாத்தியாய புரொபசர் எஸ். குப்புசாமி சாஸ்திரியார், ஸ்ரீமான்கள் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி, டி. கே. சிதம்பரநாத முதலியார், வி. வி. கிருஷ்ணசாமி அய்யர், கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி, எஸ். வையாபுரி பிள்ளை, எஸ். சோமசுந்தர தேசிகர், ஈ. விநாயக ராவ், எம். ராகவய்யங்கார், கே. ஏ. நீலகண்டசாஸ்திரி, கே. பாலசுப்ரமணிய அய்யர், ஆர். நாராயணசாமி அய்யர், டி. கே. சுப்பிரமணியபிள்ளை, கே. ஸ்வாமிநாதன், சி. ஆர். ஸ்ரீனிவாசன், கே. ராமனுதன் செட்டியார், கே. எல். நரசிம்மராவ், ஜனுப்கள் பஷீர் ஆமத் சையீத், எஸ். கே. ஆமத் மீரான், ஸ்ரீமதி டி. நல்லமுத்து ராமமூர்த்தி, ராவ்பகதூர், ஆர். கிருஷ்ணராவ் போன்ஸ்லே ஆகியோர் உள்படப் பலர் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தனர். மகா மகோபாத்தியாய எஸ். குப்புசாமி சாஸ்திரியார் தலைமை வகித்தார்.

தேர்தல்.

கீழ்க்கண்டவர்கள் மகா நாட்டு உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உபசரணைக் கமிட்டித் தலைவர்:— மகாமகோபாத்தியாய டாக்டர் வி. சுவாமிநாதய்யர்.

உப தலைவர்கள்:-திவான் பகதூர் வி. அருணசல முதலியார், ஸ்ரீமான் டி. கே. சிதம்பரநாத முதலியார், ஜனுப் ஜமால் மகமத் சாகிப், ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணசாமி அய்யர், டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார், ஸ்ரீமதி எம். லக்ஷ்மி அம்மாள், குமாரராஜா எம். ஏ. முத்தையா செட்டியார், ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார், கனம் பி. டி. ராஜன், ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார், ஸ்ரீமான் வி. ஆர். ஸ்ரீனிவாஸன், டாக்டர் பி. சுப்பராயன்.

காரியதரிசியும் கஜான்ஜியும்:— ஸ்ரீமான் பி. என். அப்புசாமி அய்யர்; கூட்டுக் காரியதரிசிகள்:—ஸ்ரீமான்கள் டி. ஜி. ஆருவமுதய்யங்கார், டி. ஆர். சொக்கலிங்கம், ஆர். விசுவநாதய்யர்.

காரியக் கமிட்டி.

சென்னை புத்தகாலயச் சங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட கனவான்கள் மகாநாட்டுக் காரியக்கமிட்டி அங்கத்தினர்களாயிருப்பர்:—ஸ்ரீமான்கள் கே. வி. கிருஷ்ணசாமி அய்யர், கே. பாலசுப்பிரமணிய அய்யர், எஸ். ஆர். ரங்கநாதன், பி. என். அப்புசாமி, கே. சந்திர சேகரன், எம். எஸ். சபேசன், கே. ஸ்வாமி நாதன், எஸ். வையாபுரிப்பிள்ளை, டி. எஸ். வைத்தியநாதன், ஜனுப்கள் எஸ். எம். பாஸில், பஷீர் ஆமத் சையித், ஸ்ரீமான்கள் எஸ். கே. யக்ஞ நாராயணய்யர், எஸ்.

ஒவ்வொருவரது விஷயமும் அவரின் யோக்கியதாம்சங்களைக்கொண்டு ஆலோசிக்கப் படவேண்டும்.

சத்தியமூர்த்தி, ஆர். கிருஷ்ண மூர்த்தி, ஜி. கே. சேஷகிரி. ஸ்ரீமதி டி. என். ராமமூர்த்தி ஆகியோரும், தலைவர், உபதலைவர்கள், காரியதரிசிகள், கூட்டுக் காரியதரிசிகள் ஆகியோரும். புத்தகாலயப் பிரசார சங்கத்தார் சேர்த்துக் கொள்ளும் வேறு கனவான்களும் காரியக் கமிட்டி அங்கத்தினர்களாயிருப்பர்.

தீர்மானங்கள்.

மேற்கூறியவாறு அமைக்கப்பட்ட காரியக் கமிட்டியினரே மகாநாட்டின் வரவு செலவு அம்சங்களையும், மிச்சமேற்படுமாகில் அந்தப் பணத்தையும் நிர்வகிப்பார்களென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்ற தீர்மானங்களாவன:—மயிலாப்பூரிலுள்ள இந்தியன் பாங்கி கிளையில் தமிழ் அன்பர் மகா நாட்டின் பெயரால் ஒரு கணக்கு ஆரம்பிக்கப் படவேண்டுமென்றும், ஸ்ரீமான்கள் கே. வி. கிருஷ்ணசாமி அய்யர், பி. என். அப்புசாமி அய்யர் ஆகிய இருவருக்குமோ அல்லது அவர்களில் ஒருவருக்கோ பாங்கியில் பணத்தைப் போடவும் வாங்கவும் அதிகாரம் அளிக்கப் படவேண்டுமென்றும் இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

மகா நாட்டைத் திறந்து வைப்பதற்கு ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கனம் திவான் பகதூர் எஸ். குமாரசாமி செட்டியரை மகா நாட்டில் தலைமை வகிக்கக் கேட்டுக் கொள்ள வேண்மொய்த் தீர்மானிக்கப்படுகிறது.

1933 டிசம்பர் மாதத்தில், காரியக் கமிட்டியார் குறிப்பிடும் ஸ்தலத்தில், மகாநாடு கூடவேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

உபசரணைக்கமிட்டி அங்கத்தினர்களனைவரும் மகாநாட்டுப் பிரதிநிதிகளாவர்.

1933 டிசம்பர் 10-ந் தேதிக்கு முன்பாக, பிரதிநிதிகளும், பிரதிநிதிகளாக விரும்புவோரும், தாங்கள் மகாநாட்டில் கொண்டுவர விரும்பும் தீர்மானங்களை மகா நாட்டுக் காரியாலயத்திற்கு அனுப்பிவிடவேண்டும். தலைவர் அனுமதி பெற்றவைகளைத் தவிர, காரியக் கமிட்டியாரால் அஜெண்டாவில் சேர்க்கப்படாத தீர்மானங்கள், மகாநாட்டில் ஆலோசிக்கப்படக் கூடாதென்று தீர்மானிக்கப் படுகிறது. ஃ

["தமிழ் அன்பர் மகாநாடு" நன்கு நிறைவேற வேண்டுமென்று ஹிருதய பூர்வகமாய் விரும்புகின்றோம். இத்தகைய மகாநாடு ஒன்றுகூடித் தமிழ்த் தாயைப் போற்றுவது தமிழகத்திற்கு ஒரு புதிய பெருமையை உண்டுபண்ணுவதாகும். வங்காளத்தில் வங்க பாஷை இப்போது பெற்றுள்ள பெருமைக்கும் செல்வாக்குக்கும் ஸ்ரீ பங்கிம் சந்திர சட்டர்ஜி போன்ற வங்க நாட்டுப் பெரியோர்களின் முயற்சியே காரணம். அவ்விதமே தமிழ் பாஷைக்கும் "தமிழ் அன்பர் மகாநாடு" விசேஷித்த கௌரவத்தையும் வியாபகத்தையும் உண்டுபண்ணவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அந்தந்த நூலாசிரியர்களும், பிரசுரகர்த்தர்களும் தங்களின் நூல்களைத் தமிழ் அன்பர் மகா நாட்டுக்கு அனுப்பி வைத்து, அவர்களின் பரிசீலனைக்கு உதவியாகுமாறு புரிவது நன்றாகும். அவ்விதம் அனுப்ப முன் வருவோர்—"காரியாலயம் தமிழ் அன்பர் மகா நாடு மயிலாப்பூர் சென்னை"—என்ற விலாஸத்துக்கு அனுப்பவேண்டுகிறோம்.—ப-ர்.]

பயத்திற்கு நிவர்த்தி எப்படி?

யாரைத் தான் பயம் என்னும் வியாதி பீடிக்கப்படாமலில்லை? உலகில் முக்காலே மூன்று வீசம் பேர் பயத்திற்கு அடிமைகளே. இனி வரும் நாளில் ஏதாவது துன்பம்வருமோ, துரதிர்ஷ்டம்தொடுமோ என்ற பயம் இன்றைக்கே ஆரம்பித்துக்கொள்கிறது. நாம் எடுத்த காரியங்களை முடிக்கத் தவறினாலும், நமக்குத் துக்கங்கள் நேரிட்டாலும், அந்தத் தவறையும் துக்கங்களையும் நெடுநாள் மறவாமல் நமது ஞாபகத்தில் வைத்துக்கொள்கிறோம். இது நமக்கு ஒரு முன் எச்சரிப்புக்கு உதவியா யிருந்தாலும், அவற்றால் உண்டாகிற பயம் நமது தைரியத்தைப் பலவீனப்படுத்திவிடுகிறது. துணிகரமாய் ஒன்றுக்கு முற்பட்டுச் செய்யக்கூடிய சக்தியை இந்தப் பயம் என்பது குறைத்துவிடுகிறது. நம் வாழ்நாளில் ஒவ்வொரு அனுபவமும் நமது ஞாபகத்தில் பதிந்துவிடுவதில், இந்தப் பயமாகிய அனுபவம் நன்மையும் செய்கிறது, தீமையும் செய்கிறது. அதில் தீமையே அதிகமென்னலாம்.

ஃ

இந்தப் பயம் என்னும் வியாதிக்கு மூலமெல்லாம் கடவுள் நம்மைக் கருணையோடு பார்க்கவில்லை என்பதாக நாம் எண்ணிவிடுவதே தான். இதன்பொருட்டு "தெய்வத்துக்கு நேர்ந்துகொள்ளுதல்" என்றொரு வழக்கமும் தோன்றியிருக்கிறது. அதாவது, பயத்தைப் போக்கும்படியும், நமது கோரிக்கை நிறைவேறும்படியும் பிரார்த்தனைகள் செய்துகொள்வதாம். இவ்விதம் பிரார்த்திப்பதிலுங்கூட ஒரு பயம் நுழைந்துகொள்கிறது. தெய்வத்திற்குப் பிரார்த்தித்துக் கொண்டபடி அந்தப் பிரார்த்தனைகளை நாம் நிறைவேற்றாவிட்டால், தெய்வம் நம்மை அடியோடு கெடுத்துவிடும் என்று நம்பிப் பயத்துடன் அப்பிரார்த்தனையைப் பூர்த்தி செய்வது நமக்குள் அதி ஸஹஜமா யிருக்கின்றது. கடவுளைப் பற்றி இப்படி நாம் துரபிப்பிராயப்படுவது நியாயமாகுமா? விதி—அதிர்ஷ்டம்—ஊழ் இவைகள் என்னென்ன கொண்டுவருமோ என்றும் அஞ்சுகிறோம். நம்முடைய கடவுளையும் மட்டுப்படுத்தி, அவரது கருணையையும் தாழ்வாக எண்ணி, நம்மையும் இழிவான புத்தியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்கிறோம்.

ஃ

பயம் என்னும் வியாதி ஆளுக்குத் தக்கபடியெல்லாம் கோலம் கொள்ளும். நம்மவரிற் பலர் இருட்டில் செல்வதற்கு அஞ்சுவார்கள். இரவில் தங்கள் வீட்டின் கடைசிப் பக்கமிருக்கும் தோட்டத்திற்குச் செல்ல நடுங்குவார்கள். இவர்களைப் பீடிக்கும் பயமானது இவர்களைக் கோழைகளாக்கிவிடுகின்றது. எங்கும் கடவுள் உண்டு என்ற தைரிய சிந்தனையை மேற்கொண்டால் இருட்

"அம்மா! எங்களை ஏனென்று கேட்பா ரொருவருமில்லை; ஏற எடுத்து விழிப்பாருமில்லை; நாங்கள் கெட்ட கேட்டிற்கு எங்களுக்குச் சிநேகிதர்களுமுண்டோ?"

டக்குள் துணிகரத்தோடும் நுழைய லாம். பயத்தினுடைய கேடுதல் சக்திகள் கர்ப்ப சிசுவினிடத்தி லேயே தங்களின் வேலையை ஆரம பித்துக்கொள்கின்றன. தாய் சொள்ளும் ஒரு திகில் அவள்து வயிற்றி லிருக்கும் சிசுவினுடைய உடலி லேயோ, குணத்திலேயோ அஞ்சத் தக்க ஒரு குறையை ஏற்படுத்தி விடுகின்றது. சிசுவினுடைய உயிர்க் கருவிகளுக்குள் ஏறிவிட்ட இந்தப் பயம்—திகில் என்ற விஷம் அதன் பலனைக் காட்டாது போகுமா? பிற் காலத்தில் அந்தக் குழந்தை பயத் திற்கே அடிமையாகிவிடுகிறது. இது தாய் தனது குழந்தைக்குக் கொடுக் கும் ஆஸ்தியாகும்.

ஃ

பயம் என்னும் வியாதி நம்மைப் பீடித்த க்ஷணமே நமது நெஞ்சின் உறுதியும், நமது கல்வியின் ஞான மும் எங்கோ ஓடி யொளிந்து விடு கின்றன. நாம் நடுங்கிப் போகிறோம். பேய் பிசாசுகளின் பயம் பெரியோர் களைப் பீடிக்க, சிறுவர்களையும் குழந் தைகளையும் "பூச்சாண்டி"ப் பயம் பிடித்துக்கொள்கின்றது. பூச்சாண்டி யென ஒன்று இல்லை யென்பதை விளக்கத் தாய் தந்தையர் முயற்சி எடுப்பதே யில்லை. பிளேக்கு முதலிய வியாதிகளால் சாகின்றவர் தொகை கொஞ்சமா யிருந்தாலும், பிளேக்கு, காலரா முதலிய வியாதிகளின் பீதி யினால் மரிப்பவரே அநேகர் என்கின் றனர். ஒருவன் பிளேக்கு வியாதி யைக் கண்டானாம்! எங்கே போகி றாய் என்று கேட்டானாம்! அடுத்த பட்டணத்தில் மூவாயிரம் பேரைப் பலி கொள்ளப்போகிறேன் என்று பிளேக்கு சொல்லிற்றாம்! இரண் டொரு மாதம் சென்றபின் மறுபடி யும் அவன் பிளேக் எமனைக் கண்ட போது, ஏ! கொடிய! மூவாயிரம் பேரைச் சாப்பிடச் சென்ற நீ, முப் பதினாயிரம் பேரையுண்டு எப்ப மிட்டதென்னவோ? என்றானாம்! அதற்குப் பிளேக்கானது—இல்லை, இல்லை, மூவாயிரம் பேரைமட்டும் யான் கொன்றேன்; மற்றையோரைப் பயம் கொன்றுவிட்டது என்று சொல்லிப் போயிற்றாம்! மேலே கூறப்பட்டது கதையேயாயினும், பயத்தின் கெடுதியை நன்கு விளக்கு கின்றதன்றோ?

ஃ

நாம் இவ்வியாதிப் படுக்கையி னின்றும் பிழைப்போமோ என்று எண்ணும் பயமே நம்மை இன்னும் அதிகப் பிணியால் வருந்தச் செய்கி றது. நம்பிக்கைதான் வியாபாரத் துக்கு (தொழிற் கெல்லாம்) உயிரா யிருக்கின்றது. நம்பிக்கை எவ்விடத் தில் நழுவிப் போகின்றதோ, அவ்வி டத்தில் வர்த்தகம் மட்டுப்படுகின் றது; புதுத் தொழில் தொடங்கு வதற்கு நஷ்டம் வருமோ வென்ற பயம் மேலிடுகின்றது. பணம் கொடுக் கல் வாங்கல் நின்றுவிடுகின்றது. தொழில் முயற்சிகள் அற்றுப்போ கின்றன. உள்ள வியாதியும் பெருகி விடுகிறது. அப்பொழுது தான் "கஷ்ட காலம்" நம்மை வருத்துகின் றது. பயமே நம்பிக்கைக் கேட்டிற் குக் காரணம்.

ஃ

ஒன்பது கோடியே இருபது லக்ஷம் மைல் தூரத்திலிருக்கிற சூரியனை, பூமியிலிருந்து ஒருவர் பிரத்தியேகமாய்ச் செய்த வேகமுள்ள பெரிய துப் பாக்கியைக்கொண்டு சுட்டால், அதிலுள்ள குண்டு சூரியன் மீது பாய்வதற்கு நாலரை வருடகாலம் செல்லுமாம்.

இனி, இந்தப் பயப்பிணியை நீக்கும் ஸஞ்சீவி எங்குளது? பயமும் கவலையுமில்லாதிருப்பது மனுஷ்ய ஸ்வபாவத்துக்குச் சாத்தியமா என்பது கேள்வி. நாம் நம் மனத்தைப் பயத்தின் வழியிலிருந்து தைரியத்தின பக்கமாகத் திருப்பவேண்டும். இதுவரை நாம் எண்ணிக்கொண்டிருந்த பயவழியை விட்டு வேறே வழியில் எண்ணவேண்டும். "சக்தி" என்பதெல்லாம் இச்சையின்றே உண்டாகின்றது. நாம் மட்டும் திடமான மனம் கொண்டால் எவ்விதக் கவலையையும், எவ்வித பயத்தையும் ஒழித்துவிடலாம். அந்த சக்தி நமக்குள் உண்டென்பதை நாம் அறியவேண்டும். ஈசுவரனைப் பற்றியும், கடவுள் நம்மை எக்காலத்தும் கைவிடாது காப்பார் என்பதான மனோதிடத்தைப் பற்றியும், அதற்குப் பொருத்தமான உபரிய புத்திக்கும், தெய்வ சக்தியை நம்புவமான சாஸ்திர நுட்பங்கட்கும், கடவுளை யறிகிற தன்மையான திருஷ்டிக்கும் ஏற்றதாயுள்ள கொள்கையை ஒப்புக்கொள்ளுமாறு நம்முடைய மனத்தை நாம் பழக்கி வருவோமானால் பயபீதி நினைப்புகளுக்கு இடமில்லாமலே போய்விடும். அப்பொழுது நம்முடைய பயமெல்லாம் தைரியமாய் மாறிவிடும். கடவுள் நம்மோடு துணை நிற்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் பொழுது எந்த மனிதன், எந்தப் பேய் நம்மை விரோதித்து எதிர்க்க முடியும்? எவர்தான் நம்மை விரோதம் செய்து என்ன பலனையடைய முடியும்? இந்த அறிவும், ஆத்ம சக்தியும் நமக்கு உண்டாய்விடுமாகில் நாம் பயத்தை வென்றவராகிவிடுவோம். இதை நாம் உணர்ந்து கொண்ட இந்த க்ஷணம் முதல் நித்தியானந்தத்தமுழுந்தும் வாழ்வு நம்மதேயாகும். அந்த வாழ்விற் பேரன்பு பூண்டு நிற்கும் நம்முன்—கடவுளை நம்பிய நம்முன்—பயமென்பது ஒட்டமெடுக்கா தென்செய்யும்?

மகள் மற்றவர் பொருள்.

மகள் எந்நாளும் மற்றவர் பொருள். ஆஹா! சகுந்தலையைக் கணவன் வீட்டுக்கு அனுப்பின இப்போது தான் எனக்கு ஒருவித ஆறுதல் உண்டாயிருக்கின்றது. மகள் எந்நாளும் மற்றவர் பொருள். பிறரிடத்திற் பெற்ற இரவற் பொருள் என்றும் இயம்பலாம். இரவற் பொருளை அதற்குடையவரிடத்தில் திருப்பிக் கொடுத்து மகிழ்வது போலவே, சகுந்தலையை அவளுக்குடையவனாகிய அவள் கணவனிடம் அனுப்பின பின்பே எனது மனது தெளிந்து மகிழ்ந்து விளங்குகின்றது.

—கண்வ முனிவர்.

ஸ்ரீரங்கம் கார்த்திகை தீபவிழா.

பல்லவி.

சீரங்கம் கார்த்திகைக்குச் செல்கின்ற * பக்தரின்—
சிங்காரத்தைக் கேளீர்! (சீரங்க)

அநுபல்லவி.

சீரங்க நாதரின் தீப விழாவினைக்
காரணமாய்க் கொண்டு களிப்பதைக் கேளீர்! (சீரங்க)

சரணங்கள்.

ஆலயம் போக ஓர் அழகான உடையும்
ஆடம்பரத் தோற்ற மதற்கேற்ற நடையும்
காலிகள் கூட்டமும் காமத்தில் நாட்டமும்
கையிலே துட்டோடு கார்த்திகை பார்த்திட (சீரங்க) 1.

புனித தீபத்திற்குப் போவதாய்ச் சொல்லுவார்;
புன்னகை வேசியைப் போற்றவே செல்லுவார்!
கனிமொழியாளைக் கட்டி அணைத்திடக்
கருதிச் செல்வார்; பின்பு கமேபிணிக்காளாவார்! (சீரங்க) 2.

சிகரேட்டும் பீடியும் சேர்ந்திருக்கும் கையில்;
சிற்றுண்டிப் பொட்டலத் தினுசுகள் மடியினில்;
பகட்டுங் கணிகைக்குப் பரிமள புட்பங்கள்;
பணத்தைப் பைசாவாகப் பாவிப்போர் கோலங்கள்! (சீரங்க) 3.

கோயிலிற் புகுவார் கொழுத்த வேசியுடன்
கும்மாளம் போட்டுமே கூடுவார் மண்டபத்தில்;
தீ எழும் காட்சியைச் சிரிப்போடு நோக்குவார்;
சிற்றின்பக் கருத்திலே சிந்தையைப் போக்குவார்! (சீரங்க) 4.

அண்டை வீட்டான்றன் அழகு பெண்டாட்டியை
ஆசையோடிங்கே நான் அழைத்து வந்துவிட்டேன்!
திண்டாட்டம் நேராமல் திருவருள் செய்யென்றே
திருவரங்கேசரைத் திவ்யமாய்ப் போற்றுவார்! (சீரங்க) 5.

பெட்டிப் பணமெல்லாம் பெயர்த்துக்கொண்டு வந்தோம்;
பிதுவு மிகும் வேசிப் பெண்களுக்கே தந்தோம்!
வெட்டை வெள்ளை நோய்கள் விளைந்து விடாமலே
வீர ரங்ககேசரே! விரைந்(து) அருள் செய் என்பார்! (சீரங்க) 6.

---

* ஸ்ரீரங்கம் கார்த்திகை தீப விழாவுக்காகத் திரிச்சியிலிருந்தும் அதன் சுற்றுப்பக்கங்களிலிருந்தும் வருவோரிற் சிலரது தவமுன செயல்களை இந்தப் பாடல்கள் குறிக்கின்றன. கெடுப்பவரும் ஸ்ரீரங்கத்தில் உண்டு.

தர்க்க சங்கிரகம்.

நம் தமிழ் மொழியில் "தர்க்க சங்கிரகம்" என்று சிறு நூல் ஒன்றுளது. உருவிற் சிறியதாயினும், அதன் பொருளைப் பண்டிதர்களிடமிருந்தே கேட்டுத் தெளிய வேண்டுமென்றித் தாமாக வாசித்துணர இயலாது. அதன் சுவை இவ்வாறெனக் காட்டுதற்கு இரண்டு குறிப்புகளை மட்டும் இங்கு தருகிறோம்.

ஃ

எடுத்துக்கொண்ட நூல் இடையூறில்லாமல் நன்கு முடிவு பெறுவதின் நிமித்தமாகச் செய்யத் தகுந்ததென்று பெரியோர்கள் அனுஷ்டித்து வந்திருக்கின்ற முறைமையால் கருதப்படுகிறதும், வேதத்தில் விதிக்கப்பட்டதுமான வழிபடு கடவுள் வணக்கமாகிய மங்கலம் என்பதைக் குறித்துப் பின்வருமாறு தர்க்கிக்கப்படுகிறது:—

I

வினா:—'மங்கலம்' கூறினால் தான் நூல் இனிது முடிவு பெறுமென்று கொள்ளவேண்டுமாயின், 'நன்னூல்' என்ற நூலில் மங்கலம் கூறி ஆரம்பித்திருந்தும், அந்த நூலின் முதலிற் சொன்ன எழுத்து—சொல்—பொருள்—யாப்பு—அலங்காரம் என்ற ஐந்தில், அந்த ஐந்தும் அந்நூலினுள் முடிவுபெறாமல் எழுத்து—சொல்— என்ற இரண்டுடன் மட்டும் அரைகுறையாக முடிந்து விட்டதே? மங்கலம் பாடித் துவக்கினால் இனிது முடிவு பெறும் என்ற விதி நன்னூல் விஷயத்தில் இவ்விதம் முரண்பட்டுப் போனதால், மங்கலம் பாடினால் நூல் இனிது முடிவுபெறுமென்பதை எப்படி ஏற்பது? மங்கலம் பாடப் பெறாமலே ஆரம்பித்துள்ள 'தொல்காப்பியம்' முதலிய நூல்கள் ஆரம்பமும் முடிவும் இனிதாகிப் பூர்த்தி பெற்றுள்ளனவே? மங்கலம் பாடினால்தான் இனிது முடிவு பெறுமென்றது இங்கு முரண்பட்டுப்போயிற்றே? ஆகவே, மங்கலம் பாடுகை அவ்வளவு முக்கியமானதென்று ஏற்படவில்லையன்றோ? மங்கலம் இல்லாமலே நூல் முடிவு பெறுதலுங் கூடுமென்று இதனால் துணியலாமென ஏன் ஸ்தாபிக்கக்கூடாது?

விடை:— நன்று சொன்னாய். நன்னூலுக்கும் தொல்காப்பியத்துக்கும் முறையே மங்கலம் பாடப்பெற்றே நூல் துவக்கப்பட்டதென்பதை நீ அறியக்கடவாய். நன்னூலில் நூலுக்குள்ளாக மங்கலம் பாடினார். தொல்காப்பியத்திலோ எழுத்தால் விவரித்து மங்கலம் கூறிவிடுதல் அத்தனைச் சுலபமில்லையென்று கருதி, மனத்தால் அபாரமாக ஸ்துதிசெய்து கொண்டு, நூலை, நூலின் விஷயத் தொடக்கத்திலிருந்தே ஆரம்பித்துச் சென்றிருக்கின்றார். இப்படி இரு நூலிலும் மங்கலம் வந்திருந்தாலும், தொல்காப்பியம் இயற்றுகையில் அதற்கு இடையூறுகள் யாதும் குறுக்

மனிதர்களுக்கு உதவி செய்வது கடவுளுக்குகந்த விஷயமென்பதை வெகு பேர் மறந்து விடுகின்றனர். கேட்டதற்குப் பதில் சொல்வதற்கே சிலர் பின் வாங்குகின்றனர்.

கிடாமையின் அது செவ்விதாக முடிவு பெறலாயினது. நன்னூலுக்கோ அதை இயற்றப்புகுகையில் எதிர்நோக்காது நேர்ந்துள்ள இடையூறுகளால், அது ஆதியில் உத்தேசித்தவாறு ஐந்து வகை இலக்கணமும் அமைய முடிவுபடுத்தல் கூடாமற்போயிருக்கிறது. நூல் முடிவு பெறுமைக்குப் பின் நேர்ந்த இடையூறுகளைக் காரணமாகச் சொல்லவேண்டுமேயன்றி, மங்கலம் பாடினமையால் நூல் முடிவு பெறவில்லை யென்பது அனுபவத்தில் ஒப்பத்தகுந்ததாகாது. எக்காரியத்துக்கும் பிரதமத்தில் மங்கலம் பேசித் தொடங்குதல் விதி. ஆனல், அக்காரியம் பின்னல் இடையூறுகளிற் சிக்குண்டால், மங்கலம் பேசியதே காரணமென்னல், பால் குடிக்கும்போது குழந்தைக்குப் புரையேறி மரணமுற்றால் பால் தகாது என்று விலக்குதல் எப்படிப் பொருந்தாதோ அப்படியே மங்கலம் பாடியதனல் நூல் முடிவு பெறவில்லை யெனலும் பொருந்தமாட்டாது. ஆனதால் நியமம், ஒழுங்கு தப்பவில்லை.

வினு:—அப்படியானல், மங்கலம் பாடித்தான் தொடங்கவேண்டு மென்பதற்குப் பிரமாணம் யாது?

விடை:—ஆதிமுதற் கொண்டு பெரியோர்கள் மங்கலம் பாடித்தான் தொடங்கவேண்டுமென்று ஆசரித்துக்கொண்டு வந்திருக்கின்ற அநுஷ்டான விதியே இங்கு பிரமாணமாகக் கொள்ளப்படவேண்டும்.

II

வினு:—இளையோர் என்பவர் யாவர்?

விடை:—சொல்லுகிற விஷயங்களைக் கிரகித்தலிலும், அவற்றை மறவாவண்ணம் உள்ளத்திற் பதிய வைத்துக்கொள்ளுதலிலும் நுட்பமான விவேக தீக்ஷண்ணியம் வாய்க்கப்பெற்றோரே இளைஞராவார். மற்றபடி குழவிப் பருவத்தினர் இளைஞராகார்.

III

வினு:—பதார்த்தங்கள் எழு. அவையாவன:—திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம் வரையில் பதார்த்தங்கள் உண்டென்று சொன்னலே அது எழு என்றுதானே பெறப்படும். அவ்வாறிருப்ப, பதார்த்தங்கள் எழு என்று அதிகமாக விவரித்துக் கூறுவானேன்? அந்த எழு என்பது இல்லாவிடினும், 'பதார்த்தங்கள் எழு' என்பது தானே பெறப்படுமே? ஆகவே, எழு எனக் குறித்தது பயனில்லாத சொல்லாயும், அதிகப்பட்ட வார்த்தையாயும் இருக்கிறதன்றே?

விடை:—அப்படியன்று. எழு என்பது அதிகச் சொல்லாகாது. எழு என்று வரையறுத்ததனல் அதற்குமேல் இல்லை என்று முடிவு பெறும்படியாயிற்று. அந்த எழு இல்லாத பக்ஷத்தில், பதார்த்தங்கள் இன்னும் எட்டு, ஒன்பது ஆக இருக்குமோ என்றும் துணிதல் கூடுமன்றே? அதற்கு இடமில்லாமல் பதார்த்தங்கள் எழுதான் என்று ஒரு முடிவாய்த் தீர்த்து விடுவதற்காக எழு என்று சொல்லவேண்டியது அவசியமாயிற்று. எனவே, எழு அதிகச் சொல்லாகாது. எழுக்குமேல் பதார்த்தம் இருத்தல் கூடுமோ

என்று சந்தேகிக்காதவாறு—இல்லை என்று தெளிவாக்கப்பட்டது.

வினா:—"இல்லை" என்ற பதம்—"உண்டு" என்ற பதத்திற்கு எதிரிடையாக நிற்பது. ஒரு வஸ்து இருந்துதான், பிறகு இல்லையென்று ஆதல் வேண்டும். உண்டு என்பது இல்லாமல், "இல்லை" என்ற சொல் பிறவாது. ஆகாசத்திலே தாமரையில்லையென்றால், ஆகாசத்தில் இரா விட்டாலும், அத்தாமரை பூமியில் இருந்ததாலன்றோ ஆகாசத்தில் இல்லையென்று சொல்லும்படியாயிற்று. தாமரை என்பதே கிடையாத பக்ஷத்தில் "உண்டு" என்ற சொல் பிறவாது. "உண்டு"என்பதற்கு எதிர் மறையான "இல்லை" என்ற சொல்லும் வருதற்கு ஏதுவிராது. ஆகவே, "இல்லை" என்பதனால், அதற்கு முன்பு அது இருந்தது என்பது பெறப்பட்டது. இப்படிப் பார்க்கையில், பதார்த்தங்கள் ஏழுக்கு மேல் இல்லையென்று சொல்லுகிற சொல்லாலேயே அதற்கு முன்பு பதார்த்தங்கள் ஏழுக்குமேல் இருந்திருக்கிறது என்று ஸ்தாபிக்கப்படும்படியாகிறதன்றோ? அவ்வாறாயின், பதார்த்தங்கள் ஏழுக்குமேல் இல்லை என்ற சொல், அதற்கு மேலும் இருந்தது என்பதை ஸ்தாபித்துவிடுவதனால், பதார்த்தங்கள் ஏழுக்குமேல் இல்லையென்ற சொல் பயனில்லாத சொல்லாகத்தானே முடிகின்றது? அச்சொல்லால்—ஏழுதான்— என்று வரையறுக்கப்பட்டதென்பது பயனற்ற பேச்சாக முடிகிறதல்லவோ?

விடை:—ஏழுக்குமேல் இல்லையென்பதற்கு இத்துணை ஆக்ஷேபமாயின். அதை வேறு கருத்தாகச் சொல்லி முடிக்கிறேன். பதார்த்தங்கள் ஏழுக்குள் தான் அடங்கும் என்று முடித்து விட்டால் அப்போது ஆக்ஷேபனை நிகழாவன்றோ? பதார்த்தங்கள் ஏழுக்குமேல் இல்லையென்று சொன்னதானது, ஏழுக்குள் அடங்கும் என்பதைத் தெரிவித்ததாகக் கொள்ளப்படவேண்டுமென்றுணர்க.

☞ இதற்குமேலுள்ள விஷயங்களைத் 'தர்க்க சங்கிரகம்' என்ற நூலைக்கொண்டு பண்டிதமணிகளிடம் பாடம் கேட்டு அறிந்து கொள்க.

1. தீரவியம்-பொருள். 2. குணம் பண்பு, தன்மை. 3. கருமம்—தொழில். 4. சாமானியம்—பொதுமை. 4. விசேடம்—சிறப்பு. 6. சமவாயம்—ஒற்றுமை, சம்பந்தம். 7. அபாவம்—இன்மை, இல்லாமை.

மருந்தின் குணத்தைக் கவனியார். விளம்பரம் எவ்வளவு பெரிதாயிருக்கிறதோ அந்த மருந்துதான் மிக உயர்வாதென்று நினைக்கிறார்கள்.

ஜாதிபேதமற்ற ஸமபந்திபோஜனம் விலக்கமுடியாத ஒரு அவசரகாலத்தில் கொள்ளப்பட்டால் தோஷமில்லை. அதற்குப் பிறகு அவரவர்களின் குலாசாரப்படி நடப்பதே நல்லொழுக்கமாகும். குலாசாரம் என்பது நன்னடக்கையை மீறாதபடி ஒருவனைக் கட்டுப்படுத்துகிற கடிவாளமாயிருந்து சரியான வழியில் செல்லும்படி செய்விக்கிறது. குலாசாரத்தை மீறிப் பிராமணரும் மற்ற வகுப்பினரும் சாதாரண காலத்தில்கூட ஒரே பந்தியில் புசிப்பதென்பதை நாம் விரும்பவில்லை. எப்போதும் பெரியோர்கள் விதித்த விதிகளையே பெரும்பான்மையும் தழுவுதல் உத்தம நெறியாகும்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்பிரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

உலகப்போக்கின் வேடிக்கைகள்!

I



உலகத்தைச் சுற்றிவந்தாலும் சரி, அல்லது சின்னஞ் சிறு கிராமம் எதனையேனும் வலம் வந்து அங்குள்ள குடும்பங்களின் காரியங்களைக் கவனித்தாலும் சரி, உலகப்போக்கின் தன்மையே ஒரு விநோத வேடிக்கைக்கூத்தாயிருப்பதை வேண்டிய வரையில் கண்டு சிரிக்கலாம்! விகடன் அந்தக் கூத்துகளில் சிலவற்றை இங்கு தெரிவிக்கிறேன்! மனதில் யதார்த்த அன்பு இருந்துவிட்டால். தான் எவ்வளவோ உதவிகள் உபசரிப்புகள் செய்திருந்தும், எதும் செய்யவில்லையே, நன்றாகக் கவனிக்க முடியாமல் சந்தர்ப்பம் அப்படி ஆய்விட்டதே என்று தன்னில் தானே குறைப்பட்டுக்கொள்ளவைக்கும். மேன்மேலும் செய்யவும் பண்ணும்! பொய்யன்போ ஏதோ கொஞ்சம் கிள்ளிக்கொடுத்த அற்பத்தைப் பிரமாதமாகப் பேசவைக்கும்! "அவன் வாழ்கிற வாழ்வு யாராலே தெரியுமா? நான் அந்தக் காலத்தில் வியாபாரத்துக்கு முதல் கொடுத்து உதவியதால் அல்லவா இவன் இவ்வளவு முன்னுக்கு வரலாயிற்று" என்று வெகு பெருமையாகப் பேசி நீட்டம் போடுவார்கள்!

ஃ

தனக்கு வேலை கிடைத்து ஒரு தொழிலில் அமர்ந்து ஊன்றிக்கொண்டவன், எந்த வேலையும் அகப்படாது எங்குகிறவனைப் பரிகாசக் கண்ணோடும் பார்க்கிறான்! சிரிக்கிறான்! இவனுடைய மமதையைப் பார்த்து அந்த எங்குகிறவனும் ஒரு சிரிப்பு சிரித்து விடுகிறான்! பிறரை இழித்துக் கூறியதற்கு நாளை ஏற்படப்போகிற பலன் இன்றைக்குத் தெரிய முடிகிறதா?

ஃ

அப்பனே! கண்ணாலம் வேண்டாமென்கிற சிலரைக் கவனித்தீர்களா? பெண்டாட்டி வந்தால் சோறு போட்டுக் காப்பாற்றுதற்குக் கையில் காசு இல்லாததாலேயே அந்த மாதிரி மகா வேதாந்திபோல் பெண்ணாசை வேண்டாமென்று நடனவித்தை படிக்கிறது! உள்ளுக்கோ காமநூல்களையெல்லாம் பார்த்து ஏங்கி நக்குவது! இப்படிக் கண்ணாலம் வேண்டாமென்பவர்களைச் சில உத்தமர்கள் பெரிய வேதாந்திகளாக நினைத்து மதிக்கப்போக, அந்த மாதிரி மதிக்கப்படுதலையே ஒரு வியாபாரச் சரக்காகக் கொண்டு, ஊராரையெல்லாம் நேசம் பண்ணித் தனக்கு எங்குமே உபசாரம் கிடைக்கும்படிச் செய்துகொள்வது ஒரு சமர்த்தான வித்தைதான்!

இத்தகைய சல்யாணமற்ற வேதாந்திகளின் சங்கதிகளை உள்ளுக்குள் நுழைந்து பார்த்தாலோ, அவர்களுக்குள்ள சுயநலமும், கபடமும், கோபமும், ஆத்திரமும், ஊரார் பொருளுக்கு ஆசைப்பட்டு ஏங்குதலும், சமயமறிந்து ஏமாற்றிப் பெறுகிற சங்கதிகளும் இன்னும் எத்தனையோ கசுமால நாற்றங்களெல்லாம் நிறைந்திருக்கக் காணலாம்!

ஃ

சிலர் புஸ்தகங்கள் சேகரிக்கிற வேடிக்கையைக் கேட்கிறீர்களா? ஒரு புஸ்தகத்தைத் தானும் விலைக்குப் பெருமலே, அந்தப் புஸ்தகங்கள் எவரெவரிடம் இலவசத்தில் ஏமாற்றிப் பெறலாமோ அங்கெல்லாம் சென்று பல்லைக்காட்டி மயக்கிப் பெற்று பல பீரோவ்கள் நிறைய அடுக்கி வைத்துவிடுகிருர்கள்! இத்தகைய இழிய ஜென்மங்களாக இன்னும் சிலர் கொஞ்சம் இருந்துவிட்டால், கைப்பணம்போட்டு அச்சிட்ட ஆசிரியர்களும், நூல்களை வெளியிட்டவர்களும் வெகு நன்ருகப் பிழைத்துவிடலாம்தான்!

ஃ

ஊர் போனபின்பு சிலர் கடிதமே போடுவதில்லையப்பா! ரயில் வரைக்கும் வந்து அனுப்பிவைத்த அந்த ஏமாறிய வாயனுல் ஆகவேண்டிய காரியம் ஆய்விட்டதென்றும், பிறகு இனி ஆகவேண்டிய சமயம் வரும்போது தபாலுக்குச் செலவிட்டுப் பழயபடி கொஞ்சலாமென்பதும் இந்தப் பனங்காட்டு நரிகளின் தீர்மானமா யிருக்குமோ என்னவோ!

ஃ

காதலிகளாகத் தான் நினைத்து ஆசைவைத்தவளெல்லாம் தன்னை வெறுத்து விரோதித்து நிற்பதை இன்னெருவன் பார்த்து வயிறு எரிகிருன். தாலி கட்டியவளே முதலில் அன்பற்றுப்போய் நிற்பதும் அவன் செய்த பாக்கியம்தான் அய்யனே! ஒரு பக்கம் உறவிலே நேசத்திலே கொஞ்சிவிட்டு, மற்ளெரு பக்கம் அவர்களாலே தன் கைக்கு எந்தச் செலவும் நேரிடாமலும், தன் சொத்து சுதந்திரத்துக்குக் கெடுதியில்லாமலும் பார்த்துக்கொள்வது சில ஆண் பெண்களின் பெரிய சமர்த்தான வேடிக்கையே!

ஃ

தான் நோயிற் கிடந்தபோது அவன் பார்க்க வரவில்லையேயென்று துள்ளிக் கோபம்மிஞ்சி ஆங்காரப்படுவதே தவிர, மற்றவர்கள் வியாதிப் படுக்கையாயிருந்தபோதுதான் அங்கு அலக்ஷியமாய் நடந்துகொண்டு எட்டிப் பாராமலே போய்விட்டதை நினைத்துப் பாராததும் ஒரு வேடிக்கைதான்! பாதிப்பணம் பிறகு கொடுக்கிறேனென்று வியாபாரம் பேசிச் சரக்குகளைப் பெற்றுச் சென்று, பிறகு கொடாமலே விழுங்கி விடுகிற ஊர் சொத்துக்கு அலைவோரின் காரியங்கள் வெகு விநோதமாயிருக்கும்! ஊரான் செலவிட்டுப் பல விருந்துகள் நடத்திஞல் கம்மென்று வந்தவரையில் வயிற்றுக்குள் தள்ளிவிட்டு, ஏன் இவ்வளவு செலவிடுகிருயென்று உபசாரத்துக்குக்கூடக் கேட்காமல் ஜாடையாக இருந்துவிடுகிறது! அவ்விதம் இலவசத்திலே கிடைக்காத காலத்திலே தன் பண முடிப்பிலிருந்து ஒரு காசை எடுத்துக்கொண்டு, அதை முத்தமிட்டபடியே "செலவிடுவோமா—வேண்டாமா?" என்ற யோசனையிலேயே பொழுதைப்போக்கிப் பட்டினியுடன் அந்த நாளைக் கழித்துவிட்டு, அந்தக் காசைப் பழயபடி ஒரு முத்தம் தந்து முந்தானையில் முடிபோட்டுக்கொள்கிறது சமர்த்தான வேடிக்கை!

ஃ

ஆணவம் பிடித்தவனுக்கும், அக்கிரமப் பாவிகளுக்கும், கனத்த செட்டுக்காரர்களுக்கும் பெண் குழந்தைகளே டஜன் கணக்கில் பிறந்துவிடுவதும் ஒரு வேடிக்கையே! "நான் தான் கட்டிக்கொள்வேன், நீ தான் கட்டிக்கொள்வேன்"—என்று ஒரு பெண்ணுக்குப் பலர் காத்து நின்று ஆசைகொண்டு பாக்குப் பிடிக்க, கடைசியில் இன்னொரு கருப்பண்ணனுக்கு அப்பெண் மனைவியாகிறாள். இப்போது அந்தப் பெண்ணின் வாழ்வு, அழகு, கைவீச்சு எல்லாம் தொள தொள என்றாகி முகமினுப்பும் மாறி மண்ணாகிட, இந்த மூஞ்சிக்கா இத்தனை மஞ்சள், இவளையா அவ்வளவு ஆவற்பட்டு மணந்திடக் காத்திருந்தோமென்று அவளை மணக்க இருந்த ஒவ்வொருவனும் அருவருப்பாய்ப் பார்க்கிறான்! இதிலே சில பெண்கள் மலடிகளாக ஆய்விடுவதும் ஆங்காங்கு காணும் வேடிக்கைகள்தான்! இதுவும் நொந்தவர் சாபமே!

ஃ

அன்னிய இடத்திலே பெண்ணைக்கொண்டு அவதிப்படநேர்ந்ததே, சொந்த இடத்திலே யிருந்த பெண்களில் ஒருத்தியை விவாகம் செய்திருந்தால் மெத்த நன்றாயிருக்குமே என்று முன்பு ஏங்கியவன், இப்போது அதை ஆராயப்போகும்போது சொந்த இடத்திலே முன்பு தான் பார்த்த பெண்களெல்லாம் நடுநாளிலேயே கண்மூடிக்கொண்டுபோய்விட்டதை நினைத்து, அந்த மட்டில் தனக்கு அப்படி அவதி வராமற்போனதே பெரிய பாக்கியமென்று உள்ளத்தில் திருப்திபடப் பார்க்கிறான்! இது விதிசெய்யும்வேடிக்கையல்லவா? ஒரு வீட்டிலே தன் பெண்ணைக் கொடுத்தவன், அந்த வீட்டுத் தலைவி செத்துப் போனதற்குச் சந்தோஷப்பட்டுக் கொண்டு, இனி அந்த வீட்டின் சொந்தக்காரனும் எப்போது கண்மூடுவானோ, நாமும் நமது மனைவியும் குடும்பமாய் நமதுமகளிடம் என்றைக்குப் போய் சாஸ்வதமாகத் தங்குவோமோ என்றும் நினைக்கிறான்! இப்படியும் சுயநல தந்திரிகள் சிலர் இருப்பதும் ஒரு வேடிக்கைதானே!

ஃ

தனக்கு ஒருவனால் எவ்வித காரியமும் ஆகவேண்டியதில்லை யென்று தெரிந்துகொண்டுவிடுகிறவர்கள், அத்தகையோனுக்கு எவ்வித தபால் கடிதச்செலவும் செய்யாமல் பக்குவமாய் ஒதுங்கிவிடுகிற தந்திரக்குட்டிகளாயிருக்கிறார்கள்! ஆனாலுமென்ன, இவர்களுடைய அற்பபுத்தி தான் வெளிக்கு அதிகமாக இதனால் தெரியவர, மற்றவர்களும் அதைக் கண்டு சிரிக்கிறார்கள்! சிலர் ஒரு சமயம் எவ்வளவோ உதவுகிறார்கள்; பிறகு மற்றொரு சமயம் அப்படி உதவுவது தன் கைக்காசுக்கு நஷ்டிதானே என்று பணத்தை இறுக முடிந்து, எந்த உதவிக்கும் வராமல் கை அழுத்தக்காரர்களாக மாறிவிடுகிறார்கள்! ஒரு வீட்டுக்குள் விருந்தாளியாய் வந்தவனுக்கு அங்கு இன்னும் சிலநாள் இருக்க ஆசை! ஆனால், வீட்டிலிருக்கிற சில்லரைத் தேவதைகளுக்கும் வீட்டுக்காரனுக்குமோ அவன் இருப்பது மனம் பிடிக்காமல் சீக்கிரம் அனுப்பிவிட எண்ணம்! ஆனால் மேலுக்குப் பேச்சுமட்டும் வெகு தித்திப்பு! இன்னும் எத்தனையோ உலகத்துப் போக்குகளைப் பார்த்து நீளச் சிந்திக்கையில் எல்லாம் வெகு வெகு வேடிக்கைகளாகவே தோற்றும். இப்படிப்பட்டபல வேடிக்கைகளை அடுத்த மார்கழி மாதத்தில் வந்து சொல்கிறேன்! நீங்களும் எதிர்பாருங்கள்! ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!!

கர்னல் ஆல்காட்

எத்தனையோ அன்னியதேச வாசிகளுக்கு நமது இந்தியா இடம் தந்து, அவர்களைத் தேவவுருவங்களாகவும் மதித்துப் போற்றிக் கொண்டாடியிருக்கின்றது. அவர்களிலே கர்னல் ஆல்காட்டும் ஒருவர். அவர் அமெரிக்காவிலே 1832-ம் வருஷம் பிறந்து கல்வியிலும் திறமையிலும் மிகுந்தவராகிச் சிறிதுகாலம் பத்திராசிரியராகவும், சிறிதுகாலம் படைத்தலைவராகவும், விசாரணை உத்தியோகஸ்தராகவும் இருந்து மிகவும் புகழ் வாங்கினார்.

ஃ

பிறகு ருஷியாவிலே உயர்ந்த குடும்பத்திலே தோன்றி வளர்ந்த பிளாவட்ஸ்கி அம்மை என்ற மாது, தன் இனத்தாரை விட்டுப்பிரிந்து தேசங்கள்தோறும் சுற்றித்திரிந்து, சித்துத் தொழில்களிலேயும் ஜாலவித்தைகளிலேயும் பயிற்சி கொண்டவராகி அமெரிக்காவுக்கு வந்தபோது அங்கே கர்னல் ஆல்காட்டுக்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. அவ்விருவர்களுமாகச் சேர்ந்து 1875-ம் வருஷத்திலே தியஸாபிகல் சங்கத்தை ஸ்தாபித்தார்கள். அப்பால் தங்கள் சபையின் நோக்கங்கள் சரியாக நடப்பதற்கு இந்தியாவே புஷ்டியான நல்ல இடமென்று அவர்களுக்குத் தோன்றிவிட்டபடியால், இந்தியாவுக்குச் சீக்கிரமாக வந்து சேர்ந்தார்கள்.

ஃ

1891-ம் வருஷத்திலே பிளாவட்ஸ்கி அம்மையார் இறந்துபோய் விட்டார். அதற்கப்பால் அன்னிபெஸண்டு அம்மையைத் துணையாகக் கொண்டு மரணகாலம்வரை கர்னல் ஆல்காட் அந்த சபையின் அபிவிருத்தியின் பொருட்டு மிகுந்த பிரயாசை எடுத்திருக்கிறார். இப்போது இந்த தேசத்தில் (அதிலும் முக்கியமாக சென்னை மாகாணத்தில்) தியஸாபிகல் சங்கம் இவ்வளவு பலமாக நிற்பதற்குக் கர்னல் ஆல்காட் செய்த முயற்சி கொஞ்சமன்று. இவருக்கப்பால் சங்கத்தலைமை அன்னிபெஸண்டு அம்மைக்கே கொடுக்கப்படலாயிற்று.

ஃ

நமது ஹிந்துக்களுள் பலபேர் அன்னிபெஸண்டு அம்மையைப் பேசும் தெய்வமென மதித்து வந்தார்கள். இவ்விதம் மதித்து வந்தவர்கள் பலரும் ஆங்கிலங்கற்று உத்தியோகத்திலமர்ந்திருந்தவர்களே. இந்த அம்மையார் ஏற்படுத்திய தியஸாபிகல் சபையின் கொள்கைகள் முற்றிலும் ஹிந்துமத சைவ,வைணவ சித்தாந்தங்களுக்கு விரோதமுடைய மாயாவாத மென்னும் மாயக்கொள்கையைச் சேர்ந்ததாகும். இக்கொள்கையை மதித்து இதிற் பலரும் சேர்ந்துகொண்டதற்குக் காரணம் இரண்டாகும். அவையாவன:—அன்னிபெஸண்டு அம்மையார் ஆங்கிலச் சீமாட்டியாயிருந்தது ஒன்று; அச்சபையில் மெம்பராக இருந்தால் நமக்குக் கௌரவமுண்டாகும் என்பது மற்றொன்று; புண்ணிய பாபங்களில்லை; சுவர்க்க நரகங்களில்லை; கடைசியில் பிரம்மமாகி விடலா

மென்று போதிக்கப்பட்டதாலும் அநேகர் இச்சபையில் சேரலாயினர். இடையிடையே அபிப்பிராய பேதங்கள் உண்டாகவும் தலைப்பட்டது.

ஃ

கடைசியில், கர்னல் ஆல்காட் காலமானார். அவருடைய பிரேதம் வெகு கௌரவத்துடன் கொண்டு போய்த் தகனம் செய்யப்பட்டது. ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் முதலிய பெரியோர்களும், பிராமணர்களும், பவுத்தர், கிறிஸ்தவர்கள் முதலிய எத்தனையோ ஜனங்களும் உடன் சென்றிருந்தார்கள். பிரேதத்தைச் சுமந்து சென்றவர்களிலே ஆறு பேர் பிராமணர்களென்று மிஸஸ் அன்னிபெஸண்டு எழுதியிருக்கிறார். காலஞ்சென்ற கர்னல் ஆல்காட்டின் "தியாஸபி" ஸம்பந்தமான கோட்பாடுகளைப்பற்றி எத்தனையோ அபிப்பிராயபேதங்கள் இருக்கின்றன. என்ற போதிலும், இவருடைய மனோபலம், வித்வத்துவம், சரீரதிடம், தயாளகுணம் முதலியவற்றை எல்லோரும் ஒருங்கே புகழ்ந்து பேசுவார்களென்பதில் சந்தேகமில்லை. சூக்ஷ்மலோகத்திலிருந்து ரஜபுத்ரவேஷம்கொண்ட கூட்ஹூமி என்ற மஹாத்மாவும், வேறு பல மஹாத்மாக்களும், பிளாவட்ஸ்கி அம்மையும் சூக்ஷ்ம சரீரிகளாக வந்து கர்னல் ஆல்காட்டை அழைத்துச் சென்றதாகவும், விமானம் கொண்டு வந்து எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போனதாகவும், அத்தேவதூதர்களோடு தான் பேசினதாகவும், கர்னல் ஆல்காட்டு தன்னிடம் சொல்லிக்கொண்டு போனதாகவும், தனக்கு இவைகளெல்லாம் பிரத்யக்ஷமாகக் காணப்பட்டதாகவும் மிஸஸ் அன்னிபெஸண்ட் அம்மை அந்தக் காலத்தில் எழுதுவதானார். இது முற்றிலும் வடிகட்டின பொய்கள் தான். நம்முடைய சாஸ்திரங்களை அன்னியர்கள் அறிந்து போதிக்கக் கேட்டு நாம் மோக்ஷத்தை எளிதில் அடையலாமென்ற வீண் மயக்கத்தை விட்டு, நமது முன்னோர்களின் உத்தம வழியைப் பின்பற்றக்கடவோம்.

வளர்த்த பாசத்தின் தவிப்பு.

கண்வரின் கூற்று:-இன்று சகுந்தலை என்னைவிட்டுப் பிரிந்துபோய் விடுவாள் என்று எண்ணும்போதே எனது மனம் விசனம் மிகுந்திருக்கின்றது. புறப்படும்போது கண்ணீர் விடுவது அநுசிதமென்று நினைத்துக் கண்ணீரை அடக்கிக் கொண்டிருப்பதனால் தொண்டை கம்மிக்கொண்டு பார்வை மழுங்கித் தவிக்கிறேன். உலக இன்பங்களை யொழித்துக் காட்டில் வசிக்கும் துறவியாகிய எனக்கே வளர்த்த மகளாசையால் இத்தனை விசன மிகுந்திருக்கிறதென்றால், நாட்டில் வாழும் கிரகஸ்தாசிரமத்தில் இருக்கும் ஒருவனுக்கு அவன் பெற்ற மகள் பிரிந்து போகுங்காலத்தில் உண்டாகும் விசனத்தை அளவிட்டுரைக்கவும் ஆகுமோ!

ஸ்ரீமான் வி. ஜே. படேலின் அந்தியம்:—

"காடோ, செடியோ, கடற்புறமோ, கனமே மிகுந்த நாடோ, நகரோ, நகர் நடுவோ***தமியேன் உடல் வீழுமிடம்" என்பதிலே, ஸ்ரீமான் படேல் கடற்புறத்தைச் சேர்ந்தவரானார். ஜீனிவா என்ற நாட்டில் 22-10-23-ல் அவர் ஆவி பிரிந்தார். அவரது தேகம் பத்திரமாக நவம்பர்மாதம் 9-ம் தேதி பம்பாய் வந்து சேரும். ஸ்ரீமான் படேல் இந்தியா சட்டசபைத் தலைவராக விளங்கிய காலந்தன்னில் காட்டிய தீரச் செயல்களும், அவரது தேசாபிமானமும் மாண்பு சான்றவை. சிறைவாசம் அவரது ஆரோக்கியத்தைக் கெடுத்துவிட்டது. பிறகு எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் பயன் படவில்லை. தேசவிடுதலையில் அவர் கொண்டிருந்த மகத்தான ஆர்வம் எதுவும் சித்திபெறாத நிலையிலேயே கண் மூடினார்.

ஃ

சென்னைச் சட்டசபையின் புது அதிர்ஷ்டம்:—

"கிழவனுக்கு ஆயுள் வளருகிறது" என்பதாக, சென்னைச் சட்டசபையின் காலம் முடிந்துவிட்டிருந்தும், அதனை இன்னும் ஒரு வருஷத்துக்கு நீடித்திருக்கும்படி கவர்னரவர்கள் ஆக்ஞாபித்துள்ளார். இது சட்டசபையில் அங்கத்தினர்களாயுள்ளவர்களுக்கு ஒரு பெரிய அதிர்ஷ்டமாக இருக்கும். புதிதாகச் சட்டசபை மெம்பராக விரும்பி நிற்போருக்கு மட்டும் இவ்விதம் சட்டசபையின் காலம் நீடித்துப்போனது பெரிய ஏமாற்றம் தரும். பழயவர்களே சட்டசபையில் இன்னும் ஒரு வருஷம் இருந்தாலும் சரி. புதியவர்கள் இனி ஒரு வருஷத்திற்குப்பின் சட்டசபைக்குள் புகுந்தாலும் சரி, அவரவர்களின் சொந்த லாப கௌரவங்கள் பெருகுவதைத் தவிர, ஜனங்களுக்கு இவர்கள் அப்படி விசேஷமாக எந்த அனுகூலத்தையும் சாதித்துவிடப் போவதில்லை. யென்பது தெரிந்து வைத்த சரக்குதானே!

ஃ

காங்கிரஸ் ஸ்வராஜ்யக்கட்சி:—

"இரும்பு பிடித்த கையும், சிரங்கு பிடித்த கையும் சும்மா யிராது" என்பதுபோல, தேச விஷயங்களில் ஈடுபட்டிருக்கிறவர்களின் கையும் வாயும் எதையேனும் ஒன்றைச் செய்துகொண்டே யிருக்கும். காங்கிரஸ் இப்போது மரணமூர்ச்சையடைந்துள்ள நிலையில், தேச விஷயங்களில் அதிக சிந்தைகொண்டுள்ளவர்கள் வெறுமனே கையைக் கட்டிக் கொண்டு கிடப்பதென்றால், அது சிலருக்குக் கஷ்டமாகவே படுகிறது. அதற்காக பம்பாயில் அகில மகாராஷ்டிர மகாநாடு ஒன்று கூடியதில், காங்கிரஸ்-ஸ்வராஜ்யக்கட்சி என்று ஒரு சபையை ஏற்படுத்துவதென்றும், காங்கிரஸ் மகா சபையின் லக்ஷியத்தை ஒப்புக்கொண்டவர்கள் மட்டுமே இதில் அங்கத்தினர்களாகச் சேருவதென்றும் தீர்மானமாகி, ஆயிரம் பேர்களின் கையொப்பமும் வாங்கப்படலானது. சென்னையிலும் இவ்விதம் ஒரு சபை ஸ்தாபனம் செய்ய ஏற்பாடாகி யிருக்கிறது. சும்மா

இடக்கிற ராஜீயவாதிகட்குப் பொழுது போவதற்காக ஏதாவது ஒன்றைமெல்லுகிற வேலை வேண்டாமா? பாட்டு கற்ற வாய் வெறுமனே இருக்குமா?

ஃ

மிராஸ்தார்களின் கஷ்டங்கள்:—

"ஓடம் வண்டியிலே, வண்டி ஓடத்திலே" என்பதுபோல, முன்பு அரிசி ரூபாய்க்கு இரண்டரைப்படி விற்ற காலத்தில் மிராஸ்தார்கள் கனத்த லாபமடைந்து சந்தோஷ வாழ்வுகொள்ள, ஜனங்களோ இரண்டரைப்படி யரிசியா என்று வயிறெரிந்து வாடினார்கள். இப்போது இவ்விருவரின் காலமும் மாறி முன்பு சந்தோஷப்பட்ட மிராஸ்தார்கள் துக்கப்பட, முன்பு அழுத ஜனங்கள் ரூபாய்க்கு எட்டுபடி அரிசி பெற்று சந்தோஷிக்கும்படி ஆய்விட்டது. அரிசியின் விலை இறங்கிவிட்டதில் முன்பு 2500-ரூபா விலையுள்ள நிலம் இப்போது 1000-ரூபாய்க்கும் வாங்குவோரைக் காணோம் வரியோ குறையவில்லை. கும்பகோணத்தில் மிராஸ்தார்களின் மகாநாடு ஒன்றுகூடி 100-க்கு 50 வீதம் வரி குறைக்க வேண்டுமென்று பல தீர்மானங்கள் செய்தது. சொந்தத்தில் நிலமிருந்தால் வீட்டுக்கு அரிசி தாராளமாக வருமே யென்று நில மில்லாதவர்கள் பரிதபித்துஏங்க நிலமுள்ளவர்களோ வரியைச் செலுத்த முடியவில்லையே யென்று நொந்து கொள்கிறார்கள்!

மாதர்களின் மகிமைப் பிரதாபம்.

குடும்பத்தின் குலதேவதை மாதர்களே. தாயாரோ பத்தினியோ, அல்லது, ஸகோதரியோ—ஆகிய ஸ்திரீ ரத்னங்களே நம்மிடத்தில் உண்மையாய்ப் பிரியம் வைத்து வாழ்நாளைச் சந்தோஷப்படுத்த வல்லவர்கள். நம்முடைய கவலையை மறக்கசெய்து உற்சாகப்படுத்தி, நம்மைக் காக்கு மிறைவனும் இப்படியே நம் விஷயத்தில் அக்கரை காட்டி நேசிக்கிறாரென்று நம்மை யறியாமல் மனதில் ஓர் எண்ணம் உதிக்கச் செய்கிறவர்கள் ஸ்திரீகளே. பின்னும் நம்மில் ஒவ்வொருவருக்கும் உலகவாழ்க்கைக்கு ஆரம்பப்பயிற்சி அவர்களாலேயே செய்யப்படுகிறது. தாயாரின் செல்வமுத்தம், பாலனுக்கு நேசத்தையும் பிரியத்தையும் போதிக்கிறது. இவன் காதலிக்கும் ஸ்திரீயின் முத்தம் வாழ்க்கையில் மனவமைதியையும் நம்பிக்கையையும் உண்டாக்குகிறது. இவைகளே நாம் எடுத்த காரியத்தைப் பரிபூரணம்செய்ய நம்மைத்தூண்டி மேன்மேலும் விருத்தியடையச் செய்கின்றன. நம் குழந்தைகள் பிற்காலத்தில் நம்முடைய பெயரை எப்பொழுதும் பிரகாஸமாய் நினைக்கச்செய்து, நமக்கு நித்ய வாழ்வைக் கொடுப்பதற்கு இன்றியமையாத காரணபூதர் ஸ்திரீகளே.

சிறுமணித்திரள்

உதிர்ந்த மலர்கள்.

உங்களுக்கு அதிர்ப்தியைப் போதிப்பதே எனது நோக்கமாகும். வெறுப்பும் கலக உணர்ச்சியுமில்லாவிட்டால், உலக வாழ்க்கையே உயிரற்றதாக இருக்கும். அவ்விரு உணர்ச்சிகளு மில்லாவிட்டால் உலகில் எதையும் சாதிக்கமுடியாது.

—ஸ்ரீமதி ஸரோஜனி.

எண்ணத்திற்கு வரையறை கிடையாது. நமக்கு சகவாசமே முக்கியமானது. அதுதான் நம்மை மாற்றுகிறது. அது பொறுப்பைத் தீரத்துடன் சகித்துக்கொள்ளவும், துணிவுடன் முயற்சி செய்யவும் தூண்டுகின்றது.

—ஸ்ரீமதி ஸரோஜனி.

பிராமணர்கள் சரியாகவோ, தவருகவோ, ஒரு காலத்தில் சமூக வாழ்வில் முக்கிய ஸ்தானத்தை வகித்திருந்தார்கள். அவர்கள் தங்களிடம் பாரமார்த்திகத்தன்மை குடிகொண்டிருந்ததாகச் சொல்லிக்கொண்டார்கள். அது அவர்களுக்கு மமதையை உண்டுபண்ணி, லக்ஷக்கணக்கான ஜனங்களை அமுக்கிவிடத் தூண்டிவிட்டது. தெய்வப்பிறவிகளென நினைத்துக் கொண்டிருந்த வெள்ளையர்களுக்கு ஏற்பட்டிருந்த உணர்ச்சி அவர்களுக்கும் உண்டாகிவிட்டது.

—ஸ்ரீமான் பரீந்திர குமார் கோஷ்.

நம்மவர் பொய்யைப் பொய் என்று கூறுகிறார்கள். மேனுட்டில் அண்டப் புளுகுக்கு அறிவுடைமை என்பது பொருள்; ஆகாயப் புளுகுக்கு நிபுணத்துவம் என்பது அர்த்தம்; பிரமாண்ட புளுகர் இணையற்ற இராஜதந்திரிகள் என்று மேனுட்டில் கொண்டாடப் படுகிறார்கள்.

—"வீரகேசரி".

நாம் முக்கியமாகச் செய்யவேண்டிய வேலை இந்தியாவில்தான் இருக்கிறது என்பது எப்போதும் எனது அபிப்பிராயமாக இருந்து வருகிறது. இப்போது நான் லண்டனுக்குச் சென்றதனுல் அந்த அபிப்பிராயம் இன்னும் பலப்பட்டிருக்கிறது.

—ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி.

உயர்தரக் கல்வி பெற்ற இந்திய மக்களிடையே கல்வியின் பயனுய் தன்னம்பிக்கை, மனோதைரியம், வாழ்க்கைப்பற்று, முகமலர்ச்சி, தேகவலிவு, பரோபகாரம் ஆகிய குணங்களுக்குப் பதிலாக, தன்னம்பிக்கையில்லாமை, மனக்கொதிப்பு, வாழ்க்யின்மீது அருவருப்பு, முகவாட்டம், தேகவொடுக்கம், பொருமை, ஆகிய துராக்கிரஹமான அம்சங்கள் பரவி வருகின்றன. இவை மேலீட்டின் காரணமாய் இளைஞர்களுடையவும் யுவதிகளுடையவும் ஜீவனோபாயத் தடுமாற்றம் பொறுக்கக் கூடாமலாகி விட்டன.

—ஸ்ரீமான் எஸ். எஸ். இராஜ
கோபாலன் எம். ஏ.

"மலை எவ்வளவு செங்குத்தாக விருந்தாலும் சரி, வழி எவ்வளவு கஷ்டமானதாக இருந்தாலும் சரி, இறப்பது நிச்சயமெனத் தோன்றினுலும் சரியே, மலையின் உச்சிக்குப் போகும் வரை திரும்பிப் பள்ளத்தாக்

கைப் பார்க்காதே. மேலே எழிப் போ" என்று தான் என்னைப் போன்றவர்கள் சொல்லுவார்கள்.

—ஸ்ரீமதி ஸரோஜனி.

நமது லக்ஷியம் விடுதலையே. நாட்டிலுள்ள எல்லா வகுப்பினருக்கும் உண்ண உணவும் நல் வாழ்வும் கிடைக்கக்கூடிய சுதந்திரத்தையே நாம் வேண்டுகிறோம். நாம் எவ்விதக் கொடுமையையும் விரும்பவில்லை. நாம் வேண்டுவதெல்லாம் அடிமைத் தன்மையினின்றும் விடுதலையடைய வேண்டு மென்பதே.*** எல்லாவித கொடுமையிலிருந்தும் ஸர்வாதிகாரத்திலிருந்தும் விடுதலை பெறவே நாம் விரும்புகிறோம்.

—ஸ்ரீமதி ஸரோஜனி.

"சிறைவாஸ முறையினால் கடன் கொடுக்காத வழக்கம் குறையவில்லை."

—ஸ்ரீமான் டி. எஸ். ராஜ.

"சிறைவாஸ பயத்தை ஒழித்தால் கடன்காரர்களைத் தண்டிக்கும் வழி வேறொன்றுமில்லை. ஸ்திரீகளுக்கு இத்தகைய தண்டனை விதிக்கப் படுவதில்லை. சிறைவாஸ விதியை இப்பொழுது ஒழிப்பது அனுவசியம்."

அட்வாகேட் ஸ்ரீமதி எம். ஏ.ஜானகி.

"கடன்காரர்கள் தாங்கொணு நெருக்கடியினால் கடனைத் திருப்பிக் கொடுக்காவிடில் அன்னோர்களைச் சிறையில் அடைப்பதினால் யாதொரு பயனுமில்லை. மிருகத்தனமான தண்டனையாகிய சிறை வாசம் ஒழிய வேண்டும்."

—ஸ்ரீமான் ஏ. எல். பாண்டியா.

ஒரு ஸமூகத்தின் கடவுள் மற்ற ஸமூகத்தின் கடவுளிலிருந்து வேறுபட்டதென்றும், ஒரு கடவுள் மற்றொரு கடவுளைவிட மேலென்றும் நினைப்பது சுத்தப் பிசகு. ஒரே கடவுள் தான் உண்டென்பது உலகின் அபிப்பிராயம்.

—ஸ்ரீமதி ஸரோஜனி.

காந்திஜீ சொல்லி வருவது போல் எதிரியையும் அன்பாலேயே வெல்லவேண்டும். அதுதான் மதங்களின் முக்கிய போதனை.

—ஸ்ரீமதி ஸரோஜனி.

எந்தத் தேசத்திலும் தாய்மார்களே எதிர்கால நிலைமையை விதிக்கிறார்கள்.

—ஸ்ரீமதி ஸரோஜனி.

தியாகம் என்பதற்கு, பிச்சைக்காரர்களுக்குக் காலணு கொடுப்பதென்பது அர்த்தமில்லை. பட்டினி கிடந்து தவிக்கும் ஏழைகளின் நன்மைக்காகப் பாடு படவேண்டு மென்பது தான் அதன் கருத்து.

—ஸ்ரீமதி ஸரோஜனி.

எவ்வித ஒற்றுமை இருந்த போதிலும், உறுதிப்பாடு பல விதத்தில் தேவையாயிருக்கிறது. அந்த உறுதிப்பாட்டை நாம் ஜாதி—மதம்—என்று பிரித்துக் கொள்ளுகிறோம். ஒவ்வொருவருடைய ஜாதி ஒவ்வொருவருக்கும் பெரிது. நம்முடைய மார்க்கம் உண்மையானதென்றும், சிறந்ததென்றும் நாம் உறுதி கொள்ள வேண்டுமேயொழிய, அன்னிய மார்க்கத்தை இகழக் கூடாது.***மத விஷயங்களை அவரவர்களின் மதப் பிரகாரம்

அதிகம் கற்றவர்கள் தங்களின் மனோ விரிவு காரணமாக சுக துக்கங்களை மிகுதிப்பட்ட தன்மையில் பெருக்கி நினைத்து நீண்ட துக்கத்திலும் மகிழ்விலும் சஞ்சரிப்பர்.

நடத்திக் கொள்ளவேண்டும். மற்ற விஷயங்களில் ஒற்றுமையாய் வாழ வேண்டும்.

—ஜனுப் எச். எச். மௌலான ஸையித் ஹுஸைனி சாயப்.

நான் சாத்தியமானவரை ஹிந்துமதக் கிரந்தங்களையும், இதர மதக் கிரந்தங்களையும் மிக்க பய பக்தியுடன் படித்திருக்கிறேன்.** தீண்டாமைக்கு ஹிந்து மதத்தில் இடமே யில்லை. தீண்டாமை ஹிந்து மதத்திற்குள் மெதுவாகப் புகுந்து கொண்ட பெருங்கேடாகும். ஆராய்ச்சியும் அனுபவமும் என் நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்திருக்கின்றன.**எல்லாத் தேசங்களிலும் உயர்ந்தவர்கள்—தாழ்ந்தவர்கள் என்ற உணர்ச்சியிருந்த போதிலும், ஹிந்து மதத்தில் செய்யப்பட்டிருப்பது போல் இது ஒரு மதக் கொள்கையாக வேறெந்த மதத்திலும் செய்யப்படவில்லை. துரதிர்ஷ்டவசமாக இந்த ஏற்றத் தாழ்வு உணர்ச்சி நமது தினசரி வாழ்க்கையில் நெடுகப் பரவியிருக்கின்றது. இதை ஹிந்து மதத்தின் ஒரு முக்கியாம்சமாக நம்பும்படி நாம் போதிக்கப்பட்டு வந்திருக்கிறோம்.

—மஹாத்மா.

நாம் நமக்கு எதை விரும்பத் தகாததாகக் கருதுகின்றோமோ, அதனைப் பிறருக்கு ஏற்படுத்தக் கூடாதென்பது ஹிந்து மதத்தின் கொள்கையாகும். ஜீவராசியனைத்தையும் நம்மைப்போல் கருதி நடத்தும்படி ஹிந்து மதத்தின் மற்றொரு கொள்கை நமக்கு ஆக்ஞையிடுகின்றது. இம்மாதிரியான ஆக்ஞைகளைக் கொண்ட மதத்தில் எப்படி உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற எண்ணம் புகுந்ததென்பது எனக்குப் புரியவில்லை.

—மஹாத்மா.

சொத்தில்லாமல் வருந்தும் ஏழைகளைத் தொழிலாளர்களாக வைத்து, சாமான்களை யந்திர உற்பத்தியில் அதிகரிப்பித்து, அவர்கள் மூலம் லாபம் சம்பாதிப்பதே முதலாளிக்கொள்கையின் மூல தத்துவமாகும்.

—பண்டித ஜவஹர்லால்.

உலகின் தரித்திரத்தைப் போக்கக்கூடிய இயற்கைச் செல்வம் இருந்தும் அது அழிக்கப்பட்டு வருகிறது. —மேற்படியார்.

(மாமிச வறுவலும், (மாமிசப்) பொரியலும் அதைச் சாப்பிடக் கொடுத்து வைத்தவர்களுக்கு நல்ல உணவாக இருக்கலாம். ஆனால், அந்த வறுவலையும் பொறியலையும் அவர்கள் புசிப்பதற்காகத் (தன்னைத்) தியாகம் செய்வது மேலென்று சொல்லுவதை—அதற்காக உபயோகிக்கப்படும் ஆட்டுக்குட்டி ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளாது.

—மேற்படியார்.

ஒரு உன்னதமான லட்சியத்தை அடைவதற்காகச் செய்யும் முயற்சியில் குஷியும் சந்துஷ்டியும் இருக்கின்றன. இதுதான் வாழ்வில் உண்மையான சந்துஷ்டி என்று ஜார்ஜ் பர்னர்ட்ஷாவும் சொல்லியிருக்கிறார்.

—மேற்படியார்.

ஒன்றுக்குமேல் பல விசனங்களையோ, பல விருத்திகளையோ உண்டாக்கிக் கொண்டே ஒவ்வொரு வருஷமும் முடிவு பெறுகின்றது.

அந்த ஏழைப் பெண் யார்?

அவள் அந்த ஊருக்கு வந்து அநேக வருடங்களாயின. தெருக்களைச் சுத்தி செய்யும் வேலையில் அமர்ந்திருந்தாள். ஊரார் அவளை ஹரிஜனப் பெண் என்று தெரிந்துகொண்டபோதிலும் இழிவுபடுத்தவில்லை. எந்த வீட்டில் என்ன



பக்ஷணங்கள் செய்த போதிலும் அதைப் பத்திரப்படுத்தி, அவள் தங்கள் வீட்டுப் பக்கம் வரும்போது கொடுப்பார்கள். உண்டிக்கும் உடைக்கும் குறைவின்றி ஊரார் அவளைக் கவனித்துக் கொண்டனர். இவ்வளவுக்கும் காரணம் அவள் நடந்துகொண்ட அன்பும், படிப்பு வாசனையால் அவரவர்களின் கஷ்ட சுகங்களுக்கு அவள் கூறும் ஆறுதல் வாசகங்களும் யாவருக்கும் வெகு பிரியமாயிருந்ததனால்தான். அவள் அந்தக் கிராமத்திற்கு வந்தபோது கைக்குழந்தையா யிருந்த பெண்ணுக்கு இப்பொழுது பன்னிரண்டு வயது நடந்துகொண்டிருந்தது.

ஃ

பத்து தினங்களாக அவள் தெருச் சுத்தி செய்யும் வேலைக்குச் செல்லவில்லை. அவள் தேகம் மிகவும் நலிந்து சோர்ந்து போயிற்று. வீட்டிலிருந்த பாத்திரங்கள் யாவற்றையும் தர்மம் செய்துவிட்டாள். இரண்டொரு சட்டி பானைகளைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை. ஒரு தினம் மிக்க ஆயாசமாய்ப் படுத்த நிலையில் தன் குமார்த்தியிடம் ஒரு சேவிங்ஸ்பாங்கி புஸ்தகத்தைக் கொடுத்துப் பின்வருமாறு கூறினாள்.




"குழந்தாய்! நாளையதினம் எனக்கு

ஜப்பானியர்களின் முக்கிய ஆகாரம் மீன்கள் தான். மீன்களை எந்தப் பண்டத்திலும் கலந்து கொள்வது அவர்களின் வழக்கம். ஜப்பானியப் புத்த குருக்கள் மட்டும் மீன்களை யுண்பதில்லை. வருடமோர்முறை ஜப்பானியர் தாங்கள் மீன்களை யுண்ணும் பாவத்துக்காக, ஒரு மச்சவிழா கொண்டாடிக் கடவுளிடம் மன்னிப்பு விரும்புவர். மன்னிக்கப்பட்டபின் மீண்டும் பழய குருடி கததிறவடி என்பது போல் மச்சங்களை விழுங்குவர்!

மரணம் நிச்சயம். நான் கண் மூடிய தும் நீ செய்யவேண்டியதைச் சொல்லுகிறேன். நீ அனுதையில்லை. நான் ஒரு கிராமத்தின் தனவந்தரை மணந்திருந்த உத்தம குலத்தைச் சேர்ந்தவள். அத்தனவந்தருக்கே நீயும் பிறந்தாய். என் மாமி என் மீது விபசார தோஷம் ஏற்றி என் நாயகரைக்கொண்டு துரத்திவிடச் செய்தாள். அதுமுதல் இக்கிராமத்தில் ஹரிஜனப் பெண்போல் வசித்துக் காலந் தள்ளினேன். உன் தந்தை பிரதி மாதமும் செலவுக்கு மணியாடர் செய்தபடி யிருந்தார். அதில் நான் ஒரு காசும் தொடாமல் அப்படியே உன் பேருக்குத் தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் போட்டு வந்திருக்கிறேன். இது சுமாரும் நாலாயிரம் ரூபாய்வரை சேர்ந்திருக்கிறது. அதன் விவரம் இப்புஸ்தகத்தில் பார்த்துக்கொள். என் வயிற்றுக்கு நானே உழைத்துப் புசித்து, உன்னையும் கல்வி முதலியவற்றுடன் வளர்க்கலானேன். நீ இந்தப் புஸ்தகத்துடன் உன் தந்தையின் கடிதங்களுடனும் உன் பிதாவினிடம் போய்ச் சேர்ந்துகொள், சுகமாயிரு. எனக்காக வருந்தாதே'' என்று கூறிப் புஸ்தகத்தையும்; தன் கணவன் எழுதிய கடிதங்களையும்தந்து. தன் புத்திரியை அணைத்தவாறு கண்ணீர் விடலானுள்.

ஃ

மறுநாள் மாலைப்போதில் அப்பதிவிரதாங்கனைப் பரந்தாமனிடம் சென்றுவிட்டாள். ஏழைச் சிறுமி திக்கற்று நின்றுள். ஊரிலுள்ள தனவந்தர் ஒருவர் தகனச் சடங்குகளை நிறைவேற்றி, அந்த ஏழைச் சிறுமியையும் தன் இல்லத்திற்கு இட்டுச் சென்றார். அவர் மனைவி ஹரிஜனப் பெண்ணை வீட்டுக்குள் சேர்க்க அருவருத்தாள். ஏழைச் சிறுமியும் அன்றிரவை அவ்விடத்திற் போக்கி, விடியுமுன் எழுந்து, கிராமத்தை விட்டுப் பிரயாணமாகி தன் தந்தை யிருக்கும் ஊருக்குச் சென்றுள். கடைசியில் தந்தையின் வீட்டையும் கண்டுபிடித்தாள். அது பெரிய வீடாக இருந்தது. வீட்டிலிருந்து ஒரு ஸ்திரீயும் அவளைத் தொடர்ந்து ஒரு பையனும் ஒரு சிறுமியும் ஆற்றுக்குச் செல்லப் புறப்பட்டனர். தன் தாய்க்குப் பிறகு இந்த ஸ்திரீயைத் தன் தந்தை மணமுடித்துக்கொண்டா ரென்பதையும் அறிந்தாள். அவர்களைத் தொடர்ந்து ஆற்றுக்குச் சென்றுள். நதியில் நீராடிக்கொண்டிருந்த சிறுவன் பிரவாகத்தில் அடித்துக் கொண்டு போகப்படவே, ஏழைச் சிறுமி உடனே துணிந்து "தாயே காப்பாற்று'' என்று தன் மாதாவைத் தியானித்தவாறு ஆற்றில் இறங்கி அச்சிறுவனைப்பிடித்துக்கரை சேர்க்க



முயன்றுள். கரையிலிருந்தவர்கள் ஒரு கயிற்றை வீசி எறிய, அதை

பார்வைக்கு அழகாக ஆடையாபரணங்களை மட்டுமே யணிந்துகொண்டு, படிப்பில்லாமலும், கடவுளால் அளிக்கப்பட்ட அறிவை விருத்தி செய்யாமலும், நோய் கொண்டவர்களையும் வருத்தமுற்றுரையும் பார்த்து ஆதரியாமலும் இருந்தால்—அவர்களால் யாருக்கு என்ன பயனுண்டு?

ஏழைச் சிறுமி உறுதியாகப் பற்றிக்கொள்ள, அங்கிருந்தவர்கள் வெகு பிரயாசத்துடன் கயிற்றை இழுத்து இருவரையும் கரை சேர்த்தனர். ஏழைச் சிறுமி மூர்ச்சையடைந்துவிட்டனளாயினும், சிறுவனையும் கயிற்றையும் பிடித்த உறுதிப் பிடியை அவள் விடவேயில்லை.

ஃ

ஏழைச் சிறுமி அக்கிராமத்துத் தனவந்தரின் வீட்டில் சேர்க்கப்பட்டாள். அவளால் ஜலப்பிரவாகத்தில் காப்பாற்றப்பட்ட சிறுவன் அருகிலிருந்தபடியே "அக்கா!" உனக்கு உடம்பு எப்படியிருக்கிறது!



என்றான். அச்சிறுவனின் வாயிலிருந்து அக்கா என்ற சொல் புறப்பட்டது ஆச்சரியமே! அந்த ஏழைச் சிறுமி உண்மையிலேயே அவனுக்கு அக்கா தான். தான் பிறப்பதற்கு முன்பே பிறந்திருந்தால்தான் அக்கா என்று ஒரு பெண்ணை ஆசையோடும் அழைக்க முடியும்.

ஃ

ஏழைச் சிறுமியும் கண்விழித்துப் பார்த்தாள். தன் அருகே தன் தந்தையும், தன் மாற்றாந்தாயும், தன் தம்பியும் தங்கையும் உட்கார்ந்தபடி தன்னைக் கவனித்து நிற்பதைக் கண்டாள். உடனே தன் இடுப்பைத் தொட்டுப் பார்த்து அங்கு ஒரு சேவிங்ஸ் பாங்கி புஸ்தகம் வைத்திருந்ததாகவும், அதனுட் சில கடிதங்கள் இருந்ததாகவும் கூறினாள். தனவந்தர் அப்புஸ்தகத்தை அவள் கையிற் கொடுத்து, "கண்மணி! நீ யார்? அப்புஸ்தகத்திலிருந்த கடிதங்கள் ஒவ்வொன்றும் நான் என் முதல் மனைவிக்கு எழுதியவைகளாக இருக்கின்றனவே? சேவிங்ஸ் பாங்கி புஸ்தகத்தில் என் பெயரும் குறிப்பிடப்பட்டு எனது குமார்த்தியின் புஸ்தகமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறதே? அதிலுள்ள தொகைகளின் பதிவுக் கணக்குகளைப் பார்த்தால், நான் என் முதல் மனைவிக்கு வரிசைக்கிரமமாக அனுப்பிவந்த தொகைகளாயிருக்கின்றனவே?" என்று வினவினார். ஏழைச் சிறுமி எல்லா விவரமும் தெரிவித்தாள். தனவந்தர் அச்சிறுமியைத் தன் குமார்த்தியென்று அறிந்து அன்புடன் அணைத்துக்கொண்டு, "அம்மா! உன் தாயார் மகா பதிவிரதை; மிகவும் ரோசக்காரி, என் முகம் பாராமலே கடவுளிடம் சென்றுவிட்டாள். இனி அவளைப் பார்க்க முடியாது" என்று உரைத்துக் கண்ணீர் பெருக்கினார்.

ஃ

"இல்லை அப்பா! என் அம்மா அப்படி மறைந்துபோய்விடவில்லை. தம்பி ஆற்றில் அடித்துக்கொண்டு போகப்பட்ட வேளையில் "தாயே காப்பாற்று" என்று என் அம்மாவைப் பிரார்த்தித்தபடியே நதியில்

காடு, மலை முதலியவற்றைப் பார்க்கும்போது தன்னைச் சேர்தவர்களைக் கண்டாற்போல் சந்தோஷிக்கக்கூடியவகளே இயற்கையின் காட்சியின்பங்களை நன்றாக அனுபவித்து ஆநந்திக்கத்தக்கவர்களாவார்கள்.

குதித்தேன். உடனே அம்மா எனக்குத் துணையாக வந்து தம்பியைப் பிடித்துக்கொள்ளும்படியான பலத்தைக் கொடுத்தார். பிறகு கயிற்றை வீசி எறிந்தனர். அதையும் உறுதியாய்ப் பற்றிக்கொள்ளும்படி என் அம்மா சொல்லிற்று. கரை வந்து சேரும்வரை அம்மா என் பக்கத்திலேயேயிருந்து என்னைக் காப்பாற்றி உங்கள்வசம் என்னை ஒப்புவித்து விட்டுப் போயிற்று'' என்றாள்.

ஃ

இதைக் கேட்ட தந்தை தன் புத்திரியின் கண்ணீரைத் துடைத்து, "பதிவிரதைகட்கு மரணம் கிடையாது; ஏதோ இறந்துவிட்டதாக உலகத்தார் கூறினாலும், நமது வீட்டுத் தெய்வங்களாகவே அவர்கள் என்றும் விளங்கிச் சிரஞ்சீவிகளாக இருக்கிறார்கள்'' என்று கண்ணீருடன் புகன்றார். மாற்றாந்தாய் ஏழைச் சிறுமியை ஆசையுடன் முத்தமிட்டுக்கொண்டாள். தன்னை அறியாமலே அக்கா என்று அழைத்த சிறுவன் உண்மையாகவே ஒரு அக்காவைப் பெற்றுக் கொண்டுவிட்டான். அநாதைச் சிறுமிக்குத் தெய்வம் துணையிருந்து பெற்றோரிடம் சேர்த்துக் காத்தது. பிரிந்த பிதாவும் புத்திரியும் ஒன்று கூடினர். யாவும் அவன் அருள்!

ஜப்பானுடைய ஊக்கம்.

ஒவ்வொரு மனிதனும் தன் பொருட்டும், தன்னுடைய தேசத்தோடு தன் ஜாதியின் பொருட்டும், பொதுவாய் உலகத்தின் பொருட்டும் சிலவற்றைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். ஜப்பானியர் பெரிய ஜாதியாகு முன்னமே, மேற்குறித்த மூன்றுவிதக் கடமைகளையும் நன்றாய் அறிந்துவிட்டார்கள். மேனாடுகளிலிருந்து ஜப்பான் கற்றுகொண்ட லௌகிகக் கல்வியின் விஷயங்களெல்லாம் ஜப்பானில் அனுஷ்டானத்துக்கு வருமுன் மேனாட்டுக் குறிகளில்லாமல் ஜப்பானுக்கே உரியவையாகச் செய்யப்பட்டன. கீழ்த்திசையின் ஆத்மஞானமும், மேற்றிசையின் லௌகீக சாஸ்திரஞானமும் ஜப்பானில் ஒற்றுமைப்பட்டுக் கலந்திருக்கின்றன. உபநிஷத்துகளில் போதிக்கப்படும் 'ஏகத்வம்' ஜப்பானில் நன்றாய் அறியப்பட்டிருக்கிறது. எழுதப்படிக்கத் தெரியாதவர் ஜப்பானில் இல்லை. ஒவ்வொரு மனிதனும் தான் ராஜ்யத்தில் அவசியமானவனென்று நினைக்கிறான். இந்த உணர்ச்சிதான் ஒரு ஜாதிக்கு ஜீவாதாரமானது. "ஜாதி அபிமானம் முதலில்; பிறகே குடும்ப அபிமானம்" என்பதான ஒரே கொள்கையை ஜப்பானியர்கள் மனதில் கொண்டிருக்கிறார்கள்.

பத்திராசிரியரும் பாகவதரும்.

புதுப் பத்திராசிரியர்:—நாங்கள் ஆரம்பித்துள்ள இந்தப் பத்திரிகைக்குத் தாங்கள் வியாசங்கள் தர வேண்டும். தங்களுக்கென்றே இந்த மலை வாழைப்பழம் கொண்டு வந்தேன். எங்கள் பத்திரிகையை எல்லோரும் வெகுவாய்ச் சிலாகிக்கிறார்கள்.



பழய பத்திராசிரியர்:—சிலாகித்துப் பேசுகிற பெரிய மனிதர்களெல்லாம் பத்திரிகைக்குச் சந்தா கொடுத்து விட்டார்களா?

புதுப் பத்திராசிரியர்:—நேரில் சிலாகிக்கிற பெரியவர்கள் பணம் கொடுப்பதில்லை. வெகு தூரத்தில் சிலாகிக்கிற சாமான்யர்களே ஏஜண்டுகளிடமிருந்து விலை கொடுத்து வாங்கி ஆதரிக்கிறார்கள்.

ஃ

அப்புசாமி:—அதோ ரயிலுக்குப் போகிறாரே, அவர் விவாகத்தை வெறுத்தவர். ஆனால், உலக ஆசை அவருக்கு எவ்வளவு இருக்கிறதென்று அவர் தூக்கிச் செல்லுகிற மூட்டைகளே சொல்லும். ஊராரிடம் எல்லாம் இனிக்கப் பேசி இனமாகவே சுரண்டிவிடுவதில் சமர்த்தர்.



பொன்னுசாமி:—அடே யப்பா! வலது கைக்குள்ளே மடிசஞ்சிப்பை, கையிலேயே டிரங்குபெட்டி. இடது கைக்குள் இன்னொரு மூட்டை, கையிலே கூஜா சொம்புகள்! தலையிலே இன்னொரு டிரங்குபெட்டி! அடபாவமே! இரண்டணாவுக்கு ஒரு வண்டி வைத்துக்கொள்கிறது தானே! இவ்வளவு மூட்டைகளைத் தூக்கித் தாங்குகிறவர் ஒரு பெண்ணைச் சுலபமாகத் தூக்கிக்கொள்ளலாமே?

அப்புசாமி:—ஒரு பெண்ணையல்ல, இரண்டு பெண்களையும் அவர் தூக்கித் தழுவக்கூடியவர். ஆனால், தன்னை வேதாந்தியென்று சொல்லிக்கொண்டு பாகவத கோஷ்டியில் சேர்ந்து வரும்படி சம்பாதிக்க முடியாதேயென்பதுதான் அவர் கவலை. அதனால் தான் இந்த விவாக வெறுப்பு நாடகம் நடத்துகிறார்.

"எங்களின் வாழ்க்கை மிக்க ரம்மியமானது. என் நாயகனுக்காக வீட்டை எவ்விதத்திலும் சௌக்கியமானதாகவும், சந்தோஷமுள்ளதாகவும் செய்வதே எனது இடைவிடாத நோக்கம்."

“ அமிர்த குணபோதினி ”

ஸ்ரீமுக ஸம்வத்திய கார்த்திகை மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
				[க்கு, சிவராத்திரி, சதுர்தசிதிதி.
அ-சி	16	1	வியா	சசி-47-10. ஸ்வா-50-14, கரிநாள், முடவன் முழு
சி	17	2	வெ	●-39-7, விசா-43-58.
சி	18	3	சனி	பிர-30-29, அநு 37-12, மார்க்கசிரசுத்தம் திரிநேத்
				ரிணீ கௌரீவிரதம்.
ம-அ	19	4	ஞா	துவி-21-43, கேட்-30-17, திதிதுவயம்.
சி-உ	20	5	திங்	திரி-13-12, மூல-23-45, சதுர்த்திதிதி.
சி-பி	21	விருச்சிக (5—29) 6	செ	சது-5-18, உப-53-4, பூரா-17-58, அவமா.
அ-சி	22	7	புத	ஷஷ்-52-55, உரா-13-12, ஷஷ்டி விரதம் சாபாய
சி	23	8	வியா	ஸப்-48-48, ஶ்ரூவ-9-44. [னம் 43-28.
சி	24	9	வெ	அஷ்-46-11, அவி-7-44.
அ-ம	25	10	சனி	நவ-45-2, சத-7-12, கரிநாள்.
சி-அ	26	11	ஞா	தச-45-11, பூட்-8-4.
சி	27	12	திங்	ஏகா-46-33, உட்-10-12, கைசிக ஏகாதசி.
சி	28	13	செ	துவா-49-3, ரே-13-27, மத்வியகண்ட துவாதசி.
ம சி	29	14	புத	திர-52-24, அசு-17-38, ஹநுமத்ஜயந்தி.
சி-ம	30	15	வியா	சசி-56-41. பர-22-44, கிருத்திகாவிரதம்.
சி-ம	1	16	வெ	○ 60-0, கிரு-28-34, விஷ்ணு ஸர்வாலய தீபம்.
அ-சி	2	17	சனி	○ 1-41, ரோ-35-7, கரிநாள்.
சி	3	18	ஞா	பிர-7-28, மிரு-42-14, மார்க்கசிரபகுளம்.
சி-அ	4	19	திங்	துவி-13-45, ஆரு-49-49.
சி	5	20	செ	திரி-20-24, புந-57-33, அதிதி.
சி	டிசம்பர் 6	21	புத	சது-27-3, பூச-60-0, சதுர்த்திதிதி.
அ-சி	7	22	வியா	பஞ்-33-14, பூச-5-2,
ம	8	23	வெ	ஷஷ்-38-27. ஆயி-11-49
அ-சி	9	24	சனி	ஸப்-42-20, மக-17-26.
சி-அ	10	25	ஞா	அஷ்-44-17. பூர-21-25, காலபைரவாஷ்டமி.
சி	11	26	திங்	நவ-44-2, உத்-23-23. திருக்கழுக்குன்றம் சங்கு அபிஷேகம்.
சி	12	27	செ	தச-41-38, ஹஸ்-23-17,
சி	13	28	புத	ஏகா-37-6, சித்-21-4, சர்வைகாதசி.
அ-சி	14	29	வியா	துவா-30-45, ஸ்வா 16-59, பிரதோஷம்.

ரா	15உ-க்கு ராசி		
சனி சுக்			கேது
குஜ	ரவி	புத	குரு

“ அமிர்த குணபோதினி ” பிரஸ், 158 A, பிராட்வே, சென்னை—1933.